ஆசிரியர், மாணவர்களின் சுயஆக்கங்களை
மேம்படுத்துவதற்காக வெளியிடப்படும்

இராமஒளி

(இதழ் 01)

2013

நூலக அபிவிருத்திக்குழு,
யா/இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்

இராம ஒளி

சஞ்சிகை :- இராம ஒளி

வெளியீடு :- நூலக அபிவிருத்திக்குழு யா/ இராமநாதன் கல்லூரி

மருதனார்மடம்.

பதிப்பு :- அக்டோபர் 2013

இதழாசிரியர் :- திருமதி கா. உதயகுமாரன்
(நூலக உதவியாளர்)

பக்கங்கள் :- 102

பதிப்பகம் :- லது டிஜிற்ரல்

Tittle :- Rama oli

Published :- Library Union J/Ramanathan School Maruthanarmadam.

Published on :- October 2013

Editor :- Mrs. K. Uthayakumaran
(Library Assistant)

Pages :- 102

Printers :- Lathu Digital

நூலக அபிவிருத்திக்குழு

தலைவர் :- திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை (அதிபர்)

செயலாளர் :- திருமதி காஞ்சனமாலா உதயகுமாரன் (நூலகஉதவியாளர்)

பொருளாளர் :- திருமதி நந்தினி சிவராஜன் (பிரதி அதிபர்)

உறுப்பினர்கள் :- திருமதி சந்திரஹீ (பகுதித்தலைவர் தரம் 1-5)

திருமதி சுகுணா சீனிவசகம் (பகுதித்தலைவர் தரம் 6-8)

திருமதி பகீரதி கேசவன் (பகுதித்தலைவர் 9-11)

திருமதி சுலோசனா யோகராசா (பகுதித்தலைவர் உயர்தரம்)

திருமதி கோணேஸ்வரி இராமச்சந்திரன்

திருமதி மகாலட்சுமி ஜெயநாதன்

திருமதி பா ஈஸ்வரன் (S D C) செயலாளர்

திரு சி. சிவகுமார் (பா. அபிவிருத்திச் சங்கம்)செயலாளர்

திருமதி ப. ஜெயராசா (பழையமாணவர் சங்கம்)செயலாளர்

செல்வி வர்த்திகா வரதராஜன் (மாணவ தலைவர்)

செல்வி பவித்திரா சசிசிதானந்தன் (மாணவ தலைவர்)

இராமநாதன் கல்லூரி பாடசாலை விபரம்

1) கல்லூரியின் பெயர்	:- யா/இராமநதன் கல்லூரி மருதனார்மடம்
2) கல்லூரியின் ஆரம்பம்	:- 1913
3) கல்லூரியின் அதிபரின் பெயர்	:- திருமதி கமலராணி கிருஸ்ணபிள்ளை
4) பாடசாலையின் தரம்	:- I A B
5) இலங்கை அதிபர் சேவை	:- தரம் 2I
6) பாடசாலை குறியீட்டு இல	:- 11297
7) பாடசாலை I.D No	:- 1010001
8) பாடசாலையின் பரீட்சை இல	:- 09167
9) மாகாணம்	:- வடமாகாணம்
10) மாவட்டம்	:- யாழ்ப்பாணம்
11) வலயம்	:- வலிகாமம்
12) கோட்டம்	:- உடுவில்
13) பிரதேசசெயலகம்	:- வலிதெற்கு
14) கிராம சேவையாளர் பிரிவு	:- J/190
15) பாடசாலை முகவரி	:- கே.கே.எஸ் வீதி, மருதனார்மடம், சுன்னாகம்.
16) பாடசாலை தொலைபேசி இல	:- 021 224 1762
17) மின் அஞ்சல் முகவரி	:- Chu ramanathan@gmail.com
18) ஆசிரியர் எண்ணிக்கை	:- 55
19) மாணவர்தொகை	:- 920

இதழாசிரியரின் இதயத்திலிருந்து

திருமதி. கா. உதயகுமரான்
(Dip. in.Lib.Sc)
நூலக உதவியாளர்
ய/இராமநாதன்கல்லூரி

சேர் பொன் இராமநாதனின் இவ் நூற்றாண்டு காலத்தில் இராமஒளி எனும் சஞ்சிகை உங்கள் கரங்களில் தவழ்வதையிட்டு நான் மிகவும் பூரிப்படைகின்றேன். தகவல்கள், தகவல் மையங்களின் வளர்ச்சி என்பன பரிணமித்துக் கொண்டு செல்லும் இன்றைய காலப் பகுதியில் வாசிப்பு தேடல்கள் எழுத்தாக்கங்கள் என்பன மிகவும் அருகிவருகின்றது. அரசியல் தொடங்கி அறிவியல் வரை ஒவ்வொரு துறையிலும் அவ்வப் போது பல புதிய சொற்கள் உருவாகிக் கொண்டே வருகிறது நாம் தொடர்ந்து வாசித்தால் தான் அவற்றை உரிய வேளையில் அறிந்து கொள்ளலாம். இன்றய சமுதாயம் வாசித்து என்ன ஆகப் போகிறது? அவ்வப் போது இணையத்தைப் பார்த்தல் போதுமானது என்று கூறுவதை தவிர்த்து உள்ளூர் தகவல்களில் இருந்து உலகத் தகவல்கள் வரை நாம் தேடிக்கற்க வேண்டிய தேவை எமக்குள்ளது.

அத் தேடல்களையும் சுய ஆக்கங்களையும் வெளிக்கொண்டு வரும் முகமாகவே ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கங்களை தாங்கி இச்சஞ்சிகையினை வெளியிடுவதற்கு நூலக அபிவிருத்திக்குழு முடிவெடுத்து செயற்பட்டது.மாணவர்களிடையே நாம் ஆக்கங்களை பெற்றுக் கொள்ளுவதில் முழுமையான வெற்றியைக் கண்டோம்.

இராம ஒளியை ஏற்றிவைப்பதற்கு பலவித ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி எம்மை நல்வழிப்படுத்திய அதிபர் அவர்கட்கும் என்னோடு தோளோடுதோள் நின்று உழைத்த நூலக அபிவித்திக்குழு உறுப்பினர்களுக்கும் மலர் சிறக்க ஆக்கங்களைத்தந்த ஆசிரியர் மாணவர்களுக்கும் மலருக்கான ஆசியுரைகளையும் வாழ்த்துரைகளையும் வழங்கி கௌரவித்த கல்வித்துறைசார் அறிஞர்களுக்கும் எமது உள்ளம் கனித்த நன்றிகளை தெரிவித்து மகிழ்கின்றே.ன்

மலர் வெளிருவதற்கு நிதி உதவியை விளம்பரங்கள் மூலம் வழங்கிய அன்பர்களுக்கும் மலரினை சிறப்புற அச்சிட்டுத்தந்த பதிப்பகத்தினருக்கும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நூலகஅபிவிருத்திக்குழு சார்பில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்ற வார்ததை மிகவும் உன்னதமானது. மாணவர்கள் நூல்களைத் தேடிக்கற்றுக் கொள்ள வேண்டும். புகழ்பூத்த இராமநாதன் கல்லூரியில் நூலக அபிவிருத்திக்குழு உருவாக்கப்பட்டு சிறப்பாக இயங்குவது அறிந்து மகிழ்வடைகிறேன். நூலக அபிவிருத்திக்குழு மாணவர்கள், ஆசிரியர்களின் சுய ஆக்கங்களைத் தொகுத்து நூலாக வெளியிடுவது மிகவும் பாராட்டுக்குரிய விடயம். மாணவர்களின் சிந்தனைக்கு களம் அமைத்துக் கொடுத்த அதிபர், நூலகர் பாராட்டுக் குரியவர்கள். நூல்நிலையங்கள் நவீனமயப்படுத்தல் அவசியமாகும். நவீன இலத்திரனியற்கருவிகள் நூலகத்தில் இன்று முக்கிய பங்கு வகிக்கத் தொடங்கிவிட்டது. எனவே நவீன உலகுக்கு பொருத்தப்பாடாக நூலகங்களை மாற்றல்அவசியம். இராமநாதன் கல்லூரி நூலகமும் பரமேஸ்வராக் கல்லூரி நூலகமும் மிகச் சிறந்த நூல்களைக் கொண்ட நூலகங்களாக விளங்குகின. இந்திய இராணுவம் இராமநாதன் கல்லூரியில் முகாமிட்ட காலத்தில் நூலகம் மிகவும் பாதிக்கப்பட்டதை பலரும் அறிவர். நூலக மன்றம், நூல்நிலைய வளர்ச்சிகளிலும், மாணவரது சுய ஆக்கத்தை வளர்க்கும் முயற்சியிலும் காட்டும் உன்னத அக்கறை தொடர இறையருளை வேண்டி ஆசிகூறி அமைகின்றேன்.

"யாவர்க்குமாம் பிறர்க்கொரு இன்னுரை தானே"

அதிபரின் வாழ்த்துச் செய்தி

திருமதி. க. கிருஸ்ணபிள்ளை
அதிபர்
யா/இராமநாதன்கல்லூரி

மனித சமூகத்தின் தொடர்பாடற் துறையை வளர்த்துச் செல்லும் மொழியானது இரண்டு முக்கிய அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றில் ஒன்று எழுதுவது. மற்றையது வாசிப்பது. இவ்விரண்டும் ஒரு மொழியின் இரு கண்கள் போன்றன.

ஒருவர் வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்வது முக்கியமாகும். அது அவனது சிந்தனைச் சக்தியை வளர்த்துக் கொள்ள மிகவும் உதவியாக இருக்கும். இன்றைய காலகட்டத்தில் மாணவர்களிடையேயான வாசிப்புப் பழக்கவழக்கம் மிக அருகி வருகின்றது. அதனை நிவர்த்தி செய்ய நூலகங்கள் பெரிதும் துணை புரிகின்றன. வாசிப்பதனால் மனிதன் பூரணம் அடைகின்றான். என்பதற்கிணங்க. ஒவ்வொரு மாணவனும் மிகச்சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து வாசித்து எதிர்கால வாழ்கையைப் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும்.

எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவை யொட்டி நூலக வாரத்தில் வெளியிடப்படும் சஞ்சிகையானது கல்லூரி மாணவர்களிடையேயும் ஆசிரியர்களிடையேயும் விழிப்புணர்வூட்டும் வகையில் இடம் பெறுவதை மதிப்பிடக் கூடியதாக உள்ளது. எதிர் காலத்தில் மாணவர்களின் படைப்பாக்க வெளிப்பாடுகளுக்கு கூடிய வாய்ப்புக்களை வழங்குதலும் அதே வேளை மாணவர்கள் அதிக பங்களிப்புக்களை ஆர்வத்துடன் வழங்குதலும் பயனுறுதியான வெளியீட்டுக்குக் களமமைப்பதாக அமையும்

நூற்றாண்டு விழா காலப்பகுதியில் தடம் பதித்து இதழ் வெளிவருதற்கு ஆர்வத்துடன் செயற்பட்டுவரும் இதழ் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன். எதிர்காலத்தில் கற்றல் வள நிலையத்தின் (நூலகம்) செயற்பாடுகள் மேலும் பல்கிப் பெருகி வளமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதற்கு வழிசமைக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

வாழ்த்துச் செய்தி

முத்து இராதாகிருஸ்ணன்
மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர்
(பொது நிர்வாகம்)
மாகாணக்கல்வித்திணைக்களம்
வடமாகாணம்

மனிதன் ஏனைய விலங்குகளின் உயிரினங்களிலிருந்து வேறுபடுவது அவனது அனுபவ கிலாகிப்பாலும் படைப்பாற்றலினாலும் ஆகும். படைப்பாற்றல் விலங்குகள் உயிரினங்களிலும் உண்டு .தமது வாழ்வாதாரத் தேவைகளுக்கும் சந்ததி விருத்திக்கும் என கூடுகள் புற்றுகள் வாழ்விடங்கள் என பலவற்றை அவை வியக்கவைக்கும் வகையில் சிருஸ்டிக்கின்றன. ஆனாலும் அந்த சிருஸ்டியை அவை கிலாகிக்கும் .வல்லமை கொண்டவையல்ல. அல்லது அந்த விலாசிப்பு எம்மால் விளங்கிக்கொள்ள முடிந்தவையல்ல. ஆயினும் மனிதனே தனது படைப்பை விலாசிக்கவும் மகிழவும் பகிரவும் இயலக்கூடிய பகுத்தறிவு கொண்டவனாகின்றான்.

அனுபவ கிலாகிப்பு என்பது படைப்பாற்றலை வெளிப்படுத்துவது மாத்திரமல்ல அறிவு பூர்வமான விடையப்பகிர்வாகவும் கருதப்படுகின்றது .இங்கு தான் மனிதனின் உயர்வான தன்மை வெளிப்படுகின்றது. பேற்றுக்கு அப்பால் தொடர்ச்சியாகப் பேணக்கூடிய வகையில் தொடர்ந்து வருபவர்களுக்கும் பகிரக்கூடியவகையில் நூல்களை உருவாக்கினான். எனவே நூல்கள் மனிதனின் உயர்வான தன்மைக்கு சான்றிதழ் ஆயின. பேசவும் எழுதவும் வாசிக்கவும் இரசிக்கவும் என அவனது படைப்பாற்றலும் கிலாகிப்பும் மெருகூட்டப்பட்டது. மிகநீண்டகாலத் தொடர்ச்சியால் இந்த முயற்சி இன்று வாழ்வின் ஒரு அங்கமாக கலாசாரமாக வடிவெடுத்தது இந்த வகையில் வாசிப்பு என்பது வாழ்வின் அனுபவங்கள் அறிவை அறிந்து கொள்ள கற்றுக்கொள்ள வழியாகின்றது. நூல்கள் அறிவுச் சுரங்கங்களாகவும் பெட்டகங்களாகவும் மாறின. இந்த மாற்றம் எத்தகைய தொழில்நுட்ப மாற்றங்கள் வந்தாலும் மாறப்போவதில்லை. பார்த்தல், வாசித்தல், புலன்நுகர்தல் என்பவை மனிதனுள்ளவும் இருந்தவையாகும்.

வாசிப்பு கட்புலனுக்கூடாக எழுத்துக்களுக்குப் பின்னால் இருக்கும் விடையங்களை கற்பனைக்கிட்டுச் செல்கின்றது. அறிந்து கொள்ள உதவுகின்றது நல்ல வாசிப்பு என்பது மனிதனின் கற்பனையை சிறக்கவைக்கும், கற்பனை அனுபவம் என்பது படைப்பாற்றலை ஏற்படுத்தும் எனவே படைப்பாற்றலுக்கு நல்ல வாசிப்பு அடிப்படையாகின்றது.

மாணவர்கள் வாசிப்பதன் மூலம் கற்பனையை வளமுடையதாக்கி படைப்பாற்றலுள்ள மனிதர்களாகவும் நல்விழுமியங்களை பேணக்கூடிய நற்பிரஜைகளாகவும் வரமுடியும் காலமுள்ளவரை மனித வாழ்வை ஒழுங்படுத்தக்கூடிய சாத்தியமான நல்ல இலக்கியங்கள் நூல்கள் தமிழில் பெருகிக்கிடக்கின்றன. அவை மாணவர்களால் பயன்படுத்தப்படவேண்டும்.

முத்து இராதகிருஸ்ணன் இத்தகைய ஒரு கைங்கரியத்தில் "இராம ஒளி" நூல் ஈடுபடவுள்ளதை மகிழ்வுடன் வரவேற்று ஆசிநல்கின்றேன் வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்.

வாழ்த்துச் செய்தி



பொ. ரவிச்சந்திரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)
வலிகாமம்.

யா/இராமநாதன் கல்லூரியின் அபிவிருத்திக்குழுவினர் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு "இராம ஒளி" சஞ்சிகையினை வெளியிடுவதையிட்டு பேருவகை அடைகின்றோம் .

"வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்" என்கின்ற போதிலும் இன்றையகாலகட்டத்திலே வாசிப்பு என்கின்ற உன்னதமான செயற்பாடு எமது மத்தியில் மிக அருகிவருகின்றது. இச்சஞ்சிகை மூலம் மாணவர்களது எழுத்தாற்றல் அதிகரிக்கச் செய்வதோடு வாசிக்கவேண்டுமென்கின்ற ஆரவத்தினையும் மாணவர் மத்தியில் ஏற்படுத்தவேண்டும்.

ஆசிரியர்களதும் மாணவர்களதும் இணைந்த செயற்பாடக இச்சஞ்சிகை இந்த வாசிப்பு மாதத்திலே முகிழ்த்து நிற்கின்றமை வாசிப்பின் மகத்துவத்தினை பறைசாற்றும் செயற்பாடாக அமைந்துள்ளது. என்பதுடன் மிகவும் வரவேற்கத்தக்கதென்றாகும். பலரது சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுத்து அவற்றினை வெளிக்கொணர்ந்து அச்சேற்றி ஏணையோரது சிந்தைகளுக்கும் எடுத்துச்செல்லும் ஊடகமாக இராம ஒளி வடிவெடுத்துள்ளது

கற்றல் செயற்பாடுகள் மட்டுமன்றி ஏணையதுறைகளிலும் மாணவர்களுக்குள்ள ஆர்வத்திற்கு வித்திடும் ஒரு உண்ணதமான இந்தச்சேவையினை இராமநாதன் கல்லூரிச்சமூகம் மேற்கொள்வதையிட்டு மகிழ்வடைவதுடன் பராட்டுதல்களையும் வலகக்கல்வி அலுவலகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சஞ்சிகையானது தனது சேவையினை இத்தோடு நிறுத்தாது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்பதே எமது பெரு விருப்பாகும். மாணவர்களைப் பூரண மனிதர்களாக்குவதற்கு "இராம ஒளி" என்றுமே தனது ஒளியை வாரி வழங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துச் செய்தி

திருமதி. நந்தினி சிவராஜன்
பிரதி அதிபர்
ய/இராமநாதன் கல்லூரி

எமது பாடசாலை நூலக மன்றம் "இராம ஒளி என்னும் இதழை வெளியிடுவதில் எமது பாடசாலை பெருமிதம் அடைகின்றது. நூலகம் என்றும் நிறை குடமாகப் பேணப்பட வேண்டும். மனிதனாக பிறந்த ஒவ்வொரு மானிடனும் தன் அறிவை வளர்த்து தன்னைச் சூழ்ந்தவர்களின் அறிவையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாப்பதற்கு நூலகம் ஓர் வழிகாட்டியாக விளங்கவேண்டும் ஒருவன் எவ்வளவு நூல்களையும் வாசித்து தன் அறிவை வளர்க்கின்றானோ அந்தளவுக்கு அவனிடம் பண்பாடு மிளிரும் அவனது அறிவு தெளிவடையும் எனவே பாடசாலைகளில் மட்டுமல்ல சமூகத்திலும் நூலகத்தின் பயன்பாடு அதிகரிக்குமெனில் சமூகம் பண்பாடுள்ள சமூகமாகத்திகழும் என்பதில் ஐயமில்லை.

கல்லூரிக் கீதம்

இராகம் - காம்போதி **தாளம் - ஆதி**

மணிபரந்த மாகடலே மாலுருவ மாயிடினல்
அணிகிளரு மவனிதயத் தாமரைகா ணம்மானை
அணிகிளரு மலனிகயத் தாமரையிற் றிரு வெழுந்து
பணிகொள்ளும் பொன்னிலங்கைப் பண்பிநுகா ணம்மானை
பண்பிதுநேர் பொன்னிலங்கைப் போற்றுதுங்கா ணம்மானை

பொன்னிலங்கைத் திருநுதலாய்ப் பொலிவதுசீர் யாழ்ப்பாணம்
என்றுபல ரேத்துவது மியல்பேகா ணம்மானை
என்றுபல ரேத்துநுதற் கெழிற்திலக மாய்விளங்கும்
பொன்றாத பொன்ராம நாதனிடமம்மானை
பொன்ராம நாதன்றன் கல்லூரி யம்மானை

இராகம் - பூபாளம் **தாளம் - ரூபகம்**

அரிபடர்ந்த மதர்க்கண்ணா ரரியயனாங்காணாத
விரிமலர்ச்சே வடிகானும் வியைப்புடைத்திக் கல்லூரி

இராகம் - பெ...லி

பண்மிழற்றும் பாவையர்கள் பரமணது பதம்பாடி
விண்களிக்கச் செயும் சீர்த்தி விரகுடைத்திக் கல்லூரி

இராகம் - கல்யாணி

திங்கள் சேர் வான்முகத்தார் திருநீற்றுத் தேசுடனே
மங்களஞ் சேர் வாழ்வுபயில் மாண்புடைத்திக் கல்லூரி

இராகம் - ஆனந்தபைரவி

பொன் ஜ்வர்த்த மேனியர்கள் ஜ்வக்கொய்து பரமனுக்குப்
பண்மாலை யணிவிக்கும் பாங்குடைத்திக் கல்லூரி

இராகம் - பெஹராக்

தித்தித்த தேன்மொழியார் நீங்கரும்பிற் சுவை மிகுந்த
முத்தமிழின் பயன்றினைக்கும் மகிழ்வுடைத்திக் கல்லூரி

இராகம் - கேதார கௌரி

இஞ்சுக்வாய்க் கன்னியர் சங்கீத நயம் பலவிசைத்து
விஞ்சையர் போல் வீணை பயில் வியப்புடைத்திக் கல்லூரி

உள்ளடக்கம்

பக்கம்

1. கவிதை

- ஆலயம் செல்வோம்..... 01
- வீட்டில் வளர்ப்போம் 01
- பள்ளிச்சிறுவர் நாம் 01
- குவாக் குவாக் 02
- படையப்பா 02
- அறிவாயா நீ 03
- தாய் அன்பே மேலானது 03
- எனக்குப் பிடித்திருக்கின்றன 04
- நிலையான தோல்வியில்லை 04
- கல்வி 05
- நூலகம் 05
- சவாலை வெற்றி கொள்வோம் 06
- வாழ்வில் வெற்றி 06
- பள்ளிக்கூடம் 07
- பள்ளிப்பருவம் 07
- வெற்றியை நோக்கி 08
- முயன்று பார் 08

2. கதைகள்

- தெய்வம் 09

- மகிழ்ச்சியான எனது பாடசாலை முதல் நாள் 09
- தன்வினை தன்னைச்சுடும் 10
- நம்பிக்கை 11
- திருந்திய மனம் 12

3. கட்டுரைகள்

- எனது செல்லப்பிராணி கிளி 13
- பத்திரிகை பார்த்தல் 13
- சுவர்க்கமும் நகரமும் 14
- மகாத்மா காந்தி 14
- வாழையின் சுயசரிதை 15
- ஆறுமுகநாவலர் 15
- கணினி 16
- சுற்றாடலைப் பேணுவோம் 17
- ஒலிம்பிக் விளையாட்டு 17
- நான் கண்ட மாலைக்காட்சி 17
- சூரியன் 18
- தேசியக்கொடி மூலம் குறிப்பிடப்படும் விடயங்கள்..... 18
- டெங்கு 19

- சேர் பொன் இராமநாதன் அவர்களின் சமயப்பணி 19
- என் அப்பா 20
- தகவல் பரிமாற்றம் 21

- கல்வியின் சிறப்பு 21
- சேர் பொன் அருணாச்சலம் 22
- பிளேட்டோவின் அரசியல் சிந்தனைகள் 22
- சைவக்கிரியைகள் 24
- சுருதி வாத்தியங்கள் 26
- மாறிவரும் தற்கால மாணவ சமுதாயம் 27
- கூடைப்பந்தாட்டம் 28
- இசுறுமுனிய சிற்பங்கள் 29
- இலங்கையின் பிரதான கூத்துக்கலை வடிவங்கள் 31
- ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் 32
- கண்டிய நடனம் 33
- அரபிய அரசி ஸ்ரீமதி பாலசரஸ்வதி 35
- சினிமா பற்றிய சில தகவல்கள் 37
- தீர்த்தங்கள் 38
- பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை 39

4. பொதுவானவை

- இலங்கையின் பிரதான உற்பத்திகளும் காணப்படும் நிலையங்களும் ... 41
- உலக அதிசயங்களில் ஒன்..... 41
- ஐந்தின் மகிமை 42
- இலங்கையின் கல்வித்துறை சார்பான சில விடயங்கள் 42

5. விடுகதைகளும் பழமொழிகளும்..... 43

6. English

- My Ambition 47
- A visit to a farm 47
- Importance of English 48
- vehicle 49
- My flower garden 50
- Friendship 51

7. ஆசிரியர்களின் ஆக்கங்கள்

- நூலகம் ஓர் பார்வை 51
- பாடசாலை நூலகமும் அதன் வளர்ச்சிப்பாதையும் 54
- சேர்.பொன்.இராமநாதன் 57
- சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் இலங்கை இந்தியதொடர்பு 60
- புதிய கல்விச்சீர்திருத்தத்தின் ஆரம்ப கல்வியின் போக்கு 65
- வாசிக்காத நாட்கள் எல்லாம் சுவாசிக்காத நாட்களே 67
- நெஞ்சை நெகிழ வைக்கும் நெடுநல்வாடை ஒரு பார்வை 70
- விசேடகல்வியின் அவசியம் 75
- விசேடகல்வித்துறை வளர்ச்சியில் யா/இராமநாதன் கல்லூரி ... 77
- இன்றைய தொலைக்காட்சி நாடகங்களும் கல்விச்சமூகமும்..... 80
- தென்னாசிய வலய ஒத்துழைப்பு அமைப்பு 82
- ஓவியக்கலை ஒரு பார்வை 84

- விரதங்களும் மனித வாழ்வும் 86
- சைவசமயம் சம்மந்தமான சில தகவல்கள் 87
- அறிந்தவிடயமும் அறியாத செய்தியும் 90
- நனோ தொழில்நுட்பம் 92
- சாரணியத்தின் மேன்மை 95
- கர்நாடக சங்கீதத்தின் தற்கால நிலை 96
- இசை வழங்கும் கற்றல் விசை 98
- Nano Technology 100
- Books are the best friends 101
- சிங்களம் 102

எங்கள் அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை
(S.L.P.S 2-1, BA PGDE)

பிரதி அதிபர் திருமதி நந்தினி சிவராஜன்
(B.A.. Dip.in Edu,SL. TSI)

நூலக அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள்

கவிதைகள்

ஆலயம் செல்வோம்

சின்ன சின்ன பழமெடுத்து
சிங்காரமாய் மாலை கட்டி
சின்ன ஊருக் கூடையிலே
தேங்காய் பழம் எடுத்துக்கிட்டு
கோயிலுக்குச் சென்றிடலாம்
அர்ச்சனையும் செய்திடலாம்
வேண்டிய வரம் பெற்று
வீடு வந்து சேர்ந்திடலாம்.

வி. சிந்துரி
தரம் - 01[A]

வீட்டில் வளர்ப்போம்



வீட்டில் கோழி வளர்ப்போம்
கோழி முட்டை தரும்
வீட்டில் மாடு வளர்ப்போம்
பசு பால் தரும்
வீட்டில் ஆடு வளர்ப்போம்
ஆடு பால் தரும்
மூன்றும் இறைச்சி தரும்
முயலும் இறைச்சி தரும்
எல்லாம் பசளை தரும்

ரா. ரித்திஷ்
தரம் - 01[B]

பள்ளிச் சிறுவர் நாம்

துள்ளித் திரியும் மான்களைப் போலத்
துடிப்புடன் ஓடி ஆடி மகிழ்ந்திடும்.
பள்ளிக்கூடச் சிறுவர் நாங்கள்
பாரில் நாமோர் தனி இனம் ஆவோம்.

நாளை இந்த உலகம் யாவும்
நமது கையில் என்பதை உணர்வோம்
மூளை தன்னை வளர்ப்பதனோடு
மனத்தில் நல்ல சிந்தனை வளர்ப்போம்

அன்பும் அறிவும் ஆற்றலும்
பண்பும் பலமும் பணிவும் வளர்த்து
இன்னும் அந்த எதிர் காலத்தினை
இன்றே ஆக்கும் சிறுவர் நாங்கள்.



ர.ரஜீனா
தரம் - 03[B]

குவாக் குவாக்.....

குவாக் குவாக் வாத்துப் பார்
குட்டையான வாத்துப் பார்
குளத்து நீரில் நீந்திடும்
குவாக் குவாக் வாத்துப் பார்.

பட்டையான அலகு பார்
புழுச்சி பிடிக்கும் அழகு பார்
தட்டையான கால்களால்
தத்தி நடக்கும் வாத்துப் பார்.

சேற்றுநீரில் புழுச்சியை
சேறுங்கலந்து பிடிக்குதே
சேற்றை முற்றும் நீக்கியே
புழுச்சியை மட்டும் உண்ணுதே

நல்லதொன்றை எங்ஙனும்
நாடும் போதில் நாமுமே
நல்ல வாத்தைப் போலவே
வகை பிரிக்கப் பழகுவோம்.

ர.றதுஷாந்
தரம் - 04[A]

படையப்பா

புதியதோர் சரித்திரம் படையப்பா
பழுசல்கள் யாவையும் உடையப்பா

அறிவென்னும் தீபத்தை ஏற்றப்பா
அன்னையைத் தந்தையைப் போற்றப்பா

அகிலத்தில் வறுமையை மாற்றப்பா
அன்பாய் வாழப் பழகப்பா

ஆசானை என்றும் மதியப்பா
ஆனந்தம் ஆனந்தம் ஆடப்பா

பாடசாலைக்கு ஒழுங்காய் செல்லப்பா
பாடத்தை நன்றாய் படியப்பா

புத்தியாய் என்றும் வாழப்பா
புதயதோர் சரித்திரம் படையப்பா

ர.ஷானுகா
தரம் - 04[B]

அறிவாயா நீ

தாய் தன்னை வருத்தித் தான் உன்னைப் பெற்றாள்.

தந்தை தன்னை வருத்தித்தான் உன்னை வளர்த்தார்.

அண்ணன் தான் பட்டவற்றை எண்ணித்தான் உனக்கு அறிவுரை விடுத்தான்.

ஆசிரியர் நற் சமுதாயத்திற்காகத் தான் உன்னை உருவாக்க எண்ணுகிறார்.

அவற்றை எல்லாம் நீ அறிவாயா?

வ.கஜானி
தரம் - 05[B]

தாய் அன்பே மேலானது

பத்துமாதம் எம்மைச்
சுமந்து - நீபட்டபாடு
யார்தான் அறியமாட்டார்
பாரினிலே நாம் உதிக்க
நீ பட்ட துன்பம்
யார்தான் அறியமாட்டார்.

எமக்கு நோய் என்றால்
அன்னையே உன்
உயிர் போன மாதிரி
வாடிவிடுவாய்
நாம் பசியால் வாடினால்
உன்பசியையே மறந்த விடுவாய்

உன்னை வாட்டி வதக்கி
எம்மை வளர்த்தவளே
உனது அன்புக்கு என்னதான்
எம்மை நல்லவழியில்
கூட்டிச் செல்கிறது.
தாய் அன்பு
இல்லை என்றால் - நாமெல்லாம்
பாரினிலே இருந்தென்ன பயன்
தாய் அன்புக்கு ஈடேயில்லை
ஏன் இந்த உலகமே தூசுதானே

வி.சரணா
தரம் - 06 [A]

எனக்குப் பிடித்திருக்கின்றதே

எனக்குப் பிடித்திருக்கின்றதே
எனது கல்லூரியை
எனது கல்லூரி சூழலை
எனது கல்லூரித் தந்தையை
எனது அதிபரை
எனது ஆசானை
எனது பாடத்தை
எனது விடுதியை
எனக்குப் பிடித்தவற்றை
அமைத்தே கொடுத்து
இறையடி சேர்ந்த
எமது கல்லூரித்தந்தை
இராமநாதனுக்கு
எனது பலகோடி
நன்றிகளே!

வி. ரியூசியா
தரம் - 06 A

நிலையான தோல்வியில்லை

செல்வந்தனே
நீ ஏழைகள் ஆயிரம்
பேருக்கு எஜமானாக
இருக்கலாம் ஈ எறும்பு
ஒன்றுக்காவது எஜமானாக முடியுமோ?

உன் பத்து ரூபாய் நோட்டுக்கு
பத்துப் பேர் வரலாம்
பத்தாயிரம் நீட்டு
பட்டாம் பழீச்சி வருமா?

தோட்டத்துப் பழீவில் என்றாலும்
உன்வருகையைக் கண்டு
வண்டு எழுந்திருக்குமா?

நீ ஒரு தேன் கூட்டை
தொடு நீ செல்வனாயிற்றே
என்று ஒரு தேனியாவது உன்னை
முத்தமிட்டுப் பார்க்குமா?

நீயும் உன் பணமும் பெறுவது
நிலையான வெற்றியுமல்ல
நாங்களும் எங்கள்
ஏழ்மையும் பெறுவது
நிலையான தோல்வியுமல்ல.

பேரா. வக்கசலா
தரம் - 06 B

கல்வி

கடலாலும் காற்றாலும்
சண்டையாலும் சச்சரவாலும்
நெருப்பாலும் திருடர்களாலும்
சதியாலும் சூழ்ச்சியாலும்
அணுஆயுதங்களினாலும்
பிரிக்க முடியாத செல்வம் கல்வி.

செல்வங்களுள் சிறந்த செல்வம்
அள்ளி அள்ளி கொடுக்க
குறைவடையாத செல்வம்
பகைவரால் திருடமுடியாத செல்வம்
சிறந்த நிறைவான செல்வம் கல்வி.

நுண்பொருளான செல்வம்
அறிவியல் சார் செல்வம்
அறிவுசார் செல்வம்
மனிதனைப் பூரணத்துவமாக்கும்
இறைவனின் விசாலமான செல்வம் கல்வி.

ம.கொன்சிகா
தரம் - 08 A

நூலகம்

மதி கெட்டுத் திரியும் நம்மவர் மத்தியில்
அறிவு புகட்டிய நம் பெரியவர் பலரினாலும்
பேணிப் பாதுகாத்து வரும் நூல்கள் பல நிறைந்த
அறிவுக் கோயிலாம் நம் நூலகம் மட்டுமே
நூலகம் மட்டுமே பாரின் இசைகளுக்கு
சிக்கித் தத்தளிக்கும் மாந்தர் அனைவருக்கும்
அறிவு என்னும் பயிரை வளர்க்க
ஊற்றெடுத்துப் பெருகி நிற்கும் இனிய ஆலயமே
நம் நூலகம் என்றும் எம்மை வளர்க்கும்.
நூலகம் தன்னை என்றும் போற்றி - நாம்
உயர்ந்திடுவோம்

J.Dilaxshana
Year- 08 A

சவாலை வெற்றி கொள்வோம்

வாழ்க்கை என்னும் ஓடத்திலே
நீந்திக் கொண்டிருக்கும்
மனிதர்களாகிய நாம்
எம் வாழ்வில் எத்தனையோ
துன்பங்கள், கஸ்டங்கள் வந்து சேரலாம்
எம் கல்வியைத் தொடர்ந்து
நீடித்துக் கொள்வதற்கு
இருக்கும் காலங்கள், நேரங்கள்
நிமிசங்கள் எம் கல்வியின் முயற்சியைப்
பரிசீலித்துப் பார்த்துக் கொண்டேயிருக்கும்.
மனிதனாய் இந்தப் பூவுலகிலே
பாதத்தை வைத்த நாம் - எத்தனையோ
இடர்பாடுகளைச் சந்திப்போம்.
அவை யாவற்றிற்கும் தன்னம்பிக்கையுடன்
முகங்கொடுத்து சவாலை வெற்றி கொள்வோம்
நேற்று என்பது உடைந்த பானை
நாளை என்பது மதிலில் பூனை
இன்று என்பது கையில் வீணை
மனிதா நீ இன்று என்பதை நம்பு
நாளை என்பதை நம்பாதே
உனக்கு நேரிடும் சவால்களை
நேரிட்டு வெற்றி கொள்ள வேண்டும்.
உன்னை உணர்ந்தால்.
உயர்வு தானே வரும்.

செ. ஜஷ்மி
தரம் - 08 C

வாழ்வில் வெற்றி



குறைகிற நிலா மறுபடியும் வளரும்
மறைகிற சூரியன் மறுபடியும் உதிக்கும்
ஒளிர்கின்ற மின்மினி திடீரென அணையும்
மிளிர்கின்ற வெள்ளி அழகை இரசிக்கும்
விழுகின்ற விதை செடியாய் முளைக்கும்
அழுகிற மழை புல்லாய் சிரிக்கும்
சிதைகிற மலை சிலையென ஆகும்
உடைகின்ற அணு சக்தியை வீசும்

ஓடுகிற மூங்கில் குழலாய் மாறும்.
முடிகிற நாள் மறுபடியும் விடியும்.
சோகங்கள் எல்லாம் வேகங்கள் ஆகும்.
வேகங்கள் எல்லாம் விவேகங்கள் ஆகும்.
கனவுகள் எல்லாம் கற்பனைகள் அல்ல
நினைவுகள் எல்லாம் நியமங்கள் அல்ல
தடைகள் எல்லாம் முடிவுகள் அல்ல
இடங்கள் எல்லாம் இறுதிகள் அல்ல.

இ. நிசாந்தினி
தரம் - 09 C

வழியில் வருகின்ற பள்ளம் தாண்டி
விழியில் வருகின்ற கண்ணீர் தாங்கி
சோர்ந்திடாமலே தொடர்ந்து சென்றால்
அடைந்திடலாம் வாழ்வில் வெற்றி

பள்ளிக் கூடம்

கருவில் நான் இருக்கும் போது - அன்னையவளின்
வயிறே என் பள்ளிக் கூடம்.
பிறப்பின் பொழுது உலகமே
என் பள்ளிக் கூடம்.

வளர்ப்பின் போது தாயவளின்
தந்தையவரின் அன்புதான் என்பள்ளிக் கூடம்.
உலக விடயங்களை அறிந்திட
நான் விரைந்து சென்ற எனது
ஆசான்கள் இருக்குமிடமே
எனது பள்ளிக்கூடம்.

பசுமை நினைவு தாங்கிவரும்
அலசல்கள் கூட என்பள்ளிக் கூடம்.
பல்முக அறிமுகங்களும் என்பள்ளிக்கூடம்.

காதல் கொள்ளும் போது
இதயமே என்பள்ளிக்கூடம்.
புனிதமான நட்பின் உறவுகளும்
என்பள்ளிக் கூடம்.

வாழநினைக்கும் பொழுது நான்
பட்ட அனுபவங்களும் கூட
என்பள்ளிக்கூடம்.

Pomithira
Year - 10 A

பள்ளிப் பருவம்

சிட்டுக் குருவி போல் சிறகடிக்கும் பருவம்
குழப்படி என்னும் கடலில் நீச்சலடிக்கும் பருவம்
நட்பு என்னும் பெரும் சொத்தைச் சம்பாதிக்கும் பருவம்
கல்வி என்னும் இனிய தேனை அருந்தும் பருவம்.
பரீட்சைகள் என்னும் சவால்களை எழுத ஆரம்பிக்கும் பருவம்.
ஆசான் என்னும் தெய்வத்தின் ஆசிபெறும் பருவம்.
நம் கலைகளைக் களஞ்சியமாக மாற்றியமைக்கும் பருவம்.
வாழ்வின் சவால்களைப் பற்றி அறிய வைக்கும் பருவம்.
மொத்தத்தில் நம்மை யார் என்று உலகிற்கு உணர்த்தி நிற்கும் பருவம்.
சென்றுவிட்டால் மீண்டும் கிடைக்க முடியாப்பருவம்.

அ. தேனுஷா
A/L 2014
வர்த்தகப்பிரிவு.

வெற்றியை நோக்கி (கவிதை)

மாறாத மனிதமாகி விட்டோம்
மண்ணில் வாழ்வுதனை வாழ வந்தோம்
சவால் என்னும் போர்க்களத்தில்
போட்டியிட்டுப் போராட வேண்டாமா?

சத்தியமும் தர்மமும் தலைகுனிந்தது - மாறாக
அநியாயமும் அகம்பாவமும் தலைதூக்கியது
அது தான் நாம் வாழும் காலம்.
அதுவும் ஓர் சவால் தான் உன் வாழ்வில்

கிழக்கே உதிக்கும் கதிரவன் ஒருநாள்
மேற்கே உதித்து விட்டால்
இயற்கையின் நியதியே மாறிவிடும் அல்லவா?
அதுபோல் நீயும் போராடாது தளர்ந்து விட்டால்?

உன்னைச் சுமந்தவள் தாய் - ஆனால்
வாழ்க்கையைச் சுமப்பதோ நீ
தடைகளைத் தாண்டி வீறுகொண்டு எழுந்திடு
வெற்றிகளும் சாதனைகளும் உன்பக்கமே

கற்றகல்வி உனக்கு உற்ற நண்பனாய் இருக்க
நெஞ்சினிலே துணிவிருக்க வஞ்சியே வலிஎதற்கு?
சவால் மிக்க உலகில் நீயும் ஓர் சாதனையாளனாய்
பாரினிலே வாழ மனதார வாழ்த்துகின்றேன்.

பு. வைஸ்ணவி
A/L கலை 2014

முயன்று பார்.

முயன்று பார் மனிதா நீ முன்னேற
துணிந்து பார் மனிதா நீ வளம்பெற
தோல்வியைக் கண்டு நீ அஞ்சாதே
தூரத்தில் நீ துவண்டு போகாதே

முயற்சியை நீ கருத்திற் கொள்
இகழ்ச்சியை மிக தூரத்தில் வீசிவிடு
சுறுசுறுப்பாய் வாழ கற்றுக் கொள்
சோம்பேறித் தனத்தை நீக்கிக் கொள்

நேரத்தை வீண்விரயமாக்காதே
நெடுநேரம் நீ அசந்து போகாதே
நம்பிக்கை என்பது படிக்கல்.
அதனை வெற்றிக்கல்லாக மாற்று

என்னால் முன்னேற முடியும்
என்னால் எதனையும் துணிந்து செய்யமுடியும்
எண்ணுவதை மனதில் வைத்துக் கொள்
நினைப்பதையே நிலையாக்கிக் கொள்

இயற்கையை அதிகம் நேசி
இறைவனை மனதிற் சுவாசி
எதனையும் துணிந்து யோசி
துணிவதையே முன்னேற்றம் என நினை.

உனது கைகளிலே தான் முன்னேற்றம்
முயற்சியை போராட்டம் எனக் கொள்
வெற்றியை அதன் குறிக்கோள் என நினை
அதுவே உனது உண்மை நிலை.

இ. ஜெயராணி
A/L 2014

கதைகள்

தெய்வம்

மனிதனை கடவுள் படைத்து அவனிடம் இரண்டு கூடைகளைத் தந்தார். பிறர் செய்யும் தவறுகளை ஒரு கூடையிலும் உன்னுடைய தவறுகளை இன்னொரு கூடையிலும் வைத்துக் கொள் என்றார். இரண்டு கூடைகளையும் ஒரு சமயத்தில் நான் எப்படிச் சுமப்பேன் என்று கேட்டான் இவன். இரண்டு கூடைகளையும் தனித்தனிக் கயிற்றால் கட்டிவிடுகிறேன் ஒரு கூடை உன் முன்பக்கம் இருக்கும். மறுகூடை உன் பின்புறம் இருக்குமாறு தொங்க விடுகிறேன் என்றவர் அப்படியே செய்தார். பிறர் தவறுகள் இருக்கும் கூடை மனிதனின் முன்பக்கம் இருந்தது. எப்பொழுதும் அவன் பார்வையில் பட்டுக் கொண்டே இருக்கின்றது. தான் செய்யும் தவறுகளின் கூடை முதுகுப்பக்கம் இருந்தது மிகவும் முயற்சி செய்து பார்த்தால் தான் அந்தத்தவறுகள் தெரிந்தது. இதனால் மனிதனுக்கு மற்றவர் குற்றங்கள் உடனே தெரிகின்றன. தன் குற்றங்கள் எளிதில் தெரிவதில்லை.

மகிழ்ச்சியான எனது பாடசாலை முதல்நாள்

பாடசாலைக்கு எப்போது போவோம் என எதிர்பார்த்திருந்த அந்த இனிய நாளை வாழ்வில் என்றுமே மறக்க முடியாது. பாடசாலை என்றால் எப்படி எனும் கேள்விக்கு விடைதந்த அந்த இனிய நாள் என்றும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். பாலர் நாம் நமது முன்பள்ளியை விட்டு வெளியேறி முன்பள்ளி நண்பர்களைப் பிரிந்து புதிதாக வரும் நண்பர்களையும் ஆசிரியர்களையும் இறுகப் பற்றிக் கொண்டோம்.

புதிய மாணவர்களாகிய எம்மை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மாலை அணிவித்துச் சிறப்புற வரவேற்றுக் கால்கோள் விழாவினை நடாத்திப் பாடசாலை என்றால் எப்படி இருக்க வேண்டும். நாம் எப்படி இருக்வேண்டும் என்ற அறிவுரைகளைக் கூறி கலைநிகழ்ச்சிகளுடன் எம் எல்லோரையும் இனிதே வகுப்பறைக்கு அழைத்துச் சென்றனர்.

சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாகச் சர்க்கரைப் பொங்கல் பொங்கி எமது பாரம்பரிய நிகழ்வான தைப் பொங்கலையும் எமது பாடசாலைச் சமுகம் அறிமுகமாக்கியது. எம்மை எமது வகுப்பாசிரியர் அன்போடு வரவேற்றுத் தம்மை எமக்கு அறிமுகமாக்கினார். எம்முடன் வந்த சில மாணவர்கள் புது இடமாகையால் அழுது தமது அம்மாக்களுடன் வீடு செல்லப் போவதாக அழுதவண்ணம் இருந்தனர். இந்நாளை என்றுமே மறக்கமுடியாது.

ர.டக்சலா
தரம்5

தன்வினை தன்னைச் சுடும்

சந்திரன் - நாதன் என்பவர்கள் இருவரும் நல்ல நண்பர்கள். இருவரும் ஒரே வேலை செய்பவர்கள். இவர்கள் தோட்டம் செய்பவர்கள் சந்திரனுக்கு நல்ல காய்கறிகள் நல்ல இலாபம் கிடைக்கும். நாதனின் காய்கறிகள் சரியில்லாதவை ஒருவரும் விரும்பி வாங்குவதில்லை அதனால் நாதனுக்கு சந்திரனுடன் வெறுப்பு ஏற்பட்டது. சந்திரனை எப்படியாவது ஒழித்துக் கட்ட வேண்டும் என்று நினைத்தான். அவனுடைய ஊரில் கண்ணன் என்பவனும் இருந்தான். அவனுக்கு யாராவது காசு கொடுத்தால் சொல்வதெல்லாம் செய்து முடிப்பான். நாதன் கண்ணனை ஒருநாள் யோசித்தான். அதற்கு அவன் தான் சரியான ஆள் என்று கண்ணனை அழைத்தான். நான் உனக்கு எவ்வளவு வேண்டுமோ தருகிறேன். எப்படியாவது சந்திரனை நீ அழித்துவிட வேண்டுமென்று கூறினான். அதைக் கேட்ட கண்ணன் அப்படியா? என்னிடம் சொல்லிவிட்டீர்கள் அல்லவா! இனி நடக்கவேண்டியதைப் பாருங்கள் என்று கூறி கண்ணன் நாதனிடம் அழகான பூ ஒன்றை கொடுத்தான். இதைச் சந்திரன் வீட்டுக் கூரையில் வைத்துவிடுங்கள் எனக்கு அடையாளமாக இருக்கட்டும் என்று சொன்னான். நாதனும் அதை வாங்கி அன்று இரவு சந்திரனின் வீட்டுக் கூரையில் வைத்துவிட்டான். நல்ல நிலவு நாதனின் மனைவி வெளியேவந்தாள் சந்திரனின் வீட்டைப் பார்த்தாள் என்ன எனது கணவன் வைத்திருந்த பூ அங்கு எப்படி என்று பொறாமை கொண்டாள். தன்னுடைய வீட்டுக் கூரையில் வைத்தால் அழகாக இருக்கும் என்று நினைத்து அதை எடுத்து வந்து தன்னுடைய வீட்டுக் கூரையில் வைத்து விட்டு நித்திரைக்குச் சென்றுவிட்டாள். இது நாதனுக்கு தெரியாது. நள்ளிரவு 12.00ஆகியது நிலவு மெல்ல நகர்ந்து இருட்டானது அந்த நேரம் கண்ணன் நன்றாகக் குடித்துவிட்டு வாயில் பாட்டு ஒரு கையில் தீப்பெட்டியும், ஒரு கையில் பெற்றோலுடன் அங்கு வந்தான். தான் கொடுத்த அந்த அழகான பூவைக் கண்டான். அது தான் சந்திரன் வீடு என நினைத்து பெற்றோலை தெளித்து வீட்டைக் கொழுத்திவிட்டு ஓடிவிட்டான். வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. நாதனும் மனைவியும் தங்களை யாராவது காப்பாற்றுங்கள் என்று கதறினார்கள் அவலக் குரல் கேட்ட சந்திரன் தன்னுடைய மனைவி பிள்ளைகளுடன் எழும்பி ஓடி வந்தான்.

தன்னுடைய நண்பனைக் காப்பாற்ற வேண்டுமென்று தீயை அணைத்து அவர்களைக் காப்பாற்றினான். வெளியே வந்த நாதனும் அவனது மனைவியும் தங்கள் பொறாமை காரணத்தால் தங்களுக்கே ஆபத்து என்று நினைத்து வெட்கத்தில் தலை குனிந்தார்கள்.

நல்ல நண்பர்கள் தங்கள் உயிரையும் கொடுத்து காப்பாற்றுவார்கள் அப்படி எல்லோரும் பொறாமை இல்லாது நல்ல மனிதர்களாக வாழ வேண்டும்.

வே. சஞ்சிகா
3A

நம்பிக்கை

செல்வியின் நண்பன் குமார். இருவரும் பத்தாவது வகுப்பில் படிக்கின்றார்கள். செல்வி படிப்பில் படுசுட்டி எப்போதும் வகுப்பில் முதலாவதாக வருபவள். ஆனால் அவனுடைய நண்பனாக இருந்தாலும் குமார் படிப்பில் மந்தம். இருபதாவது ராங் தான் எடுப்பான். சரியாக வகுப்பிற்கு வரமாட்டான். கடைசி வாங்கில் உட்கார்ந்து கொண்டு ஏதாவது பேசி சிரித்து விளையாடிக் கொண்டிருப்பான். குமாருக்கு செல்வி எவ்வளவு புத்திமதி சொன்னாலும் கேட்க மாட்டான் "விடு செல்வி எனக்கு படிப்பு வராது" என்பான் "அப்படி எல்லாம் சொல்லாதே குமார்" படிப்பு மனுசர்களைப் பார்த்து வராது. எல்லோராலும் படிக்க முடியும் நல்லா படிச்சு முன்னுக்கு வரமுடியும் நீ ஏன் உன்னையே குறைவாக எண்ணுகிறாய். நம்பிக்கையோடு படி" என்றாள். இன்னும் எப்படி நல்லா படிக்கிறது?

"முதல்ல முதல் மேசைக்கு வந்து உட்காரு கடைசி மேசையில் உட்கார்ந்தால் படிப்பில் கவனம் போகாது ஏதாவது கலாட்டா செய்யத்தான் தோணும் முன்னாடி உட்கார்ந்தால் தான் ரீச்சரோட பயம் இருக்கும்..." ஆனால் அதற்கு அப்புறம் கூட குமார் மாறவில்லை. படிப்பை கவனமாக கொள்ளவில்லை.

பத்தாம் வகுப்பு மாணவர் பருவத்தில் முக்கியமானது என்பதையும் மறந்தான் பரீட்சையும் வந்தது. ஏதோ எழுதினான் ரிசல்ட் நாளும் வந்தது. எல்லோரையும் போல் குமாரும் ஆவலுடன் பார்த்தான். அவர் சித்தியடைவில்லை. அவனுடன் விளையாடிய சிலர் பிறகு ஒழுங்காகப் படித்து சித்தியடைந்து விட்டார்கள். சிலர் சித்தியடையவில்லை. ஆனால் அவர்களுக்கு அதைப்பற்றிய கவலை இல்லை அதை சாதாரணமாக எடுத்துக் கொண்டார்கள். செல்வி எதிர்பாரத்ததைப் போலவே சித்தியடைந்து விட்டாள். இதுவரை விளையாட்டாகவே படிப்பையும் வாழ்க்கையையும் கருதியகுமார் அதிர்ச்சி அடைந்தான். வீட்டிற்கு எப்படிச் செல்வது? சென்றாலும் என்ன சொல்வது? புரியவில்லை என்கூட படிச்சவங்கள எல்லாம் +1 படிக்கப் போறாங்க நான் மட்டும் வீட்டில் இருப்பதா? இனி எனக்கு வாழ்வு அவ்வளவுதானா? சோகம், இருள் பயந்தான் என் எதிர்காலம்.....? பலவித யோசனைகள் மற்றவர்கள் சிரிப்புச் சத்தத்தில் அவனுடைய அழுகைக்குரல் வெளியே கேட்கவில்லை.

திடீரென அந்த ஆபத்தான முடிவை எடுத்தான் குமார். தன்னால் இனி யாருக்கு என்ன இலாபம்? தனக்கு இனி எதிர்காலம் இல்லை என்று தவறாக நினைத்த குமார் தன் வாழ்வை முடித்துக் கொள்ள எண்ணினான் ரெயில்வே தண்டவாள்தை நோக்கிச் சென்றான். ரெயில் வந்தால் தற்கொலை செய்வதாகத்திட்டம்.

அவன் எதிர்பாராமல் அங்கே வந்த செல்வி அவனைத்தடுத்து நிறுத்தினாள் "குமார் இந்த மாதிரி தவறான செயலைச் செய்யாதே" ரெயிலோட பெயரைக் கெடுக்காதே நான் எத்தனையோ தடவை சொல்லிக் கூட கேட்கலே இப்பவாவது கேள்

"என்னை என்ன செய்யச் சொல்லுறாய்....?

"இப்போதைக்கு எதுவும் செய்யாதே போதும் பேப்பரில் வந்த ரிசல்டை பார்த்து இந்த தப்பான முடிவுக்கு வந்திட்டாய் ஒரு வேளை அந்த ரிசல்ட் தப்பாக வந்திட்டால் நீ சித்தியடைந்திருந்தால் இரண்டு நாட்கள் கழித்து தெரிய வந்தால்

போன உயிர் திரும்பி வருமா? உங்கள் வீட்டாருக்கு எவ்வளவு கஸ்டம் அவமானம் ஏற்படும் அதை எல்லாம் எப்படிப் போக்க முடியும். உன் உயிர்தான் அவர்களுக்கு முக்கியம். நீ சித்தியடைவது ஏல்லாம் அப்புறம் தான். ஒரு நிமிடம் தடுமாறினான் குமார். எவ்வளவு உண்மைகளை இவ்வளவு தெளிவாக சொல்கின்றாள் செல்வி. இரண்டு நாள் பொறுத்து ரிசல்ட் பார்க்க முடியும். கொஞ்சம் பொறுத்து சித்திபெற பண்ண முடியாதா...? ஒரு வேளை சித்தியடையவில்லை என்றாலும் மறுபடி பரீட்சை எழுதி சித்தியடைய முடியாதா...? ஒரு வருடம் போனால் ஒரு உயிர் போனா கிடைக்குமா?

என்னால் பாஸ் பண்ண முடியுமா...? நான் இருபதாவது ராங் எடுத்தவன்.

நேரங்களுக்கும் சாதனைகளுக்கும் சம்பந்தமில்லை. முதல் ராங்க் எடுத்தவர்கள்தான் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று அவசியம் இல்லை. படிப்பைத் தவிர வாழ்க்கையில் ஜெயிக்க எத்தனையோ தளங்கள் இருக்கின்றன. விளையாட்டு, கலை, இலக்கியம் உனக்கு எதில் முடியுதோ அதில முன்னுக்கு வா. ஆனால் உன்மேல் நீ நம்பிக்கை வை மனம் தளராதே உன்னாலே நிச்சயம் சாதிக்க முடியும். என்னால் முடியும் போது ஏன் உன்னால் முடியாது? மனுஷனுக்கு குறைந்த பட்ச கல்வி மிக அவசியம் அதற்காக முயற்சி பண்ணு. அடுத்த முறை நீ ஜெயிக்கிறாய். நானே உனக்கு பாடங்களைச் சொல்லித் தறான் என்னோட வாழ்த்துக்கள்.

செல்வியின் வார்த்தைகள் குமாரின் மனதுக்குள் புதிய நம்பிக்கையை ஊட்டின. அவன் உற்சாகமாக ஆவலுடன் திரும்பினான்

பா. சசிகலா
தரம் - 08 C

திருந்திய மனம்

ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பறையில் மதுசாவும் நிதுஷாவும் கல்வி கற்று வந்தனர். மதுஷாவின் தந்தையோ ஒரு தொழிலதிபர் ஆன்ல் ஆணவம் குடியிருந்தது. நிதுஷாவோ ஏழைக்குடும்பத்தில் பிறந்தவள் . அவளிடம் பொறுமை அதிகம் காணப்பட்டது. மதுஷனா நிதுஷா இருவரும் நன்றாக கல்வி கற்பவர்கள் . வகுப்பில் முதலிடத்திற்கு இருவருமே போட்டி போடுபவர்கள் எப்போதும் மதுஷன்தான் முதலிடம் எடுப்பாள். ஒன்றிரண்டு புள்ளிகளால் சிலவேளை நிதுஷா இரண்டாம் இடத்தைப் பெறுவாள் என்றாலும் அவளிடம் முதலிடம் எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்த போதும் அவள் மதுஷா மீது பொறாமை கொள்ளவில்லை.

ஒரு நாள் பாடசாலை இடைவேளையின் போது நிதுஷா படித்துக் கொண்டிருந்தாள். சக வகுப்பு நண்பிகள் கூடிக் கும்மாளம் இட்டுக் கொண்டிருந்த போது மதுஷா நிதுஷாவைப் பார்த்து "அவள் என்ன பெரிதாய் படிக்கிறாள்? முதலிடம் பெற வேண்டும் என்ற நினைப்போ? என்னை விட உனக்கு படிப்பில்லை. பணமில்லை" என அவளைக் கேலி செய்யவும் இதைக் கேட்ட அவள் நண்பிகள் எல்லாரும் சிரித்தார்கள். தன்னை ஏழை என்று சுட்டிக்காட்டியதால் நிதுஷாவின் மனம் மிகவும் வேதனைப்பட்டது. இதைச்சவாலாக கொண்டு படித்தாள்.

அடுத்த தவணைப் பரீட்சையில் அவள் சிறந்த புள்ளிகளுடன் அவள் வகுப்பில் முதலிடத்தைப் பிடித்தாள். மதுஷாவோ அதிர்ச்சியடைந்தாள் காரணம் அவள் வகுப்பில் 4ம் இடத்தைப் பெற்றிருந்தாள். அன்றிலிருந்து அவள் நிதுஷாவுடன் பேசவே இல்லை எப்போதும் நிதுஷாவைத் திட்டுவாள்

பாடசாலையில் சிறுவர் வட்டமும், சிறுவர் பகுதியும்

ATLANTA HOSPITAL

No:54, Uduvil Road, Maruthanarmadam

Dr.T.Shethirabalan (MD)

0212242299

ATLANTA வைத்தியசாலையில் 24 மணித்தியால சேவை நடைபெறுகின்றது. இங்கு Scan, ECG வசதிகள் உண்டு. சகல இரத்த, சல பரிசோதனைகள் எமது ஆய்வு கூடத்திலே செய்து கொடுக்கப்படும். வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளலாம். சகல மருந்து வகைகளையும் எமது வைத்தியசாலை மருந்தகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தரம் 9ல் மாகாணமட்டப் பரீட்சையில் நிதுஷா சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தாள் நிதுஷா உயர்தர பாடசாலை ஒன்றில் இலவசமாக கல்வி கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவள் பிரியாவிடை கொடுக்கும் நாள் நிதுஷா அனைத்து ஆசிரியர்களிடமும் விடை பெற்று வகுப்பிற்கு வந்தாள். அவளை நோக்கி ஓடி வந்த மதுசா என்னை மன்னித்து விடு நிதுஷா என் பொறாமையினாலும் அகங்காரத்தினாலும் தான் எனக்குப் படிக்க முடியவில்லை. என் கூரிய வார்த்தைகளால் உன் மனம் புண்பட்டிருக்கும் என்னை மன்னித்து விடு என அழ ஆரம்பித்தாள் "இங்கே பார் மதுசா அழாதே என ஆறுதல் வார்த்தைகள் பல கூறி நீ திருந்தியதே மகிழ்ச்சி திருக்குறளில் திருவள்ளுவர் "தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதேநாவினால் சுட்டவடு" என தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். சரி இனியாவது அடுத்தவர் மனம் புண்படாமல் நடந்து கொள் எனக் கூறி தன்னுடைய இலட்சியப் பாதையில் மேற் படிப்புக்காகப் பறந்து சென்றாள்.

"பனியுமாம் என்றும் பெருமை சிறுமை
அனியுமாம் தன்னை வியர்ந்து"

(திருவள்ளுவர்)

ஜெ. விருட்சிகா
தரம் - 09 A

கட்டுரைகள்

எனது செல்லப்பிராணி கிளி

கிளி பேசும்

கிளி பச்சை நிறம்

கிளியின் சொண்டு சிவப்பு

கிளி பழம் தின்னும்

கிளிக்கு இரண்டு கால்கள் உண்டு.



சு. நிலவரசன்
தரம் - 01 A

பத்திரிகை படித்தல்.

- பத்திரிகை படித்தல் நல்ல பழக்கமாகும்.
- பத்திரிகை படிப்பதன் மூலம் பல செய்திகளைநாம் தெரிந்து கொள்ளலாம்.
- பத்திரிகைகள் பல மொழிகளில் வெளிவருகின்றன.
- நாள் தோறும் வெளிவரும் பத்திரிகைகள் தினசரிகள் என அழைக்கப்படும்.
- வாரம் ஒரமுறை வெளிவருவன வாரப்பத்திரிகை ஆகும்.
- இவற்றை விட மாதம் இரு முறை, மாதம் ஒருமுறை வெளிவரும் சஞ்சிகைகளும் உண்டு.
- உலகில் தினந்தோறும் நடைபெறும் சம்பவங்களைப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன.
- பத்திரிகைகள் படிப்பதன் மூலம் நமது அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

உ. அபிலாஷ் தரம் - 03 B

சுவர்க்கமும் நரகமும்.
நபி மொழிகள்.

❊ உங்கள் சுவர்க்கமும் நரகமும் உங்கள் பெற்றோரின் பாதடியில் இருக்கிறது.

❊ அல்லாவின் திருப்தி தந்தையின் திருப்தியில் தங்கியுள்ளது.

❊ யாரேனும் ஒருவர் தங்கள் பெற்றோருக்குப் பணிவிடை புரிந்தால் அவருக்கு ஈருலக நன்மைகள் கிடைக்கும்.

❊ பெற்றோருக்கு உதவுவதால் அவர் ஆயுள் அதிகரிக்கும் உணவில் அபிவிருத்தி ஏற்படும் பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள்.

❊ நீங்கள் ஏதாவது பணி ஒன்றினை ஆரம்பிக்கும் போது அது எத்தகையதாயினும் பெற்றோரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள் நீங்கள் அவர்களுடன் இணக்கமாக இருப்பீர்களாயின் அது உங்களுக்கான சுவர்க்க வாசலை திறந்து வைப்பதற்கான ஓர் அச்சமாக இருக்கும்.

நீ. மஸ்மிதா
தரம் - 03 B

மகாத்மா காந்தி

1) மகாத்மா காந்தி இந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்ற ஊரில் பிறந்தார்.
2) இவர் 1869ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் பிறந்தார்.
3) இவர் உலகம் முழுவதும் அறியப்பட்ட ஒரு மகான் ஆவார்.
4) காந்தியடிகளிற்கு பெற்றோர் இட்ட பெயர் மோகனதாஸ் கரம்சந் காந்தி ஆகும்.
5) காந்தி தனது 13 ஆவது வயதிலே வணிகர் ஒருவரின் மகளான கஸ்தூரியை மணந்தார்.
6) அவரின் தயாரின் நம்பிக்கையே இவரைச் சிறந்த ஆன்மீக வாதியாக்கியது.
7) தென்னாபிரிக்காவிலே காந்தி நிற வெறியின் கொடுமைகளை அனுபவ மூலம் கண்டார்.
8) வெள்ளையர் இந்தியர்களை வெறுப்பதையும். பல உரிமைகள் மறுக்கப்படுவதையும் கண்டு அவற்றை எதிர்த்துப் போராடினார்.
9) இந்தியாவில் சாத்வீக முறையில் உப்புச் சத்தியாக்கிரகம். அந்நிய துணிப்பகிஷ்க்கரிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டு சிறை சென்றார்.
10) காந்தியடிகள் அந்நிய ஆட்சியின் கொடுமையை எதிர்த்து பலமுறை உண்ணாவிரதம் இருந்தார்.
11) இவர் 1947ஆம் ஆண்டு ஆவணி 15 இல் பாரத நாட்டிற்கு விடுதலையைக் கொடுத்தார்.
12) பின்பு 1948ஆம் ஆண்டு தை மாதம் 30ஆம் திகதி கோட்சே என்பனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ச. ரோயல் செமில்டா தரம் - 04B

வாழையின் சுயசரிதை

என் பெயர் வாழை

நான் கதலி இனத்தைச் சேர்ந்தவன்

நான் செழிப்பான செம்மண் தோட்டத்தில் பிறந்தேன்

எனது தோட்டக்காரர் நல்லவர்

அவர் எனக்கு நல்ல பசளை இடுவார்.

தினமும் எனக்கு நீர் பாய்ச்சுவார்

இதனால் நான் செழித்து வளர்ந்தேன்

பசுமையான இலைகளுடன் பத்தடி உயரம் வரை வளர்ந்திருந்தேன்.

பின்னர் பொத்தி ஒன்று பெரிய குலை தள்ளினேன்.

என்ன கொடுமை? இலையும் பொத்தியும் தந்த நான்

குலை யோடு வெட்டிச் சரிக்கப்பட்டேன்.

நான் இறந்தாலும் என் இனம் தொடர்ந்து மக்களுக்கு உதவிக் கொண்டேயிருக்கும்

வாழையடி வாழையாக வளர்ந்து கொண்டே இருப்போம்.

இ. கௌதமன்
தரம் - 03 B

ஆறுமுக நாவலர்

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரில் பிறந்தார். இவரது தந்தையார் பெர் கந்தப்பிள்ளை. தாயார் பெர் சிவகாமி அம்மையார் வாழ்நாள் முழுவதும் பிரம்மச் சாரியாகவே இவர் வாழ்ந்தார். இவர் சைவ வளர்ச்சிக்கும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

இவருக்கு ஆறுமுகப்பிள்ளை, நாவலர், சைவப்பிரகாசகர், சற்குரு, ஐந்தாங்குரவர், நாவலர் பெருமான் எனப் பெயர்கள் உள்ளன. இவர் திருவிளையாடற் புராணத்தை வசனருபமாகச் செய்தருளினார். மேலும் சைவினாவிடைகள், பாலர் பாடங்கள் போலியருட்பா மறுப்பு, வச்சிரதாண்டவம், சுப்பிரபோதம் சைவசமய அநாசாரம் ஆகிய நூல்களை இயற்றினார். இவர் தமது ஐம்பத்தேழாவது வயதில் அதாவது 1889ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

ஜெ. லக்சுஜன்
தரம் - 03 A

கணினி

மனிதனது தேவைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்டதே கணினியாகும். கணினி ஒரு மின்னனுச் சாதனமாகும். அது தானாக இயங்காது. எமது கட்டளைகளுக்கு ஏற்பவே செயற்படும். அது எம்மை ஏமாற்றாது. நம்மைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்காது. அதற்குப் பேராசை கிடையாது. தான் செய்யும் பணிகளை நிறைவாகச் செய்யும். நேரத்தை வீன் விரயம் செய்யாது.

மனிதனுக்குத் துணைபுரியும் கணினி இன்று கல்வித்துறையில் முக்கிய பங்காற்றுகின்றது. கணினியே ஆசிரியராகப் பாடஞ் சொல்லித் தருகின்றது. கணினியே கேள்விகளைக் கேட்கின்றது. விடை தவறாக இருந்தால் விளக்கத்தோடு விடையளிக்கின்றது. நம்முடைய வேகத்திற்குத் தகுந்தபடி மெதுவாகவும், துரிதமாகவும் கற்றுக் கொள்ளக் கணினி உதவுகின்றது.

பரீட்சைப் பெறுபேறுகள் துரிதமாக வெளிவருவதற்குக் கணினி துணைபுரிகின்றது. ஆரம்பக்காலங்களில் கணினிகள் பல்கலைக்கழகங்களிலும் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களிலுமே பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்று கணினி நுழையாத துறைகளே இல்லை.

ஓவியம் வரைதல் இசைமெட்டுக்கள் அமைத்தல் போன்ற மனிதனுக்குரிய செயல்களிற்கூட கணினி தனது திறமையை நிரூபித்து வருகின்றது.

விந்தை புரியும் கணினியின் தோற்றத்திற்குவித்திட்டவர் சார்லஸ் பபேஜ். இவர் கேம்பரிஜ் பல்கலைக்கழகத்தின் கணிதத்துறைப் பேராசிரியராவார். அவரே கணினியின் தந்தை என அழைக்கப்படுகின்றார்.

உலகின் முதலாவது தானியங்கிக் கணினி மாரக் -1 ஆகும். இக்கணினி 1944 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதனை அமெரிக்கக் கடற்படையே முதன் முதலில் பயன்படுத்தியது.

உலகின் முதலாவது இலத்திரனியல் கணினி எனியாக் ஆகும். இக்கணினி 1946ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

முதன் முதலாக விலைக்கு விற்கப்பட்ட கணினி யுனிவோக் ஆகும். இக்கணினி 1951ஆம் ஆண்டு விற்கப்பட்டது. இது எளிதில் கையாளக் கூடியது.

ஆரம்பத்தில் கணினிப் பயன்பாட்டிற்கு எதிர்ப்புக்கள் கிளம்பின. ஏனைய கண்டுபிடிப்புக்களுக்கு ஆரம்பத்தில் இருந்தது போன்ற எதிர்ப்புக்களே இதற்கும் இருந்தன.

கணினி பயன்பாட்டிற்கு வந்தபோது வேலையில்லாப் பிரச்சினை உருவாகும் என கருதினர். ஆனால் இன்று கணினி பலருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றது.

கணினியின் ஒவ்வொரு அசைவையும் மனிதனே நிர்ணயிக்கவேண்டியுள்ளது. ஒவ்வொரு செயலைச் செய்வதற்கும் மனிதன் தெளிவான விளக்கம் கொடுக்கவேண்டியுள்ளது.

டீ. டிலக்சிகா தரம் - 04 B

சுற்றாடலைப் பேணுவோம்

1) எம்மைச் சூழவுள்ள சூழல் சுற்றாடல் எனப்படும்
2) சுற்றாடலைப் பாதுகாப்பது எமது கடமையாகும்
3) சுற்றாடல் மாசடைவதால் எமக்குப் பல தீங்குகள் ஏற்படுகின்றன.
4) சுற்றடல் மாசடைவதால் பல கொடிய நோய்கள் ஏற்படுகின்றன.
5) எமது சுற்றாடலில் குப்பை கூளங்கள் சேராது நாம் சுற்றாடலைப் பாதுகாக்க
வேண்டும்.
6) மண்ணரிப்பு. வெள்ளப் பெருக்குப் போன்றவற்றிலிருந்தும் சுற்றாடலைப் பாதுகாகக் வேண்டும்.
7) தொழிற்சாலைக் கழிவுகள் இரசாயனப் பொருட்கள். பொலித்தீன் என்பன சுற்றாடலில் சேராது சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும்.
8) சுற்றாடலைச் சுத்தமாகப் பேணிப் பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

மு. வினுசியா
தரம் - 05 A

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி

1) ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் கிரேக்க நாடாகும்.
2) அந்நாட்டில் 'ஒலிம்பஸ்" என்ற மலை உள்ளது.
3) அதன் அருகில் ஒலிம்பியா என்ற இடம் உள்ளது.
4) அவ்விடத்தில் முதன்முதலில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.
5) இதனால் அவ்விடத்தில் நடந்த போட்டிகளுக்கு ஒலிம்பிக் போட்டிகள் என்ற பெயர் உண்டாகியது.
6) பழங்கால ஒலிம்பிக் கி.மு 776 இல் தொடங்கியது.
7) எனினும் இது இடையில் 1500 ஆண்டுகாலம் நடைபெறவில்லை.
8) ஒலிம்பிக் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.
9) மீண்டும் கி.பி 1896 இல் இப்போட்டி ஏதென்சில் தொடங்கியது.
10) ஒலிம்பிக் போட்டியின் குறிக்கோள் விரைக உயர்க வலிமை பெறுக என்பனவாகும்

பா. கலைப்பிரியா
தரம் - 05 B

நான் கண்ட மாலைக்காட்சி

1) ஆதவன் மேற்கு வானில் மெல்ல மெல்ல மறையத் தொடங்குகிறான்.
2) மாலை வேளை மேற்குத்திசை செக்கச் சிவந்திருந்தது.
3) பறவைகள் தமது இருப்பிடங்கள் நோக்கிச் செல்கின்றன.
4) பூரீக்கள் எல்லாம் வாடுகின்றன.
5) மக்கள் தங்கள் வேலைத்தலங்களிலிருந்து வீடு திரும்புகின்றனர்.
6) பசுக்கள் தமது வீடுநோக்கிச் செல்கின்றன.

சி. மதுராங்கனி
தரம் - 05 B

சூரியன்

1) சூரியன் உருண்டை வடிவமாக உள்ளது.
2) அது காலையில் கிழக்குத் திசையில் உதிக்கும்.
3) மாலையில் மேற்குத் திசையில் மறையும்.
4) சூரியன் பெரிய கோள்களில் ஒன்று
5) இது நமக்கு வெளிச்சத்தையும் வெப்பத்தையும் தருகிறது.
6) சூரியன் உயிரினங்கள் வாழ உதவுகிறான்.
7) சூரியன் காணப்படும் நேரம் பகல் ஆகும்.
8) சூரியன் உலகுக்கு மழையையும் ஒளியையும் கொடுக்கிறான்.
9) சூரியன் இல்லாவிட்டால் நாம் உயிர்வாழ முடியாது.
10) அதனாலேயே உலக மக்கள் சூரியனைப் போற்றுகின்றனர்.

கு. மதுஜா
தரம் - 05 B

தேசியக்கொடியின் மூலம் குறிப்பிடப்படும் விடயங்கள்.

சிவப்பு நிறம் :- சிங்கள மக்கள்
செம்மஞ்சள் நிறம் :- தமிழ் மக்கள்.
பச்சை :- முஸ்லீம் மக்கள்
வாள் ஏந்திய சிங்கம் :- வீரம்
கொடியைப் பலூரணப்படுத்தும் மஞ்சள் நிறம் :- தேசிய ஒருமைப்பாடு
நான்கு அரசமிலைகள் :- தர்ம உபதேசம் (அன்பு கருணை. மகிழ்ச்சி. பற்றின்மை)

தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கும் சந்தர்ப்பங்கள்.
தேசிய துக்க தினம்
நாட்டின் முக்கிய அரச தலைவர்களின் இறப்பு.

தேசியக் கொடியை உருவாக்க உதவியவர்கள்.
ளூ.று.சு.னு. பண்டாரநாயக்கா. ஜி.ஜி. பொன்னம்பலம். சேர். லலித் ராஜபக்ஷ.
வி.பி. ஜாயா. சேர்.ஜோன் கொத்தலாவ. ஜே.ஆர். ஜெயவர்த்தன. எஸ். நடேசன். கேணல் ஒவ்கோட்

தேசியக் கொடி ஏற்றப்படும் இடங்கள்.
அரச வாசஸ்தலங்கள். அரச திணைக்களங்கள். பாடசாலைகள். வங்கிகள்.
அரச நிறுவனங்கள்.

தேசியக் கொடி ஏற்றப்படும் முக்கிய சந்தர்ப்பங்கள்.
தேசிய தினம். குடியரசு தினம். பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகள்.
தேசிய விழாக்கள். ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்வுகள்.

உ. துஷாலினி
தரம் - 05 B

டெங்கு

1) நுளம்பினால் பரவும் நோய்களில் டெங்கும் ஒன்று
2) டெங்கு நோயை உண்டாக்கும் நுளம்புகள் பகல் நேரங்களிலேயே அதிகமாக மனிதரைத் தாக்குகின்றன.
3) டெங்கு நோயினால் பீடிக்கப்படுவோருக்குக் கடுமையாக காய்ச்சல் ஏற்படும்.
4) அவர்களது தோலில் சிவப்பு நிறப்புள்ளிகள் ஏற்படும்.
5) டெங்கினால் பீடிக்கப்படுவோர் உடனடியாகச் சிகிச்சை பெறவேண்டும்.
6) டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அரசுபல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.
7) வீட்டுச் சுற்றாடலில் இளநீர்க்கோம்பைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள், தகரப்பேணிகள் ஆகியவற்றில் நீர் தேங்குவதால் நுளம்புகள் உற்பத்தியாகின்றன.

8) நுளம்பின் பெருக்கத்தால் டெங்கு பரவுகிறது.
9) டெங்கு நோயை ஒழித்துக்கட்ட நாம் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
10) அழுக்குப் பொருட்கள் சேரவிடாது உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும்.

க. வினிஸ்ரன் தரம் - 05 B

சேர். பொன். இராமநாதன் அவர்களின் சமயப்பணி

சேர்.பொன்.இராமநாதன் சைவப்பெரும் குடிமகன். சைவத்தமிழ் உலகின் நிறைவான இடத்தைப் பெற்றவர். பெரியவர்களினாலும் ஞானிகளினாலும் ஆசீர்வதிக்கப்பெற்றவர். அருட்பரானந்த சுவாமிகளைக் குருவாக பெற்றவர். பிரித்தானியருடைய ஆதிக்கம் நம் நாட்டைச் சீரழித்தது. அந்நிய மோகத்தில் மக்கள் ஈர்க்கப்பட்டனர். வலிந்து மதம் மாற்றப்பட்டனர். சமயப் போட்டிகளும், பூசைகளும் அழிந்தன. சகல வழிகளிலும் சைவத்தமிழ் கலாச்சாரம் பாதிக்கப்பட்டது. மக்களின் அவலங்களைக் கண்ட இராமநாதன் உள்ளங் குமுறினார். நாவலர் வழியில் நின்று சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். மனித வாழ்க்கைக்குக் கல்வி எவ்வளவு அவசியமோ? அவ்வளவு அவசியம் சமயக்கல்வி என்ற கருத்தை முன்னெடுத்தவரும் சேர்.பொன்.இராமநாதன் அதனை நடைமுறைப்படுத்தியவரும் அவரே. இதற்கு சான்றாக விளங்குவது இராமநாதன் கல்லூரியும், அதனோடு இணைந்த ஆலயமும் ஆகும். மேலும் சமய விழுமியங்கள் பேணும் வகையில் அவரால் கட்டப்பட்ட இராமநாதன் கல்லூரியும் அதன் கட்டடங்களும் கட்டட அமைப்புக்களும் வழிபாட்டிற்கென கட்டிய ஆலயமும் வழிபாட்டு விதிமுறைகளும் குருகுலக்கல்வி முறையில் அமைந்த விடுதியும் சைவத் தொண்டுபடு செய்லகளும், பூசை வழிபாட்டு முறைகளும் சிவ சின்னங்களின் இதமும் சைவத்தமிழ் பண்பாடு பேணும் வகையில் மாணவிகள் அணியும் உடை, உணவு இசைப்பயிற்சி என்பன யாவும் சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் கல்வியோடிணைந்த சமயப் பணிகளை எடுத்துக்காட்டுவனவாகும்.

மேலும் சைவ மங்கையர் சபை, சைவச் சிறுவர் பாடசாலை சைவபரிபாலனசபை, சைவ மங்கையர்சபை , சைவாசிரிய கலாசாலை என்பனவும் அவரது சமயப்பணிகளில் அடங்குவனவாகும். ஒரு பெண்ணுக்கு அளிக்கப்படும் கல்வியில் அவளது குடும்பமும், சமூகமும், நாடும் பயனடையும் என்ற அவரது தீர்க்க தரிசனம் நிறைவேறியது. மேலும் கல்வியோடும் சமயப் பணியை முன்னெடுத்ததோடு நில்லாது ஆலயத் திருப் பணிகளையும் , சமயப்பணிகளையும் நிறைவு செய்தார். தந்தையாரால் கட்டிய பொன்னம்பல வானேஸ்வரத்தை கற்றளியாக்கிய பெருமைக்குரியவர். சோழ, பல்லவ,நாயக்க மன்னனின் கலைச்சிறப்பை இக்கோயிலில் காணலாம் இந்தியச் சிற்பிகளை வரவழைத்து 20 இலட்சம் ரூபா செலவில் இக்கோவிலை ஒரு தனிமனிதனாகவே நின்று கட்டி முடித்தார். முழுதும் கருங்கற்களினால் அமைத்த சிற்ப வேலைப்பாடுகளும் கரைதளம் உட்பிரகாரம் யாவும் கருங்கற்களால் அமைந்தமை இவ்வாலயத்தில் நித்தியாக்கினி குண்டமும் நித்தியோற்சவமும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இப்பணியானது சைவத்தமிழ் மக்கள் சைவாசார சீலராய் சைவ ஒழுக்கமுடையவராக வாழ வழிவகுத்தது. சிறந்த பேச்சாளராக விளங்கிய இவர் மதுரைத்தமிழச் சங்க விழாக்கள், சென்னை சித்தாந்த சைவமகாநாடுகள், திருவள்ளுவர் மகாசபை போன்றவற்றுக் கெல்லாம் தலைமை தாங்கி நடத்தியுள்ளார். விவேகானந்தருக்குப் பின் அமெரிக்காவரை சென்று ஞானமுழக்கம் செய்தவர் சேர்.பொன் இராமநாதன் அவர்கள். இவரது ஆத்மீகப் பேச்சினால் கவரப்பட்ட மேல்நாட்டவர் பலர் இவரது சிஸ்யர்களாயினர். இவரது ஆத்மீகச் சொற்பொழிவு மேற்கு நாடுகளிடையே காணப்படும். ஆத்மீகப் பண்பு என்ற ஆங்கில நூலாக வெளிவந்துள்ளது. இவரது இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இந்நேரத்தில் சேர் பொன் இராமநாதன் பணிகளை நினைவு கூறுவதோடு அவர் காட்டிய வழியில் நடப்பது ஒவ்வொருவரினதும் மேலான கடமையாகும்.

வளரட்டும் சைவத்தமிழ்ப்பணி
வாழ்க இராமநாதன் கல்லூரி

மா. தர்சினி
தரம் - 06 A

என் அப்பா

1) எனது அப்பாவின் பெயர் :- திரு.செளந்தராஜன்
2) அவர் ஆசிரியராகத் தொழில் புரிகின்றார்.
3) என்னுடைய அப்பா மிகவும் அன்பானவர்.
4) அவர் அதிக நூல்களை விரும்பி வாசிப்பார்.
5) அவர் தினமும் காலையில் உடற்பயிற்சி செய்வார்.
6) எனக்கு நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லித்தருவார்.
7) எனது அப்பா எனக்கு நல்ல நூல்களை வாங்கித்தருவார்.
8) அவர் மாலை வேளையில் என்னுடன் விளையாடுவார்.
9) எனது அப்பா நான் படிப்பதற்கு உதவி செய்வார்.
10) நான் எனது அப்பாவை மிகவும் நேசிக்கின்றேன்.

செள. கிறிஷ்திகா
தரம் - 06 B

தகவல் பரிமாற்றம்

இன்று உலகில் தகவல் பரிமாற்றம் பெரிதும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.
பண்டைய காலத்தில் தகவல் பரிமாற்றம் பறவைகள் மூலம் நடைபெற்றது.
செய்திகளை எழுதி புறாக்களின் கழுத்தில் கட்டி விட்டார்கள்.
அவை பறந்து சென்று உரிய இடத்தில் அவற்றைச் சேர்ப்பித்தன.
பிற்காலத்தில் தூதுவர்கள் மூலம் செய்திகள் பரிமாறப்பட்டன.
விஞ்ஞான வளர்ச்சியின் பேறாக நவீன கருவிகள் கண்டறியப்பட்டன.
இதன் பயனாகத் தகவல் தந்தி தொலைபேசி என்பவற்றின் மூலம் பரிமாறப்பட்டன.
வானொலி, தொலைக்காட்சி, செல்லிடத் தொலைபேசிகள் என்பனவும் தகவல்களைப் பரிமாறப் பயன்படுத்தின.
கணினி பயன்பாட்டின் பேறாக இக்காலத்தில் இணையம், தொலைநகல் என்பவற்றின் மூலமும் தகவல் பரிமாற்றப்படுகின்றது.
தகவல் பரிமாற்றம் வெகுவேகமாக நிகழ்வதற்கான கருவிகளைக் கண்டறிவதில் விஞ்ஞானிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

ந.துவாசிகா
தரம் - 07 B

கல்வியின் சிறப்பு

மன்னர்க்குத் தன்தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பது மூதாதையார் சொல்லிப் போந்த ஒரு முதுமொழியாகும். கல்வி என்பது தொன்று தொட்டு நிலவி வருகின்ற ஓர் அறிவு ஆகும். இதுவே மனிதனை மேல்நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

கல்வியை வெறுத்து ஒதுக்குபவர்கள் கண்ணிருந்தும் குருடராக இருப்பதற்கு ஒப்பானவர்களாகக் கருதப்படுகின்றது. ஒரு மனிதன் செல்வத்தினால் பெறுகின்ற சிறப்பைக் காட்டிலும் கல்வியினால் பெறுகின்ற சிறப்பு பன்மடங்காகும். இவ்வுலகிலே வாழுகின்ற மக்கள் பல்வேறுபட்ட தொழில்களைச் செய்வதற்கு ஏதுவாக இருப்பது கல்வியே ஆகும் கல்வியின் அடிப்படையில் தான் ஒருவன் நல்லதோர் எதிர்காலத்தை அறிந்து கொள்கிறான். தொழில்கள் பரந்துபட்ட கிளைகளாக இருப்பினும் கூட அத்தனைக்கும் அடிப்படை ஆணிவேர் அறிவென்ற கல்வி என்று சொல்வதில் தப்பேதும் இல்லை.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறும் அறிவு, என்பதை வள்ளுவப் பெருந்தகை கூறியிருந்தார். மணலைத் தோண்டத் தோண்ட நீர் வருவது போன்று கல்வியை மீண்டும், மீண்டும் கற்பதனால் அறிவு பெருகுகின்றது எனக் கூறுகின்றார். கல்வி என்பது தோண்டத் தோண்ட ஊறுகின்ற நீருக்கு ஒப்பானது.

உலகிலுள்ள எல்லா வகையான அழகார்ந்த பொருட்களுக்கும் மேலானது அறிவு என்கின்ற கல்விதான். வெந்தணரால் வெந்து போகக்கூடியதுமில்லை. கள்வரால் கொண்டு போகக்கூடியதும் இல்லை இந்தக் கல்வி. இவ்வாறான கல்வியின் சிறப்பிற்கு முன்னாலே பொன், பொருள் யாவும் மண்டியிட்டு நிற்கின்றன.

கல்வியினால் உயர்ந்தவர் பூரண மனிதர் இவர்கள் கல்வியின் பெருமையை காலம் காலமாக பேணி வருகின்றனர். ஏடுகளாக அரிச்சுவடிகளாக அவை பேணப்படுகின்றன. ஆகவே அவ் உயர்ந்த கல்வியை நாமும் கற்போமாக!

சி. விஜியந்தினி தரம் - 09 B

சேர் பொன்னம்பலம் அருணாசலம்

இந்நாட்டின் கல்வி மேம்பாட்டிற்காகப் பாடுபட்டவர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நம் நாட்டை ஆண்ட பிரித்தானியர் நம்மவருக்கு ஊறு விளைவித்ததுடன் நமது மக்களின் ஜனநாயக சுதந்திரத்தையும் அடக்கி ஒடுக்கினர். இதனை நன்கு அறிந்த நமது தலைவர்கள் இன, மத பேதங்களை மறந்து நமது அரசியல் விடுதலைக்காக ஒன்று திரண்டனர். அப்போராட்டத்தில் வீரம் மிக்கவராகத் திகழ்ந்த ஒருவரே சேர் பொன்னம்பலம் அருணாசலம். யாழ்ப்பாணம் மானிப்பாயில் 1853 ஆம் ஆண்டு பிறந்தார் அவர் அக்காலத்தில் கொழும்பு அக்கடமி என்று அழைக்கப்பட்ட கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்றார். தனது 17ஆவது வயதில் அரச புலமைப் பரிசில் பெற்று கேம் பிரிட்ஜ் பல்கலைக்கழகம் சென்று உயர் கல்வியைத் தொடர்ந்தார். எம்ஏ. என்னும் பட்டம் பெற்று இவர் நாடு திரும்பினார். இந்நாட்டின் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டு, பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவி, சிறந்த எழுத்தாளராக திகழ்ந்தார். இவர் தனது திறமையை நாட்டிற்காக அர்ப்பணித்து விட்டு 1924 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்

பா. தர்ஷனா தரம் - 10 C

பிளேட்டோவின் அரசியல் சிந்தனைகள்.

பிளேட்டோவின் அரசியற் சிந்தனைகளுக்கு ஆதாரமாக அமைந்தது அவருடைய ஆசிரியரான சோக்கிரட்டீசின் கோட்பாடுகளே ஆகும். அறிவுடையோரே ஆளுதல் வேண்டும் என்ற கோட்பாடும், அறிவுடைமையே பண்பும் இன்பமும் ஆகும் என்ற கோட்பாடும் பிளேட்டோவினிடத்து வெகு ஆழமாகப் பதிந்திருந்தன. எனவே அவர் மனித மனம் மிக உயர்வான தலைமை இயல்பைப் பெறக்கூடியது என்று உறுதியாக நம்பி மனதில் அறிவை வளர்த்துப் பின் மனித இயல்பைச் சீர்திருத்தம் செய்தல் வேண்டும் என விரும்பினார். எனவே சிறந்த அறிவு மனித வாழ்க்கை சீரதிருத்தம் பெறுவதற்கு ஒரு வழிகாட்டியாக இருக்கவேண்டுமே ஒழிய அது அதனைப் பெறுபவர் உடைய அதிகாரத்தையும் செல்வத்தையும் பெருக்கிக் கொள்வதற்கு ஒரு கருவியாக இருத்தலாகாது எனக்கருதினார். அவருடைய சிந்தனைகள் கடந்த காலக்கிரேக்க வரலாற்றில் காணப்பட்ட அரசியல் நிகழ்ச்சிகளையும், நிலைகளையும் ஆய்வு செய்து காரணங்களை விளக்கிக் கூறும் போக்கில் அமைந்தது. ஆனால் அவருடைய சிந்தனை விளக்கம் செய்வதாக அமயவில்லை.

ஒரு குறிப்பிட்ட அரசாங்க கோட்பாட்டை ஆய்வு செய்வது அரசியல் ஆகாது. பொதுவாக அரசாங்கக் கோட்பாடுகளின் சிறந்த இயல்புகளை அறிந்து கொள்வதே அரசியலைப் பற்றிய அறிவு ஆகும் என்பதே பிளேட்டோவின் கருத்து ஆகும். முழுமையான சரியான உண்மை அறிவைப் பெற்றுக் கொள்வதே பண்புடமை என்ற சேத்திரட்டீசின் கருத்தே பிளேட்டோவின் சிந்தனையின் மையக்கருத்தாகும்.

ஆளுதல் அல்லது அரசாங்கம் நடத்துவது என்பது பிழையற உணர்ந்த அறிவுடமை ஒன்றையே சார்ந்து இருக்கும் தொழில் ஆகும். ஒவ்வொருவரும் தத்தம் தேவைகளை மற்றவர்களுடைய ஆற்றல்களின் மூலமாக ஒருவருக் கொருவர் நிறைவு

செய்து கொள்ளுதலே சமுதாயம் ஆகும்.

இவை இரண்டும் பிளேட்டோவின் மையக் கருத்துக்கள் ஆகும். பிளேட்டோவின் அரசியல் சிந்தனைகள் அவரது நூல்களான குடியரசு, சட்டங்கள் என்பவற்றிலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நீதி என்றால் என்ன என்ற கருத்தை விளக்கும் போது தான் சிறந்த இலட்சிய அரசின் இயல்புகள் விளக்கப்படுகின்றன. நீதி என்பதை பிளேட்டோ ஆராயும் போது நீதி இலட்சிய அரசியலில் தான் காணப்படும் என்று வலியுறுத்தினார். இந்நூல் ஒன்பது பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு.

1) வீர அல்லது ஊக்கப் பண்பு.

2) மெய்யறிவாளர்களுடைய ஆட்சியே இலட்சிய அரசியல் நடக்கும்? இலட்சிய அரசில் காவலர் போர்வீரர் ஆகியோர் அடங்குவர்.

3) இலட்சிய அரசால் ஆளுபவர்கள் ஆட்சி அதிகாரத்தில் பற்றுவைக்கக்கூடாது. அவ்வாறு

இருந்தால் அவர்களுக்குப் போட்டியாக அதனை மற்றையோரும் விரும்புவர். பூசல்கள்

எழும் அரசைப் பற்றி நன்கு அறிந்தவரும் ஆட்சித்துறை அல்லது வேறு துறையில்

உள்ளவர் கவலராக இருக்கும்படி வற்புறுத்தப்பட வேண்டும்.

4) பிளேட்டோ தனது இலட்சிய அரசின் இயல்புகளைக் கொண்டே தனது காலத்தில்

கிரேக்கத்தில் நடைமுறையில் இருந்த முறையினை மதிப்பிட்டார்.

5) கிறீசிலுள்ள அரசாங்க அமைப்புகளெல்லாம் குறைபாடுகள் உடையவை. அவை

குடிமக்களுக்குத் தீமை விளைவிக்கின்றன. நல் ஊழ் காரணமாகவோ அற்புதம்

காரணமாகவோ தான் அவைகள் சீர்திருத்தம் பெறும் தனி நபருக்கும் சமுதாயத்திற்கும்

நன்மை அளிக்கத்தக்க உண்மையான மெய்யறிவைப் பெற்ற ஆட்சியாளன் இருந்தால்

தான் மனித இனம் உய்வு பெறும் என்றார்.

6) ஆட்சியாளனுடைய நோக்கம் குடிமக்கள் எல்லோருக்கும் நன்மையும் இன்பமும்

கிடைக்கச் செய்வதே.

7) நீதி என்பது ஒரு தனி மனிதனுக்குரிய பண்பாகவும் ஒரு அரசுக்குரிய பண்பாகவும்

இருக்கிறது.

8) இலட்சிய அரசில் ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்கள் காவலர் எனப்படுபவர்.

9) மக்களிடத்து சாதாரணமாக நால்வகைப் பண்புகள் காணப்படுகின்றன. அறிவைப்

பெறுதல் தேவைகளை நிறைவு செய்தல், கட்டுப்பாடு என்பனவாகும்.

நாட்டு மக்களிடையே ஒழுங்கும் அமைதியும் நிலவி எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள் என்றால் அதற்கு முக்கிய காரணம் அரசே. இந்நிறுவனத்தை நிர்வாக இயந்திரம் எனக் கொள்ளலாம். ஏன்னெனில் இந்நிறுவனம் செயற்படாவிடில்

மக்களிடையே ஒற்றுமை நிலவ முடியாது ஒழுக்கம் இருக்காது. இந்நிறுவனம் செயற்படும் போது அதிகாரமும் வலுக்கட்டாயமும் பயன்படுத்தப்படும் மிகக் குறைந்த தேவைகளைப் பூர்த்தி செய்த பழங்கால அமைப்புக்கு அப்பால் சமூகம் வளர்ச்சியடைந்த விதத்தைப் பிளேட்டோ தமது குடியரசில் விபரிக்கின்றார்.

தனிமனிதன் பொதுமக்கள் இவர்களின் தன்மைகளை எடுத்துக் கூறிய பிளேட்டோ யார் ஆட்சிபுரிய வேண்டும் என்பதையும், யார் ஆட்சியின் கீழ் அடங்கி நடக்கவேண்டும் என்பதையும் காட்டுகிறார். பிளேட்டோவின் கருத்துக்கள் கிரேக்க மக்களின் சமூகத்திற்கு மட்டும் பொருந்துவன அல்ல மனித குலத்துக்கே பொருந்துவனவாகும்.

இவ்வாறு பிளேட்டோ அரசியல் வடிவத்தை பொருளாதார ஒழுங்கிலிருந்து வேறுபடுத்துவதுடன் வழக்கத்தை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக தார்மீக வாழ்வு வாழ வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றார். அத்துடன் காவலாளர்களும் தத்துவஞானமுடைய அரசர்களும் தம்மைத் தாமே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்.

R. Sujeepa
2014 A/L A

சைவக் கிரியைகள்.

1) பரார்த்தம் 2) ஆன்மார்த்தம்.

இந்துக்களின் வாழ்விலே இரண்டு விதமான கிரியைகள் இடம் பெறுகின்றன.

இந்த ஆன்மார்த்த கிரியைகளை பூர்வக் கிரியைகள், அபரக் கிரியைகள் என இரு பிரிவுகளைக் கொண்டது. பூர்வக் கிரியைகள் எனப்படுவது தாயின் கர்ப்பத்தில் இருந்து இவ்வுலக வாழ்வு முடியும் வரை செய்யப்படும் கிரியைகள் எனலாம்.

உதாரணமாக :-

திருமணக்கிரியை	:- அனுஜ்ஜை
விநாயகர் பூசை	:- ஆசமனம்
புண்ணியதானம்	:- கும்ப பூசை
அங்குரார்ப்பணம்	:- நவக்கிரக பூசை
இரட்சபந்தனம்	:- ஓமம் வளர்த்தல்
பிதுர் ஆசீர்வாதம்	:- அம்மி மிதித்தல்.
மணமகனுக்குரிய உபசாரம்	:- அருந்ததி காட்டல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அபரக் கிரியைகள் எனப்படுவது ஒருவர் இறந்த பின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகளால் செய்யப்படும் கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படும்.

உதாரணமாக :-

மரணக் கிரியைகள்
பேரிகை அடித்தல்
உடற் சுத்தி
சுண்ணம் இடித்தலும் பந்தம் ஏற்றுதலும்
சுத்திசஞ்சயனம் (காடாற்றுதல்)
நக்ன தானம்
அந்தியேட்டி
சபிண்டீகரணம்
சிரார்த்தம் (திவசம்)

போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்.

சைவக் கோயிற் கிரியைகள்.

சைவக் கோயிற் கிரியைகளில் நித்திய, நைமித்திய, காமிக கிரியைகள் போன்றவற்றை சைவக் கோயிற்கிரியைகள் என்ற அடிப்படையில் நோக்கலாம் - அறிவு மேம்பட்டவர் யோக ஞான மார்க்கத்தைக் கடைப்பிடிக்க கிரியை நெறிநிற்போர் சரியை, கிரியை வழி நிற்கின்றனர்.

கிரியைகளைப் பற்றிக் கூறும் போது அவற்றைப் பற்றிக் கூறிய ஆதி நூல்களாகவும் எமது சைவ சமயத்தின் பிரமான நூல்களாகவும் அமையும் வேதங்கள், ஆகமங்கள் இரண்டையும் பற்றிய சில கருத்துக்களை முதலில் நோக்குதல் வேண்டும்.

வேதங்கள் நான்கு பகுதிகளாக இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற பெயர்களால் வகுக்கப்பட்டுள்ளன. இருக்கு வேதமானது பிரார்த்தனைப் பாடல்களைப் பாடுமாறு அமைந்துள்ளன. இந்திரன், அக்கினி, வருணன், உருத்திரன், விஷ்ணு ஆகிய தெய்வங்களைப் பாடுகின்றது.

முதன் முதலாக எழுந்த வழிபாட்டு நூல் யசுர் வேதம் எனலாம். யாகக் கிரியைகள் நிகழ்த்தும் முறையினை விளக்கும் நூலானமையால் அது உரைநடையிலேயே காணப்படுகிறது. யாகக் கிரியைகள் நிகழ்த்தும் முறையினை விபரித்தும், வகுத்தும், ஒழுங்குபடுத்தும் இந்நூல் கிரியைகளின் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றி கூறுகின்றது.

சாவேதம் கேட்போருள்ளத்தை உருக்கி அவர்களிடமிருந்து பொருளைப் பெறத் துணை நிற்பது என விளக்குவர். சாமகானத்தில் சிவனுக்கு விருப்பம் அதிகம் என்பர். எனினும் சிவாலயங்களிலும் ஏனைய நித்திய நைமித்திய வழிபாடுகளிலும் சாமவேதம் குறிப்பிடத் தக்கவாறு தனி இடம் பெறவில்லை.

அதர்வதேவம் கிரியைகள் பற்றிப் பெரிதும் சொல்லியிருப்பினும் அவை லௌகீக செயற்பாடுகள் வைத்திய மாந்திரிக விசயங்கள் முதலியவற்றையே கூறுகின்றன.

நித்திய, நைமித்திய, காமிகக் கிரியைகள்.

சிவாலயங்களில் நிகழும் கிரியைகள் மூன்று வகையின இவை நித்திய நைமித்திய காமிய கிரியைகள் எனப்படும்.

நித்திய கிரியைகள் :- தினந்தோறும் செய்யும் கிரியைகள்
நைமித்திய கிரியைகள் :- காரணங் கொண்டு நிகழும் கிரியைகள்
காமிக கிரியைகள் :- பெறுபேற்றினை அவாவிச் செய்யும் கிரியைகள் ஆகும்.

நித்திய பூஜைகள் பிரதானமாக ஆறு வகைப்படும். நித்திய பூசையில் முதலாவது பூஜை சூரியன் உதிப்பதற்கு முன்னர் நிகழ வேண்டியது. இது உஷைக்கால பூஜை எனப்படும். உச்சிக் காலப் பூஜை நடுப்பகலுக்குரியது. சூரியன் மறைவதற்கு முன்னர் நிகழ்வது சாயரட்டைப் பூஜை எனப்படும். இதன் பின் நிகழ்வது இரண்டாங்காலப் பூஜை ஆகும். சாயங்காலப் பூஜையின் பின் நிகழ்வது அர்த்தஜாமம் பூஜை ஆகும்.

சி. சுவீகா 2014 A/L [A]

சுருதி வாத்தியங்கள்.

சுருதி மாதா, லயம் பிதா என்பது பிராமண வாக்கியம் சுருதியை தாய்க்குச் சமனாகவும், லயத்தை தந்தைக்குச் சமனாகவும் கூறப்பட்டுள்ளது. பிறந்த குழந்தை முதலில் தாயைத் தான் தெரிந்து கொள்கின்றது. பின்னரே தகப்பனைத் தெரிந்து கொள்கின்றது. இசையிலும் மாணவன் முதலில் தெரிந்து கொள்வது சுருதி. பின்னர் தான் லயத்தை உணர்கிறான். சுருதி என்பது ஆதார ஸட்ஜமாகும். சுருதியில் சேருதல் அல்லது இணைதல் என்பதில் முதலில் பயிற்சி பெறுகிறான் மிகுந்த ஆறு ஸ்வரங்களின் ஸ்தானங்கள் ஸட்ஜத்தைப் பொறுத்திருக்கின்றன. ராகங்களினுடைய இசை வடிவங்களெல்லாம் ஒரு ஆதார சுருதியை வைத்துக் கொண்டு பாடினால் தான் தெளிவாகும் சுருதி இல்லாமலே ஒருவர் செம்மையாகப் பாடலாம் இசைக் கருவிகளிலும் வாசிக்கலாம் ஆனால் அப்படிப்பட்ட கானம் பூரணரஸானுபவத்தைதராது. சுருதியென்னும் அத்திவாரத்தின் மீது கட்டப்பட்ட இசையே சுவையாக இருக்கும் ஒரு கச்சேரியில் சுருதியானது பாடகர்களுக்கு மட்டும் ஏற்படவில்லை. சதசிலுள்ளவர்கள் கேட்பதற்காகவும் ஏற்பட்டுள்ளது. தம்பூரை இரகசியமாக மீடாமல் செம்மையான மீட்டினால் அதன் சுருதி ஒலிகள் சதசிலுள்ளவர்களுக்கும் கேட்டு சுருதியில் அவர்கள் லயித்துக் கானத்தை அனுபவிப்பார்கள். அவர்கள் கவனம் பிறகு வேறெங்கும் செல்லாது. பாடகர் அளிக்கும் கான சமுத்திரத்தில் மூழ்கிவிடுவார்கள். ஹிந்துஸ்தானி சங்கீத வித்துவான்கள் இரட்டைத் தம்பூராக்களை செம்மையாக சுருதி சேர்த்து பளிச்சென்று நாதம் வீசுமாறு மீட்டி கானம் செய்வதைப் பார்க்கலாம்.

மேல் நாட்டு சங்கீதக் கச்சேரிகளுக்கு (Concerts of western music) சுருதி வாத்தியம் அவசியமில்லை. அவர்கள் வாசிக்கும் உருப்படிகள் பல்வேறு சுருதிகளில் (Different keys :- key of C, Key of D, key of G ect.) அமைந்துள்ளன. வாக்கேயகாரர் எந்த சுருதியில் (Particular key) அந்த உருப்படியை இயற்றியுள்ளாரோ அதிலே தான் அவர்கள் வாசிக்க வேண்டும். பாடவும் வேண்டும். இக்காரணம் பற்றி தான் மேல் நாட்டார் பிடில், குழல் வாத்தியங்களைப் பல்வேறு ஸ்வரஸ்தானங்களை ஆதார ஸட்ஜமாகக் கொண்டு ஸரிகம பதநிஸ், ஸ்நிதப மகரிஸ வை ஸாதகம் செய்கிறார்கள். இதற்கு Practising in different positions என்று பெயர். மேலும் மேலும் மேல் நாட்டார் சங்கீதத்தில் ராகம் என்பது கிடையாததினாலும், ஒரே சமயத்தில் ஒரு முறையைத் தழுவிய ஸ்வர அடுக்குகள் (Chords) வாசிக்கப்படுவதாலும் அங்கு சுருதி வாத்தியங்களுக்கு இடமில்லை. சில வேளைகளில் கிராமிய கானத்தில் (Flock music) சுருதிக் கருவிகளை உபயோகப்படுத்துகிறார்கள்.

சுருதி உரிமை

இந்த சங்கீதத்தில் ஒருபாடகர் தனது சாரீரத்திற்கு ஏற்றவாறு சுருதியை அமைத்துக் கொண்டு பாடுகிறார்கள். ஆனால் மேல் நாட்டு சங்கீதத்தில் இது சாத்தியமாகாது. எடுத்துக் கொண்ட உருப்படிகள் எந்த சுருதியில் அமைக்கப்பட்டுள்ளதோ அதிலேதான் பாடவும் வேண்டும். வாசிக்கவும் வேண்டும். இங்கு பாடகர்களுக்கு ஏற்பட்ட சுருதி சுதந்திரத்தைக் குறித்து மேல் நாட்டவர்கள் மிகவும் பொறாமை கொள்வதுண்டு. மனிதனுடைய குரல் ஒரு ஸீஷ்மமான இசைக் கருவியாகும். சுருதி தர்மத்தை அனுஷ்டிக்காமல் குரலை நிர்ப்பந்தப்படுத்தி மேல் சுருதியிலோ அல்லது தாழ்ந்த சுருதியிலோ ஒருவர் பாடுவாரானால் அவர் குரலின் வளம் நாளடைவில் குன்றிவிடும். விவரமான பேச்சுக்களை எதிர்பார்க்க முடியாது. குரலின் நாத வர்ணப் பிரகாசமும் (Tone colour) குன்றிவிடும்.

சுருதிக்காக ஸட்ஜத்தை ஒலித்தாலே போதுமானது. ஆயினும் சுருதி திறம்பட இருப்பற்காக ஸட்ஜத்தையும் சேர்த்தோ அல்லது அடுத்தடுத்தோ ஒலிப்பதுண்டு. இவ்விரண்டு ஸ்வரங்களும் அவிக்குதி அதாவது பேதமற்ற ஸ்வரங்களாகும். பரஸ்பர ஸம்வாதி பொருத்த முடையவை. பஞ்சமமானது ஸட்ஜத்தின் மூன்றாவது பரிவாரச் சுருதி (Third harmonic) ஆகும். ஆகவே இது ஸட்ஜத்துடன் இணைந்தே பேசும்.

V. Praveena 2013 Arts - A

மாறிவரும் தற்கால மாணவ சமுதாயம்

தற்காலத்தில் மாணவ சமுதாயம் என்பது மிகவும் மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. செய்தித்தாள்கள், தொலைக்காட்சி பார்ப்பதையே நிறுத்திவிடலாம் எனத் தோன்றுகின்றது. முற்காலங்களில் மனிதர்களுடைய செய்திகள் பத்திரிகையில் வருவது வழக்கம் தான். இருந்தாலும் மாணவர்கள் பற்றிய செய்திகள் வருவது அதிர்ச்சியடையக் கூடிய ஒன்று தான்.

மாணவர்கள் முன்னைய போன்று தற்போது இல்லை. மாணவர்கள் அதாவது 18 வயதிற்கு உட்பட்டவர்கள் தனியாக ஊர் சுற்றுவதும், மதுபானம் அருந்துவதும், தமது செலவுகளுக்காக அடுத்த வீடுகளில் திருடுவதும், பாடசாலை செல்லாமல் சினிமா அரங்குகளுக்குச் செல்வதும் எனப் பலதவறான வேலைகளில் ஈடுபடுகின்றனர். இதற்கான காரணத்தை ஆராய்ந்தால். நவீன தொழில்நுட்ப வளர்ச்சி என்று கூறுகின்றனர்.
அது முற்றுமுழுதாக உண்மை அல்ல. தொழிநுட்பம் வளர்ச்சியடைகிறது என்றால் நாம் அதற்க ஏற்ப வாழப் பழகத்தான் வேண்டும். அதற்காக தொழிநுட்ப வளர்ச்சிதான் காரணம் என கூறமுடியாது தானே.

முன்னைய காலங்களில் வறுமைக்குடும்பங்களில் பிறந்த உண்ணுவதற்கு ஒருவேளை உணவு கூட இல்லாதவர்கள் படிக்க வசதி இல்லாத மாணவர்கள் குற்றங்கள் செய்வர். ஆனால் இப்போது படிக்க வசதி இல்லாத மாணவர்கள் என்று யாரையுமே கூறமுடியாது. ஏனெனில் அரசாங்கம் அதற்குரிய சகலவசதிகளையும் செய்து கொடுக்கின்றது. இலவசச் சீருடை, இலவச புத்தகம், உணவு என்பவற்றை வழங்குகின்றது. ஆனால் இந்த மாணவர்களோ இலவசமாகக் கிடைப்பதனால் அவற்றை அலட்சியப்படுத்துகின்றனர். ஆசிரியர் வரவில்லை எனில் மேசைகளிற்கு மேல் ஏறி நிற்பதும், சண்டை போடுவதும், பாடநூல்களைக் கிழித்து ரொக்கற் செய்வதும் என ஓர் புத்தியில்லாத அ.்றிணைத் தன்மையில் நடந்து கொள்கின்றனர். நகர்ப்புற பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் நிலைதான் மிகமிக மோசமாகி வருகின்றது. நாங்கள் பெரிய பாடசாலைகளில் படிக்கின்றோம். எங்களை யார் கேட்பது என்று ஆணவம் வளர்ந்துள்ளது. பெரிய பாடசாலைகளில் படிக்கின்றோம் என்றால் மட்டும் போதாது நல்ல பழக்க வழக்கங்களையும் பழகிக் கொள்ள வேண்டும். தற்காலத்தில் மாணவர்கள் பழக்கவழக்கம் என்பது மிகவும் அருகிப் போய்விட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. முன்னைய காலங்களில் சீடன் குரு வீட்டுக்குச் சென்று குருவுக்கு மரியாதை கொடுத்தே கல்வியைப் பயின்றான். ஆனால் தற்கால மாணவர்கள் ஆசிரியர்கள் வகுப்பிற்கு வந்தால் கூட எழுந்து மரியாதை வழங்குவதில்லை. ஆசிரியருக்கு நிகராக கதைப்பதும் இருப்பதும் ஆசிரியர் ஏதும் வேலை கொடுத்தால் ஓடி ஒழிவதும் என மிகவும் ஒழுக்கம் குன்றியவர்களாக இருக்கின்றனர்.

பாடசாலையில் அதிபர், ஆசிரியர், மாணவ தலைவர்களை அவதூறாகத் தூற்றுகின்றனர். இவ்வாறாக மாணவர்கள் தவறான வழியிலும் தொலைபேசி, இணையம் போன்றன பார்ப்பதை தடுக்கவும் நாம் இன்றே செயற்படத் தொடங்க வேண்டும்.

மாணவர்களான நாம் எப்பொழுதும் எக்காலத்திலும் மாற்றமுறாமல் ஒழுக்கமாக இருப்போம் என உறுதியோடு இருக்கவேண்டும்.

"இன்றை மாணவர்கள் நாளைய தலைவர்கள்"

சி. டினோஜா
A/L 2014 Arts

கூடைப்பந்தாட்டம் (Basket, Ball)

இன்றைய உலகில் பலவகையான வேடிக்கை விநோதங்கள் நிறைந்த விளையாட்டுக்கள் மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளன. அவ்வாறான மிகவும் பிரபல்யமாக உலக அரங்கில் இடம் பிடித்த விளையாட்டு கூடைப்பந்தாட்டம் ஆகும். இவ்விளையாட்டைக் கண்டுபிடித்தவர். ஜேமிஸ் றாய்ஸமித் என்பராவார். இவள் ஐக்கிய அமெரிக்கா நாட்டைச் சேர்ந்தவர் ஆவார். இவர் உடற்கல்விப் போதனாசிரியராக தொழில் புரிந்தார். இவர் ஆசிரியாராக தொழில் புரிந்த கல்லூரி அமெரிக்காவின் பிரபல்யமான ஷ்பிறிங் பில்ற் கல்லூரியாகும். இவர் கூடைப்பந்தாட்டத்தை 1891 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். அன்று இவ் விளையாட்டுக்களில் பல நாடுகளில் பிரபல்யம் அடைந்து காணப்பட்டது. இவ்விளையாட்டில் ஆர்வம் உள்ளவர்களாக இளைஞர்கள், யுவதிகள் காணப்பட்டனர். உலக கூடைப்பந்தாட்ட முன்னணிப் போட்டிகளான உலகக் கிண்ணப் போட்டி, ஒலிம்பிக் போட்டி போன்றவற்றில் இடம்பெற்றுள்ளது. உலக கூடைப்பந்தாட்ட சம்பியனாக அமெரிக்கா திகழ்கின்றது. அத்தோடு ஒலிம்பிக் சம்பியனாகவும் காணப்படுகின்றது. கூடைப்பந்தாட்டத்தில் பிரபல்யம் வாய்ந்த நாடுகளாக அமெரிக்கா, ரஷ்யா செக்கோசிலாவாக்கியா, சீனா, யூகோசிலாவாக்கியா, ஜேர்மனி போன்ற நாடுகள் காணப்படுகின்றன. கூடைப்பந்தாட்ட விளையாட்டில் வீரர்கள் உயரமாக இருப்பதால் நன்மை உண்டு. அதிக உயரமான வீரர்களை அமெரிக்கா தன்னகத்தே கொண்டுள்ளது. அதிக கறுப்பினத்தைச் கொண்ட கூடைப்பந்தாட்ட கோஸ்டி அமெரிக்காவில் தான் உண்டு.

கூடைப்பந்தாட்ட விளையாட்டில் ஒருபக்க வீரர்களின் எண்ணிக்கை ஐந்து ஆகும். ஈடு செய்ய முடியும். அவ்வாறு ஈடு செய்வோரின் எண்ணிக்கை ஏழு ஆகும். ஆசியாவில் பிரபல்யம் வாய்ந்த நாடுகளான சீனா ரஷ்யா ஜப்பான், இந்தியா போன்றன காணப்படுகின்றது. கூடைப்பந்தாட்டத்தில் பெண்களும் பங்கேற்க முடியும். பெண்கள் கூடைப்பந்தாட்டத்தில் சிறந்த நாடுகளாக அமெரிக்கா, பிறேசில் போன்ற நாடுகள் காணப்படுகின்றன. சட்ட நுணுக்கங்களில் ஏனைய விளையாட்டுக்களுடன் கூடைப்பந்து அதிக சட்டங்களைக் கொண்டது உள்ளரங்கில் கூடைப்பந்தாட்டப் போட்டி நடாத்துவதாயின் கூரையின்உயரம் 23 அடி அல்லது ஏழு மீற்றர்களாக காணப்பட வேண்டும் தோலால் செய்த பந்தை முன்னர் பாவித்தனர். தற்காலத்தில் றப்பரால் செய்த கூடைப்பந்தை பந்தமுக்கம் கூடியமையினால் உபயோகிக்கின்றனர். விளையாட்டில் பந்தை மற்றவர்களுக்கு மாற்றுதலும் பிடித்தலும், பந்தைத் தட்டிச் செல்லல், கூடையினுள்ளே பந்தைப் போடுதல், உடல் வளைத்து திருப்பி விளையாடுதலும் பாதங்களின் செயன்முறை நிலைகளும்,பலகையில் பட்டுவரும் பந்தைக் கைப்பற்றல், பலவித நேர், வளைவு ஓட்டங்கள் போன்றன கவனிக்கப்பட வேண்டிய சில அம்சங்களாகும். அதோடு கோஸ்டி விளையாட்டு வீரர்களின் திற்மைக்கும், ஆற்றலுக்கும் உடல் நிலைக்கும் அமையவே பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஒற்றுமையின் தாக்கல் முறை விளையாட்டு பலன்தரும். சில வேளைகளில் பாதுகாப்பாக விளையாடுவதே சிறந்த "தாக்கவாகு" எனக் கூறுவார்கள். ஏதோ காரணங்களுக்காக தாக்க முறை கடைப்பிடிக்க முடியாவிடின் உதாரணமாக கூறின் கோஸ்டியின் உடல் வலிமையும் சக்தியும் போதாவிடில் சிறந்த ஒரு

தடுத்தல் முறை பயிற்சி பெற்று கடைப்பிடித்தல் வேண்டும். குடி ஒற்றுமை விளையாட்டில் பிரதானமானதாகும். விளையாட்டு வீரர்கள் பந்துடன் வேகமாக ஓடிப்பழக வேண்டும். ஏனெனில் அப்பொழுதுதான் எதிரிகளுக்கு ஊடாக ஊடுருவிச் செல்லலாம். கூடையினுள் பந்தைப் போடும் போது நீங்கள் மேற்கொள்ளப் போகும் முறையை மனதில் பதிய வைத்துக் கொள்ளல் வேண்டும். சாதாரணமாக சந்தர்ப்பங்களை மேற்கொள்ள வேண்டாம். பந்தைத் தட்டிச் செல்லும் போது எதிரியின் அசைவுகளை நன்கு அவதானித்து பிற்கை வெற்றிடத்தில் உள்ள சக வீரனுக்கு அனுப்புதல் நன்று.

ஒரு கோல்டி செல்ல வேண்டுமாயின் விளையாட்டு வேகமும் முக்கிய இடம் வகிக்கும். இந்த விளையாட்டு ஓர் வேகம் கூடிய விளையாட்டாக இருப்பதால் உடனுக்குடன் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் ஒவ்வொரு வீரனுக்கும் அவசியம் கூடைப்பந்தாட்டம் தாக்கப் போகும் நிலையில் உள்ள ஆயுதங்கள் போன்றது. அதை முதல் அபிவிருத்தி செய்வதன் மூலம் எதிரி உமது செயற்பாட்டினை அறிய கொஞ்சம் நேரம் பிடிக்கும் என நெட் அவர்கள் கூறுகின்றார். உலகின் வேகமான விளையாட்டுக்களில் கூடைப்பந்தாட்டம் இரண்டாம் இடத்தில் உண்டு.

இ. குணதீபா
A/L 2014

நன்றி

இசுமுனியாச் சிற்பம்

மகிந்த தேரரால் இசுறு வம்சத்தவர்கள் 500 பேருடன் வந்த போது அவர்களுக்காக தேவநம்பிய தீசனால் கட்டுவிக்கப்பட்டதாகும். சமய வழிபாட்டுத்தலமாக இருந்த போதும் இங்குள்ள கலையம்சங்கள் லௌவீகத் தன்மையுடன் காணப்படுகின்றன. இவை கி.பி 5ம் நூற்றாண்டிற்கும் 7ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாக காணப்படுகின்றது. இவ்விகாரை முதலாம் நூற்றாண்டில் நிறுவப்பட்டதாகும். இசுறுமுனிய கற்பாறைச் சுவரில் அரைப்புடைப்பு நுட்ப முறையில் செதுக்கப்பட்டதாகும். இங்குள்ள சிற்பங்கள் ஆவன காதலர் சிற்பம், நீராடும் யானை, அரண்மனைக்காட்சி போன்வற்றைக் குறிப்பிடலாம். இதில் காதலர் சிற்பம் மிகச் சிறந்ததாகும்.

இசுறுமுனிய விகாரை பாறைச் சுவரில் தட்டையான கற்தகட்டில் இது செலுத்தப்பட்டுள்ளது. இசுறுமுனியாவின் அண்மையில் உள்ள மசுன் உயன தோட்டத்தில் இருந்து கொண்டு வரப்பட்டதாகும். இச்சிற்பம் தோட்டத்தில் இருந்த சாளிய இளவரசனும், அசோகமாலாவும் எனக் கூறுகின்றனர். சிலர் சிவன், பார்வதி எனவும் கூறுகின்றனர். கலைச்சிறப்புடன் உயர்ந்த தன்மையுடன் செதுக்கப்பட்டுள்ளது. இது குப்த சிற்பக்கலை மரபில் அரைப்புடைப்புச் சிற்ப முறையில் செதுக்கப்பட்டுள்ளது. கி.பி. 5ம் நூற்றாண்டு எனக் கூறப்படுகின்றது. ஓர் ஆணும் பெண்ணும் ஆனந்த்த்தில் அன்புடன் தழுவிய அமைப்பில் அமர்ந்துள்ள தன்மையில் காணப்படுகின்றது. ஆண்மையுடன் சிறந்த தேக இலட்சணத்துடன் ஆணின் மடியில் அமர்ந்திருக்கும் நாணத்துடன் பெண்மையும் இயல்புடன் நளினமாக அதர்ந்திருக்கும் பெண் உருவம்

காணப்படும் இவ்வடிவங்கள் சிறந்த கலைப்பண்புடன் பொழியப்பட்டுள்ளன. ஆணின் தலையின் பின்புறத்தில் ஒளி வட்டம் போன்ற அமைத்து வாளின் பிடிபோன்ற அமைப்பும் சிறந்த அமைப்பும் செதுக்கப்பட்டுள்ளன. சிறந்த ஆடை அணிகல்களுடன் காணப்படும் சிறிது சாய்ந்த நிலையில் இருக்கும் பெண்ணின் கழுத்து, கைகள், கால்கள், இடுப்பு என்பன வளையல்களை கொண்டு அலங்காரமான முறையில் செதுக்கப்பட்டுள்ளது. உருவில் மேல் உடம்பு ஆடையற்றுள்ளது. கீழ்ப்பகுதி சிறிய ஆடையில் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அமர்ந்துள்ள பெண்ணின் உருவம் வெட்கம் நிறைந்ததாக காணப்படுகின்றது. இக்காதல் ஜோடியின் செதுக்கல் அரைவாசியாக மேலெழுந்து வாரிய வகையில் உள்ளது. பரிபூரணம் உயிர்த்துடிப்பு தன்மை கருத்து வெளிக்காட்டும் வகையில் சிற்பியின் திறமை நன்கு வெளிக்காட்டப்பட்டுள்ளது.

இசுறுமுனிய விகாரையின் இயற்கையான முறையில் யானைகள் நீராடுவதைப் போன்று மேலெழுந்த வாரியான முறையில் செதுக்கப்பட்டுள்ளது. இச்செதுக்கலில் யானையின் சாத்வீக தன்மை சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளது. குளிக்கும் நிரைவாசி இறைக்கும் மூன்று யானைகளின் அங்க அசைவுகள் மிகச் சிறப்பாக இயற்கை அமைப்பில் செதுக்கப்பட்டுள்ளன. நீர் மட்டம் கூடிக் குறையும் போது யானைகள் அமிழ்ந்து குளிப்பதைப் போன்று திறமையைக் கொடுக்கின்றது. யானைகள் தடாகத்தில் இறங்கி தமது துதிக்கையை உயர்த்தி நீராடும் போது காணப்படும் துதிக்கையில் வலுவான தன்மை சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சிற்பியின் திறமையினை இச்சிற்பத்தின் மூலம் காணலாம். இச் சிற்பம் சிறு படைப்பு நுட்ப முறையில் பல்லவ சிற்ப மரபில் செதுக்கப்பட்டுள்ளது. பாறையில் இயற்கை அமைப்புக்கு ஏற்ப யானை உருவங்களின் திரட்சி வெளிப்படும் வகையில் சிறப்பாகவும், நுட்பமான முறையில் செதுக்கப்பட்டுள்ளது.

இவ் இசுறுமுனிய விகாரைச் சுவரில் வரையப்பட்டுள்ள சிற்பங்கள் மிகச் சிறப்பான முறையில் இயற்கை அமைப்புடன் கருங்கல்லிலே செதுக்கப்பட்டு காணப்படுகின்றது. இசுறு முனிய விகாரையிலே அரச குடும்பம், மனிதனும் குதிரைத் தலையும், காதலர் சிற்பம், நீராடும் யானைகள் போன்றன முக்கியமானதாக கருதப்பட்டாலும் அங்கு சந்திரகன்னி சோடி ஒன்று சங்கீத வாத்தியங்களைச் சுமந்து கொண்டு செல்லும் தேவர்களைப் போன்ற குள்ள உருவங்களும் அரனும் அரசியும் சேவகனும் போன்ற வடிவங்கள் மேலெழுந்தவாரியாக செதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சிற்பங்கள் யாவுமே கருங்கல்லினாலேயே செதுக்கப்பட்டுக் காணப்படுகின்றது. அனுராதபுர காலத்தில் இருந்த மிகச் சிறப்பான ஓவியங்களையும் சிறப்பான சிற்பங்களையும் கொண்ட விகாரை இசுறு முனிய விகாரை எனக் கூறப்படுகின்றது.

Thankavel Ranusiya
2013 Arts A

இலங்கையின் பிரதான கூத்துக்கலை வடிவங்கள்

இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் அந்தந்தப் பிரதேசத்திற்கு தனித்துவமானதும் இலங்கை மக்களுக்குப் பொதுவானதுமான கூத்து வடிவங்கள் பல வழக்கிலுள்ளன.

இலங்கையில் தமிழர் கூத்துக்கென்று பார்க்கின்றபோது மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், வன்னிப்பிரதேசம், மலையகம் சிலாப் பிரதேசம் என பாகுபடுத்திப் பார்ப்பது முக்கியமானதொன்றாகும். மட்டக்களப்பில் வடமோடி, தென்மோடி என்பன முக்கிய கூத்து வடிவமாகும். வடமோடி, தென்மோடி எனும் பாகுபாடு பெயரளவில் மாத்திரமல்லாமல் அதன் உட்கட்டமைப்பு வெளிக்கட்டமைப்பு எனப்பல்வேறு விதமான வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. வடமோடி, தென்மோடி கூத்துக்களை விட வசந்தன் கூத்து, மகுடிக்கூத்து, பறைமேளக்கூத்து, தாளக்கட்டையும் பிரதானமாகும். யாழ்ப்பாணத்தில் வடமோடி, தென்மோடி, வசந்தன் கூத்து என்பனவும் மட்டக்களப்பில் பயில் நிலை எல்லாவடிவங்களும் இருந்த போதும் யாழ்ப்பாணத்தில் கூத்து அறிக்கை வித்தியாசப்படுகின்றன. வித்தியானந்தன், சிவத்தம்பி மௌனகுரு, இலங்கையர்கோன் சுந்தரம்பிள்ளை போன்றோர் மட்டக்களப்பு பகுதியில் உள்ள வடமோடி, தென்மோடி இன்றுவரை மரபுகளோடு பேணப்பட்டு வருவதைக் கூறுகின்றனர் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் இன்று யாழ்ப்பாணப்பிரதேசத்தில் இவை பெரும்பாலும் வழக்கொழிந்து இடப்பட்டு வரும் சில இடங்களில் வடமோடி, தென்மோடி வேறுபாடுகள் பின்பற்றப்படாமலும் உள்ளன. மட்டக்களப்பு பகுதியில் உரிய முறையில் கூத்துக்கள் பேணப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பில் ஆடப்படும் கூத்து தென்னிந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்தின் ஊடாக மட்டக்களப்பிலேயே பேணப்பட்டது தெளிவாகிறது.

யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய செல்வாக்கு காரணமாக விலாச மரபோடு இணைந்த இசை நாடக மரபே வலுவானதாக உள்ளதே. இதனாலேயே கூத்து வடிவம் உயர் நிலையை இழந்தது எனப் பல்கலைகழக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கத்தோலிக்க மரபுக் கூத்துக்கள் யாழ்ப்பணக் கத்தோலிக்கர்களிடம் செல்வாக்கு உள்ளதாக திகழ்ந்துள்ளது. இக்கலையின் எச்சங்களை வட்டுக்கோட்டை, சுழிபுரம், தொட்டக்காடு, இமையாணன், அரியாலை, கோண்டாவில், நாகர்கோயில், தாளையடி தீவு பகுதியில் காணக்கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள முக்கியமான கூத்துவடிவம் காத்தவராயன் கூத்து ஆகும். இதை துள்ளல் கூத்து என்றும் அழைக்கப்படுகின்றது. இக்காத்தான் கூத்து வன்னிப் பிரதேசத்தின் முக்கியமான கூத்து வடிவமாகும். முக்கியமாக முல்லைத்தீவில் முக்கியமானதாக கோவலன் கூத்து விளங்குகின்றது. வற்றாப்பளை இக்கூத்து வடிவத்தின் பிறந்ததாகக் கருதப்படுகின்றது. ஆட்டு வணிகன் மத்தேச ..... போன்ற நாடகங்களும் ஆடப்படுகின்றது. இது யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் கூத்துக்கள் போன்றதாகும். யாழ்ப்பாணக் கலாசாரப் பாதிப்பினையும், மட்டக்களப்பு கலாசாரப் பாதிப்பினையும் சம அளவாகப் பெற்ற பிரதேசம் திருகோணமலை ஆகும். யாழ்ப்பணப்பாதிப்பால் காத்தான் கூத்து மட்டக்களப்பில் வடமோடி, தென்மோடி கூத்துக்களும் பயில் நிலையில் உள்ளன. வேதாள ஆட்டம் போன்ற தனித்துவமான ஆட்ட முறைகளும் இங்கு உள்ளன.

இத்தகைய பாரம்பரிய கூத்துக்கள் அழிந்து விடாமல் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.

Thilakarasa Nakaviknesveary
2013 Arts [A]

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

"ஒழுக்கம் விழுப்பந் தரலால் - ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்."

என்பது வள்ளுவர் வாக்கு. இது ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் முதலாவது குறளாகும். உடலில் உயிர் ஊசலாடும் வரை உடம்பைச் சிவமாகப் பேணுவார் உயர்ந்தோர். உடலைவிட்டு உயிர் நீங்கிவிடுமாயின் சவம் என்றும், பிணம் என்றும் பெயரிட்டு நெருப்பிலிட்டு நீறாக்குவார் சைவர்கள். மண்ணில் புதைப்பர் மந்தையர். உயிரோட்டமுற்றதாக உடம்பைத் தாங்கி நிற்கும் சிறப்பு மிக உயிரைவிட ஒழுக்கம் மேலானதாக உயர் நிலையில் வைத்துப் போற்றப்படுகின்றது. மனிதப் பண்புகளில் சிறந்ததாகப் பேணப்படுகின்றது.

ஓதலில் நன்று ஒழுக்கமுடைமை என்று ஒழுக்கத்திற்கு வரைவிலக்கணமும் கூறப்பட்டுள்ளது. ஒழுக்கத்தை சமயமே முன்னின்று உணர்த்துவதனால் பரீட்சைக்குப் படிக்கும் பாடமாக சமயத்தைப் பாடசாலைகளில் போதிக்காது ஒழுக்கம் விழுப்பந்தருவதால் சமுதாய நலனை முன்வைத்து சிறந்த ஒழுக்கமும் உயர்ந்த மனப்பாங்கும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதே சமயப் பாடப் போதனையின் மூலக் கொள்கையாக இருக்க வேண்டும்.

பொன்னிருந்ததென்ன? பொருளிருந்ததென்ன? உயர்குடிப்பிறப்பிருந்ததென்ன? வீடு, வாசல், காணி, பூமி, காசு, அரச சுகபோகங்கள் இருந்ததென்ன? ஒழுக்கம் குன்றின் குடி நாசமுறும், செங்கோண்மை தளர்ச்சியுறும், கொடுங்கோல் மேலோங்கும். பொறுமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது. ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு நிலைக்காது. நல்லொழுக்கம் நன்மை தரும். தீயொழுக்கம் தீமை தரும். இதன்படி நல்லொழுக்கமுடையோர் மேன்மையான உயர்ச்சியைப் பெறுவர். ஒழுக்கம் தவறியோர் பெரும் பழிக்கு ஆளாவர். திருக்குறளில் ஒழுக்கத்தின் சிறப்பை உயர்வாகக் காட்டிச் செல்லும் முறை நோக்குவோம் ஆயின்

"அழுக்காறு உடையார் கண் ஆக்கம் போன்று இல்லை ஒழுக்கம் இலார்கண் உயர்வு"

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தார் வழி"

என்றும் குறள்கள் மேற்சொன்ன கருத்தைப் போதுமானவை.

மேலும் இக, வர, சுகத்திற்கு நல்லொழுக்கம் வித்தாகின்றது. தீயொழுக்கம் துன்பத்தின் ஊற்றாகும் என்பதனை

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்."

என வள்ளுவர் வகுத்துக் காட்டியுள்ளார்.

மனித இனம் வாழ்வாங்க வாழ்வதற்கு வேண்டிய நற்பண்புகளில் ஒழுக்கம் முதன்மையானது. ஆசாரம், சீலம் என்ற பெயர்களும் ஒழுக்கத்தையே குறிக்கின்றன.

"அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது" என்பர். மனித இனத்தின் அச்சாணி ஒழுக்கமே!

ஒழுக்கம் என்னும் உயர் விளைச்சலுக்கு ஏதுவான வித்துக்களாக நன்றியறிதல், பேரருளுடமை, இன்சொல், எந்த உயிருக்கும் துன்பம் செய்யாமை, கல்வியறிதல், உலகத்தோடு ஒட்டி வாழ்தல், நற்குணம் உடையவரோடு

நட்புக் கொள்ளுதல் என்பன ஒழுக்கத்துக்கு உயிரான எட்டு என ஆசாரக் கோவை எடுத்துக்கூறுகின்றது.

மேலும் அன்பு, அறம், தர்மம், ஈகை, இரக்கம், நீதி என்பன அறவாழ்வுக்கு இன்றியமையா ஒழுக்கமாகும். மக்களுக்கு உணவின்றி உடல்நிலையா என்பது போல நீதி நூல்களில் கூறப்பட்டவாறு நடவாவிட்டால் உலகின் ஒழுக்கங்களும் நிலைபெறா. சமூக வாழ்வியலில் ஒழுக்கம் பற்றிக் கூறும் போது அடக்கம் ஒழுக்கத்திற்கு இன்றியமையாததாகும்.

சுக்கிர நீதியில் அரசனானவன் காமம், வெகுளி, மோகம், உலோபம், மானம், மதம் என்னும் அறுவகைக் குற்றங்களைக் களைந்து வாழ வேண்டும். இல்லத்தரசியானவள் மனம், மொழி செயல்களில் தூய்மையும், உடற் தூய்மை உள்ளவளாகவும், தலைவன், கட்டளைப்படி ஒழுகுபவளாகவும் இருத்தலே ஒழுக்கம் என்று சுக்கிர நீதி கூறுகின்றது.

ஒருவன் இடையறாத நல்லொழுக்கத்தின் நின்றும் வழுவாது நிற்றல் வேண்டும். மேற்கூறிய கருத்துக்களையே ஆறுமுக நாவலரும் பாலபாடம் நாலாம் புத்தகத்தில் நல்லொழுக்கம் பற்றிய பகுதியில் தெளிவாகக் கூறியுள்ளார். கற்பு சினம் பொறையுடைமை போன்ற பகுதிகளிலும் ஒழுக்கம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இன்றைய குழந்தைகளே நாளைய நாட்டின் நற்பிரைஜையாக வீட்டையும் நாட்டையும் கட்டுக் கோப்பாக ஆளப்போகின்றவர்கள் எனவே இவர்களுக்கு நல்லொழுக்க நெறிகள் புகட்டப்பட வேண்டும். சமுதாய நலனைக் கருதிச் சிறந்த ஒழுக்கமும் உயர்ந்த மனப்பான்மையோடும் வாழ்வோமாக. வீட்டையும் நாட்டையும் காப்போமாக.

சி. சுகிர்தா

கலைப்பிரிவு 12A - 2015

கண்டிய நடனம்

கண்டிய நடனமானது சிங்களவர்களின் கலாசாரத்தைப் பறைசாற்றும் ஒரு பாரப்பரிய கலை வடிவம் ஆகும். பல நூற்றாண்டுகளாக சிறப்பான முறையில் ஆட்பட்டு வருகின்றது. இந் நடனமானது சிங்களவர்களது புனித கலாசா நிகழ்வுகளின் போது தவறாது ஆடப்பட்டு வருகின்றது. 16 – 19ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த கண்டி அரசர்களால் இதன் வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டது. இந்திய கதகளி பாணியை ஒத்த இந்நாடகத்தின் இந்து புராணத்தை, புராணநாயக்கர்கள் மிருகங்களின் நடத்தை ஆடப்படுகின்றது. கண்டி பெரராவில் ஒரு அங்கமாக இந்நடனம் இடம்பெறும். கண்டி நடனமாடுபவர் தலையில் குஞ்சத்துடன் கூடிய முடியும். உடலெங்கும் பலவிதமான நகைகள் அணிந்திருப்பர்.

வெசிவழிக்கதைகளின்படி கண்டிய நடனம் தொடக்கத்தில் இந்தியாவிலிருந்து வந்த நிகழ்த்தப்பட்ட கொகேம்ப கங்காரி என்னும் பேயோட்டுச் சடங்கிலிருந்து தோன்றியது ஆகும்.

இலங்கை அரசன் ஒருவனுடைய கனவில் சிறுத்தை ஒன்று அடிகக்கடி வரலாயிற்று சிங்களவர்களின் முதல்வன் எனக் கருதப்படும் விஜயனின் முதல் மனைவியாகிய குவேனி என்பவள் வைத்த சூனியம் காரணமாக ஏற்பட்ட ஒரு நோய் இது எனக் கருதப்பட்டது. இதிலிருந்து மீள்வதற்காக இம்மந்திரவாதிகளை இலங்கை அரசன் இலங்கைக்கு அழைப்பித்தான். கொகம்ப கங்காரியா என்னும் பேயோட்டு சடங்கு செய்த பின்னர் அரசன் இத்தோல்வியிலிருந்து மீண்டான். இதனை

தொடரந்து பல இலங்கையர் இதனை நிகழ்த்தலாயினர். பிற்காலத்தில் சிங்கள நிலவுடமை அமைப்பில் ஒரு குறிப்பிட்ட சாதியை சேர்ந்தவர்களே இந்நடனத்தை ஒரு வகைச் சாதியினரே ஆடி வந்தனர்.

19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரித்தானியரிடம் வீழ்ச்சியடைந்த பின்னர் இந்த நடனம் செல்வாக்கு இழந்தது. விடுதலைக்குப் பின்னர் இந்நடனம் புத்துயிர் பெற்றதுடன் மேடையில் ஆடத்தக்க வகையில் வளர்ச்சியும் அடைந்துள்ளது.

கண்டிய நடனத்தின் இசை

கண்டிய நடனத்தை தாள கருவிகளுடன் ஆடுவதே மரபு கெந்தபெர எனப்படும் ஒருவகை மத்தளம் பொதுவாக பயன்படுத்தப்பட்டது. கண்டிய நடனத்தோடு மட்டுமே பயன்படுத்துவது வழக்கம். இந்த மத்தளம் வாசிப்பவரும் இதற்கென உள்ள சிறப்பு உடைகளுடன் நின்று வாசிப்பர் தாளம் பெத்த எனப்படும் சல்லாரியையும் பயன்படுத்துவர்.

கண்டிய நடனத்தின் உடை ஒப்பனை

கண்டிய நடனக் கலைஞர்கள் வேலைப்பாடுகளுடன் கூடிய உடைகளை அணிந்து ஆடுவர். இது வெஸ் உடை எனப்படுகிறது. ஆண்கள் தலைப்பாகை அணவதுடன் மேற்சட்டை எதுவும் அணியாமல் மணிகளால் இழைத்து வலைபோல் செய்யப்பட்ட மார்பணி ஒன்றை அணிவர். தலைப்பாகையின் முற்புறம் உலோக்கதால் ஆன அமைப்பைக் கொண்டது. இடுப்புக்குக் கீழ் கணுக்கால் வரை உடை அணிவர். இடுப்பில் ஒட்டியாணம் போல் அமைத்த இடுப்புபடப்டியின் முன்புறம் முக்கோண வடிவில் அமைந்திருக்கும் இவற்றைவிட கைகளில் தோள் பட்டைக்குக் கீழ் மேற்கையிலும் முழங்கைக்கும் சற்று கீழும் அணிகள் அணிந்திருப்பர். காலில் சலங்கையும் கட்டி ஆடுவர். கலைஞர் முதலாக தலை அணி அணிவது ஒரு சடங்காக மேற்கொள்ளப்படுகின்றது. இது வெஸ் - மாங்கல்யம் என அழைக்கப்படும்.

கண்டிய நடனத்தின் தற்கால நிலை

முற்காலத்தில் பெண்கள் கண்டிய நடனங்களில் இடம்பெறுவதில்லை. தற்போது பெண்களும் இந்நடனங்களை ஆடுவதற்குப் பயில்கின்றனர். எனினும் பெண்களுக்கு என அமைந்த வெஸ்ட் உடை கிடையாது எனவே ஆண்களுக்கான உடைகளில் வெவ்வேறு வகையான மாற்றங்களைச் செய்து பெண்கள் உடுத்துகின்றனர்.

1970ல் சித்திரசேன டயஸ் என்பவர் கண்டிய நடனத்தை மேடைகளில் ஆடுவதற்கு ஏற்றவாறு அமைத்தனர். இவரது புகழ் இந்த நடனம் தொடர்பாக இருந்து வந்த சாதித் தடைகளை உடைப்பதற்கு உதவியதுடன் கண்டி நடனத்தை நகர்ப்புற மக்களும் தடைகளை உடைப்பதற்கு உதவியதுடன் கண்டி நடனத்தை நகர்ப்புற மக்களும் தற்காலத்து கலைஞர்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமையபபெற்றது. கண்டிய நடனத்தைப் பயிற்றுவிப்பதற்காக இயங்கும் பள்ளியில் பெரியது. சித்திரசேன நடனப்பள்ளியாகும்.

இலங்கையின் தற்போது பாவனையிலுள்ள 50 ரூபா நாணத்தாளில் பொறிக்கப்பட்டிருக்கும் உருவத்திற்கு சொந்தக்காரர் கண்டி ஹரிஸ் பத்துவ சேர்ந்த சைமன் மாலகம்மன என்பவர் ஆவார். பல் பிரசித்தி பெற்ற கண்டிய நடன நிபுணர்கள் அரசாங்கமோ தனியார் நிறுவனங்களோ கண்டிய நடனத்துறையை முன்னேற்றுவதற்கு போதியளவு ஒத்துழைப்பு வழங்காமையால் எதிர்காலத்தில் கண்டி பெரஹராவுக்கு கூட திறமை வாய்ந்த நடன நிபுணர்கள் தற்காலத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அபிநய அரசி ஸ்ரீமதி பாலசரஸ்வதி (1918 - 1984)

அபிநய அரசி என்றழைக்கப்படும் திருமதி பாலசரஸ்வதி மரபு வழிவந்த இசை, நடனக் கலைஞர் குடும்பத்திலே 1918ஆம் ஆண்டு மே மாதம் கோவிந்தராஜாவுக்கும் ஜெயம்மாளுக்கும் மகளாகப் பிறந்தார். இவர் இருபதாம் நூற்றாண்டிலே பரத நாட்டியத் துறையில் புகழ் பூத்த நடன மேதைகளில் ஒருவராகத் திகழ்ந்தார்.

கலைக்குகுடும்பத்தில் பிறந்த இயற்கையான ஞானமும் கலையில் ஈடுபடும் உடையவராய் குழந்தை பராயம் முதற்கொண்டே காணப்பட்ட இவர் சங்கீதம், நடனம் ஆகிய கலைகளைக் கற்றார். நாட்டியப் பாடல்கள் இசைப்பாடல்கள் சேஷத்ரக்ஞர் பதங்கள் ஜாவளிகள் என்பன இவரது குடும்பத்தாரின் சொத்தாக இருந்தது. வீணைதனம்மாள் இவரது பாட்டியார் ஆவார். பாட்டியின் பாட்டியான காமாட்சி அம்மாள் தஞ்சை அரசசபை நர்த்தகியாகவும், பாடகியாகவும் திகழ்ந்தார். இவரது தாயார் ஜெயம்மாள் நாட்டியப் பணிக்கு வித்திட்டவரும் தாயார் ஜெயம்மாள் தான் இவரது தந்தையாரும் ஓர் இசைக்கலைஞரே இவரே மகளது நாட்டியக் கச்சேரிகளுக்கு பாடகியாகவும் விளங்கினார். இவரது பரதநாட்டிய குருவாக விளங்கிய மயிலாப்பூர் கௌரி அம்பாள் பின்னர் நெல்லையப்ப நட்டுவரின் மகனான கந்தப்பநட்டுவனாரிடம் பரதக் கலையை முறைப்படி கற்றுத் தேர்ந்தார்.

இவரது பரதநாட்டிய அரங்கேற்றம் ஏழுவயதிலே காஞ்சி காமாட்சி அம்மன் கோவிலிலே பல சான்றோர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அரங்கேற்றம் செய்த பின் தொடர்ந்து நட்டுவனாரிடமும், கந்தப்பாவின் மகன் கணேசன் ஆகியோரிடமும் பரதக்கலையைப் பயின்றார். பதங்கள், வர்ணங்கள் ஆகிய உருப்படிகளுக்கு கற்பனையாக அபிநயம் செய்வதைத் திரு.சின்னையா நாயுடு குச்சுப்புடி வேதாந்தம், லஷ்மி நாராயண சாஸ்திரிகள் ஆகியோரிடமும் சிறப்பாகக் கற்றார்.

20ஆம் நூற்றாண்டின் 30 களிலே பிரசித்தி வாய்ந்த பரத நாட்டிய அவைக்காற்றுக் கலைஞராக திகழ்ந்தார். கருத்தைக் கண்களாலும் முகபாவத்தினாலும் பிரதிபலிக்கும் ஆற்றல் படைத்தவர். இவரது இசைஞானம் இவரது நாட்டியம் சிறப்படைய உதவியது. தனக்கேயான நடனப்பாணியை உருவாக்கினார். இன்றும் மக்களால் பாலசரஸ்வதிபாணி என இவரது நடனம் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

சென்ற நூற்றாண்டின் 20களிலே பரதநாட்டியத்திற்கு மதிப்பு மிகவும் குறைந்தது. எனினும் இதனை இவர் மேடைகளிலே ஆடிப் பரதம் தனது பழைய மதிப்பினைப் பெறுவதற்காக பாடுபட்ட கலைஞர்களில் ஒருவராவார். இவர் தமிழகத்திலும் இந்தியாவில் இதர மாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் நாட்டியக் கச்சேரிகளை நிகழ்த்தியும் பரதக் கலையைப் பற்றியும் பல பேச்சுக்களை நடத்தியும், கட்டுரைகள் நூல்கள் எழுதியும் அதனைப் பிரபல்யப்படுத்தினார்.

1958ஆம் ஆண்டிலே நாட்டியக்கல்லூரி ஒன்றை ஆரம்பித்துச் செவ்வனே நடத்திவந்தார். இலங்கையில் இருந்தும் இரு பெண்கள் அங்கு சென்று பாலசரஸ்வதியிடம் நடனம் பயின்றார்கள்.

அவர்கள் செல்வி ஷியாமளா நடராஜாவும், செல்வி. களதேஸ்வரி சங்கரப்பிள்ளையும் ஆவார். 1955 ஆம் ஆண்டு வெளிவந்த கல்கி தீபாவளி மலரிலே இத்துறையிற் தான் பெற்ற அனுபவங்களைப் பற்றி நாட்டிய நினைவுகள் என்ற தலைப்பிலே எழுதியுள்ளார். இவருடைய நேர்காணல்கள் பல இலஸ்றேற்டட், வீக்லி மார்க் போன்ற ஆங்கில சஞ்சிகைகளிலே வெளிவந்துள்ளன. சென்னை சங்கீத வித்துவ சபையின் 47ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்கு இவர் தலைவராக தெரிவு செய்யபட்டு நியமிக்கப்பட்டார். 1959ஆம் ஆண்டிலே தமிழ் மொழியில் நாட்டிய நூல் ஒன்றை பேராசிரியர் ஷ.இராகவனுடன் இணைந்து எழுதினார். இந்நூலில் நாட்டிய விளக்கப்படங்களுடன் காணப்படும் பரதநாட்டியம் என்னும் இந்நூல் பரதம் பயிலும் மாணவர்களுக்கு உதவியாக இருக்கின்றது.

இவர் 1961ஆம் ஆண்டு தொடக்கம் வெளிநாடுகளிலும் இக்கலையை பரப்புவதற்கான வழிமுறைகளைக் கடைப்பிடித்தார். முதலில் டோக்கியோவிற்கும் 1962ஆம் ஆண்டில் இங்கிலாந்திற்கும் சென்று பரதக்கலையின் மேம்பாட்டினை வெளிப்படுத்தினர். இவரது மாணவர்கள் ஐக்கிய அமெரிக்காவிலும், கனடாவிலும் இக் கலையை கற்பித்து வருகின்றார்கள். திருமதி.லூயிகிறிப்ஸ்தம், பிரியம்வாதம் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவரது கலை வாழ்க்கைக்கு உதவியாக இருந்தவர்கள் பிரபல வழக்கறிஞரான ஈ.கிருஸ்ணையர் சென்னை சங்கீத வித்துவசபையினர், சென்னைப் பல்கலைக்கழகச் சமஸ்கிருதப் பேராசிரியரான வி.இராகவன் ஐதரங்கம் வாசிப்பதில் புகழ்பெற்று விளங்கிய ரமணையாச் செட்டியாரின் உதவியால் சென்னை சங்கீத வித்துவசபையின் நிகழ்ச்சிகளில் 1933ஆம் ஆண்டு தொடக்கம் கலந்து சிறப்பித்து வந்தார்.

இவரது கலைத்தொண்டினை பாராட்டும் முகமாக 1977இல் இந்திய அரசாங்கம் இவருக்கு பத்மபூசன் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. 1973ஆம் ஆண்டில் சங்கீத கலாநிதி பட்டத்தை சென்னை சங்கீத வித்துவசபை இவருக்கு வழங்கியது. இவ்விருதினைப் பெற்று நாட்டியக் கலைஞர்களுள் இவரே முதல்வராகத் திகழ்கின்றார். இவரை நண்பர் எல்லோரும் அன்புடன் பாலா என அழைத்தனர்.

இவரைப் பற்றி இ.வெங்கடாசலம் தனது Dance in India என்னும் நூலில் விபரமாக எழுதியுள்ளார். 1977ஆம் ஆண்டில் பரதநாட்டியம் பற்றி வடநாட்டின் புகழ்மிக்க திரைப்பட இயக்குநர்களில் ஒருவரான திருத்யஜித்ராய் என்பவர் திரைப்படம் ஒன்றை தயாரித்த போது பாலசரஸ்வதி அவருக்குப் பல வழிகளிலும் பேருதவி செய்தார். இருபதாம் நூற்றாண்டின் நடன மேதைகளில் ஒருவராக திகழ்ந்த பாலசரஸ்வதி 09.02.1984இல் உலக வாழ்வினை நீத்து இறைவனடி சேர்ந்தார். எனினும் அவரது புகழுடம்பு பரதம் உள்ளவரை நிலைத்து நிற்கும் என்பது திண்ணம்.

சா. துளாஞ்சலி
A/L 2014 B

சினிமா பற்றிய சில தகவல்கள்

- உலகச் சினிமா வரலாற்றின் நூற்றாண்டு விழாநிகழ்வுகள் 1995ஆம் ஆண்டில் உலகெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன. சினிமாத்துறையின் பல்வேறுபட்ட கால அபிவிருத்திகளும் புரட்சிகரமான மாற்றங்களும் நினைவு கூறப்பட்டன.

- பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்த லூமியர் சகோதரர்கள் 1895ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கையால் சுற்றி இயக்கும் புரொஜெக்ரர் ஒன்றின் மூலம் தமக்குச் சொந்தமான தொழிற்சாலையில் இருந்த தொழிலாளர்கள் வேலை முடிந்து புகையிரத நிலையத்திற்குச் செல்லும் காட்சியைப் படமாக்கித் திரையில் காட்டினர்.

- தொடக்கத்தில் மௌனப் படங்கள், ஊமைப்படங்கள் மட்டுமே வெளிவந்தன. காலப்போக்கில் விரைந்த விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாகப் பேசும் படங்கள் வந்தன. இன்று மக்களைக் கவர்ந்து இழுக்கும் சக்தி வாய்ந்த ஊடகமாகவும் சினிமாவே விளங்குகின்றது.

- முதலாவது தமிழ்ப்படம் - "சமுதாயம்" இது 16மில்லிமீற்றர் தயாரிக்கப்பட்டது. இப்படத்தை மலையாள சமூகத்தைச் சேர்ந்த ஹென்றி சந்திரவன்ஸ என்பவர் தயாரித்து இயக்கி வெளியிட்டார். இத்திரைப்படம் அபாரளையிலுள்ள வைஎம்பிஏ மண்டபத்தில் திரையிடப்பட்டது.

- இலங்கையின் முதலாவது 35மில்லிமீற்றர் தமிழ்ப்படம் தோட்டக்காரி இதை இயக்கி கதாநாயகனாகவும் நடித்தவர் கிருஷ்ணகுமார். இத்திரைப்படமே மாளிகைகளில் திரையிட்ட முதல் திரைப்படமாகும்.

- இலங்கை அரசினால் தலைசிறந்த சினிமாக் கலைஞர்களுக்கு சரவிய விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.

- முதன் முதலாக பாடல்கள் இல்லாமல் வெளிவந்த திரைப்படம் அந்தநாள் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த படம்.

- இந்தியத் திரைப்படங்களில் அதிக பாடல்களைக் கொண்டு வெளிவந்த படம்

P. Sujeeba Art - 2014[B]

தீர்த்தங்கள்

தீர்த்தம் என்றால் துறை என்று பொருள். இதற்கு வழி பாதை என்று வேறு பெயர்களும் உண்டு. ஆற்றுக்குள் இறங்குவதற்கு கட்டப்பட்டிருக்கும் படிகளையும் இது குறிக்கும். பின்னர். இது ஆற்றிற் குளிக்கும் இடத்தையே சுட்டலாயிற்று. அதுவே பின்னர் தீர்த்த யாத்திரைக்குரிய புண்ணிய தலமாயிற்று இப்புண்ணிய தீர்த்தங்கள் தெய்வீகம் வாய்ந்த நதிக்கரையில் அமைதல் வேண்டும் என்பது நியதி.

வேத நெறியை ஒட்டிய இதிகாச புராணங்களின் புனித தீர்த்த யாத்திரைக்கு ஏற்றம் தந்து பேசுகின்றன. இதற்கு முன்னோடியாகவும் விளங்குகின்றன. இதிகாச புருஷனான ஸ்ரீ இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டுக்குப் போனான் என்றாலும் அதுவும் தீர்த்த யாத்திரை தான்.

புனித தீர்த்தங்களுடன் தெய்வங்கள் தொடர்புடுத்தப்பட்டுள்ளன. இத்தெய்வங்களின் சாந்நித்யம் இங்கு இருப்பதால் தீர்த்தங்களின் மகிமை உயர்கிறது. விஷ்ணு, சிவன் ஆகிய இருவருமே தீர்த்தங்களில் பெரும்பாலும் தொடர்புடையவர்கள் சிறு தெய்வங்களுக்குரிய தீர்த்தங்களும் உள்ளன. ஆனால் அவை அவ்வளவுக்கு பிரசித்திபெறவில்லை. நாட்டின் பல பாகங்களிலும் விளங்கும் தீர்த்தங்களில் மக்கள் பல இடங்களில் இருந்தும் கூடி கிரியைகள் பலவற்றை நிகழ்த்துவர்.

இந்துக்களின் முக்கிய தீர்த்த யாத்திரைத் தலங்களாக இராமேஸ்வரம், காசி விளங்குகின்றன. இராமேஸ்வரத்தின் வரலாறு இதிகாச புருஷனான இராமனின் வாழ்கையோடு பின்னிப் பிணைந்தது. இராமேசுவரத்தை சுற்றியுள்ள தீர்த்தங்கள் பிரம்ம தீர்த்தம், ஹனுமதீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், இராமதீர்த்தம், ஜடாதீர்த்தம், அக்கினி தீர்த்தம் ஆகியவை ஆகும்.

இந்தியாவிலுள்ள இப்புண்ணிய தீர்த்தங்களை போன்று இலங்கையிலும் புனித தீர்த்தங்கள் பலவுளன. அவற்றில் இலங்கையின் வடபகுதியில் உள்ள கீரிமலைத் தீர்த்தம் திருக்கேதீச்சரத்து பாலாவித் தீர்த்தம், கிழக்குப்பகுதியில் உள்ள கோணேச்சர ஆலய சமுத்திர தீர்த்தம் என்பவை குறிப்பிடத் தக்கவை ஆகும்.

மன்னார் பகுதியில் மாந்தை என்னும் இடத்தில் பாடல் பெற்ற திருத்தலமாக திருக்கேதீச்சரம் அமைந்துள்ளது. மாந்தை பெருந்துறைமுகமாகவும் காணப்படுகிறது. இங்கு ஓர் சிவாலயமும் வரலாற்றுக் காலத்துக்கு முன்னரே இருந்திருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு. திருக்கேதீச்சரமும், பாலாவித் தீர்த்தமும் மிகப் புனிதமாகப் போற்றப்பட்டதென்பதற்கு கதிர்காமக் கல்வெட்டுச் சான்றாக உள்ளது. கதிர்காம ஆலய பரிபாலனத்தில் தவறுகள் செய்தவன் திருக்கேதீச்சரப் பாலாவித் தீர்த்தக்கரையில் பசுவைக் கொன்ற பாவத்தை அடைவான் எனக்காணப்படுகின்றது.

இந்துக்களின் வழிபாட்டு முறையில் தீர்த்த யாத்திரை செய்தல் அவற்றை மனதால் நினைத்தல் என்பன பெரும் புண்ணியம் பயக்கும் என்று கொள்ளப்படுகின்றது. இகழத்தக்க பெரும் பாவங்கள் புரிந்தோரும் புண்ணிய நதிகளிலும் தீர்த்தமாடி அங்கு எழுந்தருளி இருக்கும் தெய்வங்களை மனப் பூர்வமாக தியாணிப்பதன் மூலம் தமது பாவங்களை போக்கலாம். சுருங்கக் கூறின் புண்ணிய தீர்த்தங்களில் தீர்த்தமாடுவது இன்மை மறுமை இரண்டிற்கும் வேண்டிய பேறுகளைப் பெற்றுத்தரும்.

லோ. வஷி

A/L 2014

பண்டிதமணி .சி. கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்மராட்சிப் பிரிவில் உள்ள மட்டுவில் கிராமம் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை குருகவி, மகாலிங்கசிவம் நாவலாசிரியர் ம.க.வே.திருஞானசம்பந்தபிள்ளை உள்ளிட்ட புலமையாளர்கள் பலர் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களாவர். இத்தகைய புகழுடைய மட்டுவிலில் 1899 ஆம் ஆண்டு யூன் மாதம் 27ம் நாள் பிறந்தார். இவரின் தந்தையார் ஆறுமுகம் சின்னத்தம்பி, தாயார் வள்ளிப்பிள்ளை இவரது மரபுவழிப் பெயர் சட்டநாதர் களத்தூர் விநாயகரின் அருள் காரணமாக பிறந்தமையால் இவருக்கு இட்ட பெயர் கணபதிப்பிள்ளை இவருக்கு 2 வயதும் 9 மாதமும் நடக்கும் போது தாயை இழந்தார். பின் தந்தையாரின் அரவணைப்பிலேயே வாழ்ந்து வந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மட்டுவில் அமெரிக் மிசன் பாடசாலையில் சேர்க்கப்பட்டார். இங்கு கிறிஸ்தவ பால பாடங்களும் ஞானப்பால், வேதவினாவிடை மார்க்கு எழுதிய சுவிசேசம் முதலிய கிறிஸ்தவ சமய புத்தகங்கள் கற்பிக்கப்பட்டன. இவர் 5ம் வகுப்புடன் பாடசாலைக் கல்வி முற்றுப் பெற்றது. தந்தைக்கு உதவியாக வயல் வேலைக்குச் சென்றார். சின்னத்தம்பி அவர்களின் பரிதாப நிலை கண்டு உறவினரான உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை மனைவி உமாமகேஸ்வரி சின்னத்தம்பியாரையும் பிள்ளைகளையும் தங்களுடன் இருக்கும்படி கேட்டுக்கொண்டார் இவர்களும் அங்கு தங்கிர் பின்பு இவர் பொன்னையா உபாத்தியாரிடம் கந்தபுராணம், இலக்கணம் முதலானவற்றைக் கற்றார்.

இவர் வண்ணார் பண்ணை நாவலர் பாடசாலையில் காவிய வகுப்பில் கல்வி கற்றார். இவரது காவிய வகுப்பும் 1926 ம் ஆண்டு ஏப்ரலில் முடிவுற்றது. பின்பு 1926ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பண்டித தேர்வுக்குத் தோற்றினார். பண்டிதத் தேர்விலே சித்தியெய்தியதன் மூலம் அன்று வரை சித்தியெய்திய இலங்கையருள் ஐந்தாமவரென்ற நிலையையும் யாழ்ப்பாணத்து ஆண்களுள் முதலாமவரென்ற நிலையையும் பெற்றுக் கொண்டார்.

பண்டிதரான சி.கணபதிப்பிள்ளை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சேர்ந்து ஈராண்டுகள் பயிற்சி பெற்று (1927 – 1928) ஆசிரியர் கலாசாலையிலே குருகவி மகாலிங்சிவத்திடம் மீண்டும் தமிழ் கற்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. கணபதிப்பிள்ளையின் இரசனைப் பாங்கு செழுமையுற்றது. பயிற்சி பெற்ற பண்டிதரான சி.கணபதிப்பிள்ளை திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக ஏறத்தாழ 30 ஆண்டுகள் (1929 – 1959) சேவை செய்தார். கலாசாலை உப அதிபர் பொ.கைலாசபதி அவர் கட்கும் சி.கணபதிப்பிள்ளைக்கும் இடையே ஏற்பட்ட தொடர்பு சமய தத்துவ இலக்கிய நோக்கங்கள் தனித்துவமான முறையிலே அமைவதற்கு வழி சமைத்தது.

இவர் பண்டிதத் தேர்வுக்கு படித்துக் கொண்டிருந்த போதே மட்டுவில் சந்திரமௌலீச பாடசாலையில் ஏறத்தாழ ஈராண்டுகள் வார இறுதி நாட்களில் கவிய வகுப்புக்கள் நடாத்தி வந்தமை குறிப்பிடத்தக்கமை. சி.கணபதிப்பிள்ளை ஆரம்ப காலத்தில் தொடர்பு கொண்டிருந்த சங்கம் ஈரப்பலா வளவுச்

புரசர்களான தம்மை உயர்ந்ததோர் குழாமாக கருதிக் கொண்டு மேலைத்தேய கல்வியிலும் கீழைத்தேய ஆன்மீகம், கலை கலாச்சாரங்களிலும் மாற்றங் கொண்டிருந்த இளைஞர் சிலரின் இணைப்பில் உருவானதோர் ஈரப்பலாவளவுச் சங்கம் இங்கு தலைவர் என்று ஒருவர் இல்லை. இக்கால நிலையத்துடன் திரு. சு. நடசேம்பிள்ளையை தலைவராகவும் கலைப்புலவர் ப.நவரட்ணம் அவர்களை செயலாளராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

சி.கணபதிப்பிள்ளையின் இலக்கிய சொற்பொழிவுகளும் முதன் முதலாக மேடையேற்றிக் கொடுத்தது. முதற் சொற்பொழிவு சின்னத்தம்பி புலவர் பற்றியது. ஏனைய சொற்பொழிவுகளில் "வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை, நாவலரும் தமிழும், குலசேகர பாக்கியானம், குமாராமிப் புலவர்" என்பன சிலவாகும். ஞாயிறு சஞ்சிகை வெளியீட்டுக் குழுவிலும் நூலாய்வுக் குழுவிலும் சி.கணபதிப்பிளை உறுப்பினராக இருந்துள்ளார். சைவவித்தியா விருத்திச் சங்கத்திற்கும் சி.கணபதிப்பிள்ளைக்கும் இடையிலான உறவு நெருக்கமானதாகும். இவர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஒத்தாசையுடன் காவிய பாடசாலையை மும்மொழி காவிய பாடசாலை ஆகவும் வளர்த்தெடுத்தார் காவிய பாடசாலையின் நெசவு வேலை, அச்சுக்கூட வேலை, தோட்ட வேலை, குருமார் வகுப்பு என்பனவற்றை ஆரம்பிக்கும் நோக்கமும் சி.கணபதிப்பிள்ளைக்கு இருந்தது.

நைட்டிசுப் பிரம்மச்சாரியாக வாழ்ந்த சி.கணபதிப்பிள்ளையின் வாழ்வு 1908 ம் 03.13இல் நிறைவு கண்டது. தமது புலமைக்காகவும் தாமாற்றிய பணிகளுக்காகவும் தாம் வாழ்ந்த காலப்பகுதியிலேயே பல பிரச்சினைகளும் பாராட்டுக்களும், பட்டங்களும் பெற்றுள்ளார். இளமைக்காலத்திலேயே மதுரைச் தமிழ்ச்சங்கப் பண்டிதத் தேர்வில் சித்தியடைந்த வேளையில் நாவலர் பாடசாலை மனேஜர் த.கைலாசப்பிள்ளை அவர்களால் தங்கப்பதக்கம் பெற்றார். முதுமைக்காலத்தின் கந்தபுராணம், தசகாண்டம் உரைக்கு 1967 ம் ஆண்டும், கம்பராமாயணம் சாட்சிகளுக்கு 1980 ஆண்டு இலக்கண சாகித்திய மண்டலப்பரில்கள் பெற்றார். திருமுறை விழாவில் குன்றக்குடி அடிகளாரால் உருத்திராக்க மாலை வழங்கப்பெற்று பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இவர் பெற்ற பட்டங்களுள் 1951 பண்டிதமணி என்ற பட்டம் குறிப்பிடத் தக்கதாகும். இப்பட்டம் கல்கி ஆசிரியர் அவர்களால் வழங்கப்பட்டது என்றும் ஒரு சாராரும் தினகரன் ஆசிரியரால் வழங்கப்பட்டது என ஒரு சாராரும் நீண்ட காலமாக எழுதி வந்துள்ளனர். 'சமயக்கட்டுரைகள்" நூலின் வெளியீட்டு விழாவில் 1961 முன்னால் கல்வி அதிகாரி. க.ச.அருள்நந்தி அவர்களால் "சைவசித்தாந்தசகாரம்" என்ற பட்டம் வழங்கப்பெற்று முதுபெரும் புலவர் என்ற பட்டமும் 1970 மகாவித்துசன் என்ற பட்டமும் 1971 காஞ்சி மடலாய ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளால் வழங்கப்பட்டது. இலங்கைப் பல்கலைக்கழகம் கௌரவ இலக்கிய கலாநித்திப்பட்டம் 1978 வழங்கி கௌரவித்தது. இலங்கையில் பிறந்து வளர்ந்த தமிழ் அறிஞர்களுள் இத்தகைய பட்டம் பெற்றோருள் முதலாமவராக சி.கணபதிப்பிள்ளை விளங்குகின்றமை விதந்துரைக்கப்பட்டதாம்.

ர. விதுரா
கலைப்பிரிவு A/L 2013

இலங்கையின் பிரதான உற்பத்திகளும் காணப்படும் நிலையங்களும்

பிறீமா ஆலை	:- திருகோணமலை
சோயா ஆராய்ச்சி நிலையம்	:- பல்லேகலை
இரும்புருக்குத் தொழிற்சாலை	:- ஒறுவல
உலோக ஆலை	:- யக்கல
ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை	:- ஜின்தோட்டை
கட்டிப்பால் தொழிற்சாலை	:- பொலன்னறுவ
பால்பதனிடும் தொழிற்சாலை	:- அம்பேவல
அப்படைட் கிடைக்குமிடம்	:- எப்பாவெல
பெற்றோல்லிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்	:- சபுகஸ்கந்த

ப. நிசாயினி

உலக அதிசயங்களில் ஒன்று

1) உலக அதிசியங்களில் ஒன்று ஈபில் கோபுரமாகும்
2) இது பிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரில் உள்ளது
3) இதனை வடிவமைத்தவர் அலெக்ஸ்சாண்டர் கஸ்வேட் ஈபில் என்னும் கட்டடக்கலைப் பொறியியல் வல்லுனர் ஆவார்.
4) பாரிஸ் நகரில் 1887ல் நடைபெற்ற உலகக் கண்காட்சி நினைவாக இக்கோபுரம் எழுதப்பட்டது.
5) இது 279 சதுர அடி உயரம் நான்கு தூண்களின் மேல் எழுப்பட்டுள்ளது
6) ஈபில் கோபுரத்தில் உயரம் 984-25 அடி ஆகும்
7) இக்கோபுரத்தில் 189அடி,380அடி,906அடி உயரங்களில் பார்வையாளர்கள் நின்று
   பரிசைக் கண்டுகளிக்க நடைபாதைகள் உள்ளது.
8) படிக்கட்டுக்கள் மூலம், மின் உயர்த்தி மூலமும் பார்வையாளர்கள் கோபுரத்தின்
   மேற்குபகுதிகளுக்குச் செல்லலாம்.
9) இக்கோபுரத்தைக் கட்ட 7300 தொன் இரும்பும் எஃகும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கு. மதுஜா - தரம் 05

ஐந்தின் மகிமை

1) பஞ்ச உலோகங்கள் :- இரும்பு. செம்பு. ஈயம். வெள்ளி. பொன்.

2) பஞ்ச இலக்கணம் :- எழுத்து. சொல். பொருள். யாப்பு. அணி

3) பஞ்ச இரத்தினம் :- சுகர்தி. பொன். முத்து. மாணிக்கம். மரகதம்.

4) பஞ்ச சீலம் :- கொல்லாமை. கள்ளாமை. கள்ளுண்ணாமை. பொய்யாமை. காமின்மை

5) பஞ்ச கௌவியம் :- தயிர். நெய். பால். கோமயம். கோசலம்.

6) பஞ்ச காவியம் :- சிலப்பதிகாரம். மணிமேகலை. சிந்தாமணி. வளையாபதி. குண்டலகேசி.

சி. கேசண்யா
தரம் - 06 A

இலங்கையில் கல்வித்துறை சார்பான சிலவிடயங்கள்.

1893 - இலங்கை தொழிநுட்பக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது - மருதானை
1942 - கொழும்பில் இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.
1945 - இலங்கையில் இலவசக் கல்வித்திட்டம்.
1952 - புலமைப் பரிசில் திட்டம் அறிமுகம்
1956 - சுய மொழிகள் போதனை மொழியாக்கப்பட்டது.
1966 - பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டது.
1968 - விஸ்கோத்து நிகழ்ச்சித்திட்டம்
1972 - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
1980 - இலவசப் பாடநூல் வழங்கப்பட்டது - திறந்த பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.
1985 - தேசிய கல்வி நிறுவகம் உருவாக்கம்
1986 - மகா பொல புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் உருவாக்கப்பட்து.
1987 - தேசிய பாடசாலை உருவாக்கம்
1989 - இலவச மதிய உணவுத்திட்டம்
1993 - இலவசச் சீருடை விநியோகம்
1999 - பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறை
2000 - பாசாலைகள் கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது.

உ. துஷ்யந்தினி
தரம் - 09 B

விடுகதைகளும் பழமொழிகளும்

விடுகதைகள்

1) மழைக்காலம் வந்துவிட்டால் மகாராசி பாட்டெடுப்பாள் அவள் யார்?
தவளை

2) தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர் அவர் யார்?
சூரியன்

3) கல்வீட்டுத் தாத்தா மெதுவாகத்தான் நடப்பார் அவன் யார்?
நத்தை. ஆமை

4) வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார்?
மண் புழு

5) புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தாங்குவதே ஓராண்டு அவன் யார்?
நாட்காட்டி

6) வெய்யிலில் மலரும் காற்றில் உலரும் அவன் யார்?
வியர்வை

S. Lavanya
Year - 5 A

7) தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்?
பென்சில்

8) உயிரில்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவார் அவர் யார்?
தராசு

9) ஊசி போட்டவைத்தியர் பாடிக் கொண்டு போகின்றார் அவர் யார்?
நுளம்பு

10) வரும்போது வெண்சிவப்பு! வளரவளரத் தகதகப்பு! போகும் போது கடும்சிவப்பு! அது என்ன? செங்கல்.

விடுகதை

1) அன்றாடம் மலரும் அனைவரையும் கவரும் அது என்ன?
கோலம்

2) ஒரு கிணற்றுக்குள் ஒரு தவளை அது என்ன?
நாக்கு

3) அம்மா குப்பையில் பிள்ளை சந்தையில் அது என்ன?
தேங்காய்

4) ஓடும் சங்கிலி உருண்டோடும் சங்கிலி பள்ளத்தைக் கண்டால் பாய்ந்தோடும் சங்கிலி அது என்ன? வெள்ளம்

5) தன்னிடம் சேருபவனை தன்னைப் போலவே மாற்றுவான் அது என்ன?
பால்

6) வில்லாய் வளைபவன் ஒருபோதும் ஓடிந்து போகமாட்டான் அது என்ன?
அறுகம்புல்

7) அமாவாசைக்கு வயதானால் பௌர்ணமி ஆகும் அது என்ன?
தலைமுடி

8) தலையைச் சீவினால் கறுப்பு நாக்கை நீட்டும் அதுஎன்ன?
பென்சில்

9) சுண்டிவிட்டால் இரத்தம் வராது ஆனால் வெற்றி தோல்வி வரும் அது என்ன?
நாணயம்

10) ஊசிபோட்ட வைத்தியர் பாடிப்பாடிப் போராரு அது என்ன?
நுளம்பு

இ. ரிஷானா
தரம் - 06 A

பழமொழிகளும் கருத்துக்களும்

1) அழுத பிள்ளை பால் குடிக்கும்
முயற்சி செய்தவர் பயன் பெறுவர்.

2) இரக்கப் போனாலும் சிறக்கப்போ
வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.

3) பேராசை பெருந்தரித்திரம்
எல்லை கடந்த ஆசை துன்பம் தரும்.

4) முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்?
விடாது முயற்சி செய்தால் வெற்றி கிட்டுவது நிட்சயம்.

5) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது.

6) கோபம் பாவத்தைத் தேடும்
கோபம் ஒருவனுக்குத் தீமையே ஏற்படுத்தும்

7) உண்ணாச் சொத்து மண்ணாய் போகும்
உலோபத்தனம் கூடாது.

8) அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும்
விடா முயற்சி வெற்றிதரும்

9) ஈட்டி எட்டின மட்டும் பாயும் பணம் பாதாளம் வரையும் பாயும்
ஈட்டி ஆனது எறியும் வேகத்தின் அளவுக்குப் பாயும். ஆனால் பணம் பாதாளம் மட்டும் பாயக்கூடியது.

10) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
நன்றி மறவேல்.

11) ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
ஊர்மக்களுடன் பகைத்தால் சந்தோசமாக வாழ முடியாது.

12) எலி வளையானாலும் தனிவளை வேண்டும்.
தனக் கென தனியான இடம் அவசியம்

13) ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது
அனுபவமற்ற கல்வியால் பயனில்லை.

14) ஆத்திரக் காரனுக்குப் புத்தி மத்திமம்.
கோபம் சிந்தனைக்கு இடையூ று

15) அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய்
பயமுள்ளவனை எல்லாமே பயமுறுத்தும்.

16) நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது.
நினைத்தபடி எதுவும் நடப்பதில்லை

17) விளையும் பயிரை முளையிலே தெரியும்.
ஒருவனின் சிறுவயதுப் பழக்கவழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம்.

18) சிறுதுளி பெரு வெள்ளம்
சேமிப்பின் மகிமை

19) ஆழமறியாமல் காலை விடாதே
எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

20) ஆணைக் கொருகாலம் பூ னைக் கொருகாலம்.
காலம் மாறிமாறி வரும்.

உ. துஷாளினி
தரம் - 5 B

பழமொழிகளும் கருத்துக்களும்.

1) மலடியின் பிள்ளை குதிரையின் கொம்பில் ஏறி ஆகாயத்தில் பூப் பிடுங்கினாள்.
மலடிக்கு பிள்ளை இல்லை குதிரைக்குக் கொம்பு இல்லை ஆகாயத்தில் பூ இல்லை.

2) பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்.
ஒருவனது துன்பம் மற்றவனுக்கு மகிழ்ச்சி.

3) ஆலையில்லா ஊருக்கு இலுப்பம் பூச் சக்கரை
அற்பனுக்கு மதிப்பு.

4) உண்மை சொல்லிக் கெட்டார் இல்லை.
உண்மையின் உயர்ச்சி.

5) உண்ணாச் சொத்து மண்ணாய் போகும்.
உலோபத்தனம் கூடாது.

6) எடுக்கிறது பிச்சை ஏறுகிறது பல்லக்கு.
வீண் பெருமை

7) துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
அமைதியின்மை ஆபத்தைத் தரும்.

8) கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
பேராசை

9) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி
முன்மாதிரி

10) ஓட்டைக் குடத்தில் நீர் வார்ப்பது போல்.
பயனற்ற செயல்.

11) இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை
தருமம் செய்து கெட்டவர்கள் இல்லை

12) கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
நம்பிக்கை காக்கும்.

13) வேலியே பயிரை மேய்ந்தது.
காவற்காரனே சொத்தை அழிப்பது.

14) பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.
துன்பம் நேர்ந்தவர்க்கே தொடர்ந்தும் துன்பம் ஏற்படல்.

15) தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்.
பிறருக்குத் துன்பம் ஏற்படும் போது அதன் பாதிப்பு ஒருவருக்கு விளங்காவிட்டாலும் அத்துன்பம் தனக்கு ஏற்படும் போது அதன் பாதிப்பு விளங்கும்.

16) கொடிக்குச் சுரைக்காய் பாரமில்லை.
ஒரு தாய்க்குத் தன்பிள்ளை என்றும் சுமையில்லை.

17) மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
போலிப் பொருட்களைக் கொண்டு காரியம் சாதிக்கத் துணிதல்.

18) அராக்காசுக்குப் போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது.
ஒருவன் சிறு நன்மை கருதி இழக்கும் மதிப்பினை பின்பு எவ்வளவு தான் முயன்றாலும் மீண்டும் பெறமுடியாது.

19) அறையிலாடியன்றோ அம்பலத்தில் ஆட வேண்டும்.
ஒருவர் தனது காரியத்தை நன்கு பயிற்சி செய்த பின்பு பகிரங்கமாகச் செய்து காட்டல் வேண்டும்.

20. கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?
நிதர்சனமான ஓர் உண்மையை நிறுவுவதற்கு எதுவும் தேவையில்லை.

பா. தர்மிலா
தரம் - 06 B

பழமொழிகள்

1) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
2) கந்தையானாலும் கசக்கிக்கட்டு
3) ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
4) ஆணைக்கும் அடி சறுக்கும்
5) எறும்பூரக் கற்குழியும்.
6) இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை
7) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
8) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
9) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
10) சுத்தம் சுகம் தரும்.
11) ஆணைக்கொரு காலம் பூனைக் கொருகாலம்.
12) பேராசை பெருநட்டம்.
13) கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை
14) நித்தம் போனால் முத்தம் சலிக்கும்.
15) மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
16) கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
17) உப்பிட்டவரை உள்ளவும் நினை.

உ. தீபிகா
தரம் - 06 A

ENGLISH

My Ambition

B. Tharmila
Year - 06 A

Most people live in this world without aim. They lead their life as it comes that type of life is dull and often ends in misery it is true that we can't accomplish everything we want to But it is also natural that we should plan before we do. We must have clear idea about our future. We should fix what we call an ambition Ambition can lead to progress and prosperity.

When I was studying in year four I fell sick. I was admitted to Jaffna hospital warded there for several weeks the doctor who treated me was very able and clever. He was very soft, polite and palient. His simplicity kindness and devotion to duty captured the hearts of all.

His image got impressed deep in my young heart – I decided to follow his footsteps. Thus a seed was sown in my heart – It became my ambition. Now I am studying hard to achive my goal. The doctor is my "Guru" and idol. My ambition is not based on selfishness. I shall not go after wealth or fame but service shall be motto. I believe that there can be no service better than the healing touch of a kind doctor. I shall serve god through serving the sick.

A Visit To A Farm

Last week our class visited to a farm which was closed to our school. It was a well – planned large farm. There were three different sections. The first was poultry. There were many large cages for the birds. There were over two thousands birds in the farm. I was amazed to see such a large poultry. The next was a dairy. There were about fifteen cow is in a large shed. The cows were fat and healthy. This farm produces one hundred liters of milk a day. There was a large fielding which fruit plants and vegetable were grown. There was a nursery for fruit plants and vegetable seedlings. They are for sale there. This farm is a great blessing to the people of the area.

k. kami

Importance of English

English is an international language. It is spoken all over the world and it is the linking language to so many countries and races. It is a noble language and possesses a great literature. It is very essential to face the challenges posed by a competitive and professional world.

English Language was introduced to Sri Lanka under the British rule. It has been spoken written and read by large numbers and was the medium of instruction in the schools and colleges but after the independence our govermntignored English language and made mother tongue the state language. Due to this the youths of Sri Lanka faced a lot of difficulties in this competitive world in aboard.

Today people are aware of the importance of English, because it is the language of scientific search the language of businesses all over the world. English is rich in all the fields you can find books in any fields in English. If you are likely to get a job in government or private sectors, it is absolutely necessary to know English very well. If you want to specialize in a particular field you need a sound knowledge and must have high fluency in conversing too. Even to be a sales man in a city super market you ought to know some English. otherwisne you can't converse with foreigners.

Now everyone has realized the fact the importance of English. It you know English you get an extra confidence to go anywhere in the world. In short a knowledge of English is the key to prosperity to meet the challenges in this advancing world without any fear.

S.Sarana
Year 06 A

Thank you



Aeroplanes Fly
Where do They Fly?
They Fly in the Sky.



Ships Salil
Where do the sail?
They Sali on the sea.



Buses go!
Where do they go?
They go on the road

Trains run!
Where do they run?
they run on the Rails.

T. shalini
grade 06 A

My Flower Garden.

I have beautiful flower garden in front of my house. I started it two years ago. My cousin helped me to plan the beds. There are more then fifteen varieties of flower plants in it. I have but a strong fence around it.

The flower plants in my garden are very healthy often I weed the garden and keep it clean. I water the plants regulary. I manure them and use pesticides at the correct time. My parents help me to keep the farden healthy. It makes our home look beautiful.

In the morning the flowes bloom and the garden is filled with colours. Sweet smell over flowers From the garden. People come and collect flower from my garden for weddings and temple ceremonies It is a very pleasant past time for me.

M. Niroja
Year - 7 B

Thank You

FRIEND SHIP

Oh what joy it is
To have a friend like you
for giving me strength
The way you do

For lifting me up
When i'm feeling down
And putting a smile on my face
When I'm wearing a frown

Thanks for being there
and helping me grow
your friend ship means a lot
This I'd like you to know

A. Ajitha
Year - 08

கடந்த காலங்களில் வாசிப்பு மாத நிகழ்வுகளில் சில.....

2013 ஒக்டோபர் 01 முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரை

ரூ.2,500/- பணவைப்புச் செய்யும் உங்களுக்கு

மக்கள் வங்கியின்

இசுறு உதான

கிட்ஸ் லேர்னிங் லெப்டொப்

500

இனை வெல்லும் வாய்ப்பு

புதிதாக ஆரம்பிக்கும் அல்லது ஏற்கனவேயுள்ள
"இசுறு உதான" கணக்கில் ரூ. 2,500/- அல்லது
அதற்கு மேற்பட்ட தொகையினை வைப்புச் செய்து பெறுமதியான
Kids learning Laptop இனை வெல்லுங்கள் ...

மக்கள் வங்கி

டெலஸ்கோப்

1000

இனை வெல்லும் வாய்ப்பு

சிசு உதான

சிறந்த எதிர்கால சந்ததியினர்

புதிதாக ஆரம்பிக்கும் அல்லது ஏற்கனவேயுள்ள
"சிசு உதான" கணக்கில் ரூ.2,500/- அல்லது
அதற்கு மேற்பட்ட தொகையினை வைப்புச் செய்து பெறுமதியான
Telescope இனை வெல்லுங்கள் ...

2013 ஒக்டோபர் 01 முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரை வைப்புச் செய்யும்
ஒவ்வொரு ரூ. 2,500/- ற்கும் ஒவ்வொரு வெற்றி லாய்ப்பும் கிட்டும்.
இக்காலப்பகுதியில் ரூ. 2,500/- இனை பகுதி பகுதியாகவும் வைப்புச் செய்ய முடியும்.

சிறந்த எதிர்காலத்திற்கு பயன்தரும் பரிசுகளை வென்றிட,
நீங்களும் இன்றே மக்கள் வங்கிக்கு வாருங்கள்.

AA- Brand Finance Rating, AA+ Fitch Rating

*நிபந்தனைகளுக்குட்பட்டது.

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

ஆசிரியர்களின் ஆக்கங்கள்



நூலகம் பற்றிய ஒரு பார்வை

திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
(ஓய்வு பெற்ற அதிபர்)

1913ம் ஆண்டு தை மாதம் 20ம் திகதி யாழ்ப்பாண தமிழ்மக்களின் விடிவுநாளாகும் அன்றுதான் தமிழ்ப்பெண்களுக்கு அறிவினையும் பண்பாட்டையும் ஊட்டும் கலைக்கோயிலாக இராமநாதன் கல்லூரி மருதனார்மடத்தில் ஆரம்பிக்கப்பட்டது தீரிக்கதர்சனமான சிந்தனையுடைய பலதுறைப் பரிமாணங்ளையும் முழுமையாகக்கொண்ட சேர் பொன் இராமநாதன் அவர்கள் மதமாற்றத்தினால் சரிவுகண்ட தமிழர் பண்பாட்டினை கல்வி அறிவினால்த்தான் கட்டியெழுப்பமுடியும் என உணர்ந்து விடுதிச் சாலை ஆலயம் விளையாட்டுமைதானம் நூலகம் எல்லாவற்றையும் கொண்ட ஒரு கல்லூரியாக இராமநாதன் கல்லூரியை நிறுவினார்

ஆழ்த்த கல்வியறிவும், ஒழுக்கமும் சமயப் பண்பாடும் வாய்ந்த பெண்கள் ஆண்களைவிட தேசிய முன்னேற்றத்திற்கு அதிகம் உதவுவர் என்ற கொள்கையுடையவராக

"ஆண்மகன் ஒருவருக்கு கல்வியளிக்கும்போது
தனிமனிதன் ஒருவனே கற்றவனாகின்றான்
ஒரு பெண்ணுக்கு அறிவு புகட்டும்போது
அவள் குடும்பத்தினர் அனைவரையும் அதன் மூலம்
சமுதாயம் முழுவதையுமே அறிவுடையவர் ஆக்குகிறோம்

என்று அவரது கோட்பாட்டினடிப்படையிலேயே கல்லூரியை உருவாக்கினார்.

தமிழ்,சமஸ்கிருதம்,இலக்கியம் என்பவற்றுடன் இசை நடனம் முதலியன நுண்கலைகள் என கீழைத்தேய கல்வியையும் ஆங்கிலம்,விஞ்ஞானம் போன்ற மேலைத்தேயக் கல்வியையும் மாணவர்கள் கற்று சமய பற்றுள்ள கல்வியறிவுள்ள நற்பிரஜைகளாக்குவதே சேர் பொன் இராமநாதனவர்களின் கல்வி இலக்காக இருந்தது இதனால் கலைத்திட்டம் ஒன்றை தானே வகுத்துக் கொண்டார் இவரது கலைத்திட்டத்தில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் எழுத்து வாசிப்பு இலக்கணம் என்பவற்றையும், விஞ்ஞானம், புவியியல் ஆகிய பாடங்களும் கற்பிக்கப்பட்டது. இதனால் இப் பாடங்களுக்குரிய நூல்களையும் வேதம் ஆகமம் புராணங்கள் சைவ சித்தாத்த சாஸ்த்திரங்கள் போன்ற கிருதிகளை சுத்தியை அளிக்கக்கூடிய சமய அறிவை வழங்கும் நூல்களையும் கொண்ட ஒரு அறை நூலகமாக இருந்தது.

குருகுல கல்வி முறையில் மாணவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாவார் என்பதனால் ஆசிரிர், அதிபர்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். கோவா நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட அதிபர் திருமதி **N.P** பிள்ளையவர்கள் கல்லூரியின் கல்வி, பண்பாடு ஒழுக்கம் எல்லாவற்றையும் உயர்த்தி முன்னனி நிறுவனமாக்கியதனால் தனி ஆளுமையுடையவராக திகழ்ந்தார். இவரது கணவர் **N.P** பிள்ளையவர்கள் பரமேஸ்வராக்கல்லூரி ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்ற பின்னர் இராமநாதன் கல்லூரி நூலகத்தைப் பொறுப்பேற்றார். நூல்கள் இருந்தபோதும் நூலகத்துக்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ள போதுமான இடவசதிகள் காணப்படாமையினால் நூலகத்திற்கான அறை விசாலமாக்கப்பட்டு புத்தகங்கள் வைக்கக்கூடிய வசதிகள் இவரால் ஏற்படுத்தப்பட்டது. நூலகப்பாவனையை சீராக்குவதற்காக கல்லூரியில் ஆசிரியர்களின் ஒரு

பாடவேளை நூலகத்திற்காக பிள்ளையவர்களின் ஆலோனையின்படி ஒதுக்கப்பட்டது மாணவர்கள் நூலகத்தில் இருந்து இரவலாக நூல்கள் பெற்றுச்செல்லக்கூடிய வழிமுறை மேற்கொள்ளப்பட்டது இதனால் விடுதி மாணவர்களின் வாசிப்புப்பழக்கம் அதிகரித்தது புதிய நூல்களை தேவைக்கேற்ப கொள்வனவு செய்வதுடன் அன்பளிப்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டது இவருடைய காலத்தில் நூலகம் 12000 புத்தகங்களை யாழ்ப்பாணத்திலிருந்த முன்னிக்கல்லூரிகளின் நூலகங்களில் ஒன்றாக இருந்தது. நூலகவளர்ச்சியின் அச்சாணியாக இருந்தவர் திரு.N.P பிள்ளையவர்களேயாகும்.

இவருக்குப்பின்னர் அரசாங்கம் கல்லூரியை பொறுப்பேற்றபோது நூலகம் கையளிக்கப்படவில்லை .அதனால் நிரந்தர நூலகர் நியமிக்கப்படாமையால் பழையமாணவிகள் நூலகர்களாக கடமையாற்றினர். பழைய மாணவிகளின் அபிமானத்துடன் நூலகசேவை நடைபெற்ற போது மாணவிகளின் தேடிக்கற்கும் பழக்கமும் அதிகரித்தது 1960ல் -1968வரை க.பெ.த உயர்தரம் கலைப்பிரிவு மாணவிகள் இலங்கையில் முதனிலைப் பெறுபேறுகள் பெற்று வந்தமைக்கு நூலகப்பயன்பாடு முக்கிய காரணமாகும்.

உயர் கல்வியைக்கற்ற கல்லூரி மாணவிகளான செல்வி கலா ஸ்ரீனிவாசன், செல்வி உமா பசுபதி, செல்வி தங்கராணி நூலகப் பொறுப்பாளர்களாக கடமையாற்றியுள்ளார்கள். (ஏனையோரின் விபரங்களைப் பெறமுடியவில்லை)

1986வரைக்கும் சுமூகமாக இருந்த கல்லூரி 1987ம் ஆண்டு வன் செயலால் எல்லாவற்றையும் இழந்து வெறுமையாகியது ஒழுங்காகபாதுகக்கப்பட்ட நூல்கள் அனைத்தும் சின்னாபின்னமாகின நிலமை ஓரளவு சுமூகமாக அப்போதைய அதிபர் திரு. ஞா. சோமசுந்தரம் ஆசிரியை பத்மநாதன் ஆகியோர் சென்றபோது சுடுகாடாக இருந்த கல்லூரிக்குள் புத்தங்களை மட்டும் குவித்து பாதுகாப்பாக வைத்திருத்து ஒப்படைத்த இராணுவ அதிகாரிகளின் மனிதனேயத்தையும் கண்டனர். 1987ம் ஆண்டு பதவியேற்ற திருமதி ஸ்ரீமதி குமாரசாமி பலசவால்களுக்கு முகம்கொடுத்ததுடன் நூல்நிலையத்தை மீள ஒழுங்குபடுத்துவதற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதமநூலகர் திரு. முருகவேளிடம் மாணவிகள் பயிற்சிக்காக அனுப்பினார் பாராளுமன்ற உறுப்பினர்கள் தூதராலையங்களின் உதவிகள் பெறப்பட்டு நூலகம் வளம்படுத்தப்பட்டது .செல்வி வானதி நூலகப்பொறுப்பளராக அந்நேரத்தில் கடமைபுரிந்தார்.

கல்லூரியின் விடுதி வன்செயல்களின் பின்னர் மூடவேண்டி ஏற்பட்டதனால் விடுதிச்சாலையின் ஒரு பகுதிக்குள் நூலகம் தன்னைக் சுருக்கிக்கொண்டது நாட்டில் அசாதாரண நிலைமை தொடர்ந்தமையால் நூலகத்தை விரிவித்து கொள்ள முடியவில்லை நிரந்தர நூலகர் இல்லாதநிலையில் பழைய மாணவிகள் நூலகர்களாக பனியாற்றும் நிலைமையும் தொடர்ந்தது.

நாட்டில் அசாதரண நிலைமை தொடர்ந்துடன் இராணுவ நடவடிக்கைகளும் இடம் பெற்றமையால் இடம் பெயர்ந்தவர்கள் தங்குமிடமாக பலதடவை கல்லூரி மாறியது 95ம் ஆண்டு இடம்பெயர்வின் பின்னர் நூலகம் மீண்டும் சின்னாபின்னமாகியது அதிபர் எதிர் நோக்கிய பிரச்சனைகளால் அப்போதைய மாகாணகல்விப்பணிப்பாளரிடம் பல முறை விடுத்த வேண்டு கோளின் பயனாக நிரந்தர நூலக உதவியாளர் ஒருவர்

நியமிக்கப்பட்டார். நூலகம் மீண்டும் ஒழுங்குபடுத்தப்பட்ட போதும் நிலைமை சீராகவில்லை. நிரந்தரக் கட்டிடமின்மையும் நிதியின்மை தொடர் பிரச்சனையாகியது.

நூலகம் விடுதிக்கட்டிடங்கள் அதிபர் விடுதி என இடம் மாறிமாறி இறுதியாக சேர் பொன் இரமநாதன் அவர்களின் இல்லத்தில் ஓரளவிற்கு இயங்கத் தொடங்கியது. மிகப் பழையகட்டிடத்தில் நூலக அமைப்பு எதுவுமற்ற நிலையில் நூலக உதவியாளர் மாணவர் முயற்சியினால் நூல்கள் பாதுகாக்கப்பட்டது. மிகப் பழைய சேர் பொன் இராமநாதவர்கள் இல்லத்தில் நூல்களை ஒழுங்குபடுத்தமுடியாத நிலையில் இருந்தபோது நூலகக் கட்டிடம் வலயக்கல்விப் பணிமனையினால் நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டது. நூல் சீராக்கம் பற்றி நடத்தப்படும் கருத்தரங்குகளில் பலதடவைகள் பங்குபற்றிய நூலக உதவியாளர் ஒழுங்குபடுத்துவதற்கு கட்டிடம் இல்லாத குறையை கூறிவந்துள்ளார். எனினும் நூலக உதவியாளர் நூலகவிஞ்ஞானம் கற்றிருந்தமையால் நூலகத்தை சீரமைத்து மாணவர்கள் இலகுவாக பயன்படுத்தக்கூடிய முறையை நடைமுறைப்படுத்தி மாணவர் பாவனையை அதிகரிக்க வழியமைத்தார் மேலதிகமான நூல்கள் (மாணவர் தரத்திற்கு அப்பாற்பட்டவை) யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது நாட்டில் ஏற்பட்ட அனைத்து யுத்த நடவடிக்கையின்போதும் கல்லூரி பாதிக்கப்பட்டு வந்தமையால் நூலகமும் அதற்குரிய கட்டிடத்தில் இயங்கும் வாய்ப்பை பெற்றுக்கொள்ளவில்லை

எனினும் புதிய G.T.Z மண்டபத்தில் சிறுவர் நூலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது முன்னாள் ஆசிரியை T. செல்லையாபிள்ளை அவர்கள் 1985ம் ஆண்டிலேயே 1-6 வரையான மாணவர்களுக்கு தனிநூலகம் வேண்டும் என்ற நோக்குடன் சிறவர்களுக்கான நூல்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தார் 2002ம் ஆண்டு கல்வியியற் கல்லூரி கட்டுறுபயிலுனர் திரு. கிருபாகரன் தனது செயற்றிட்டமாக சிறுவர் நூலகத்தை கல்லூரி அனுசரனையுடன் உருவாக்கினார் பகுதித்தலைவரின் அதீதகவனத்தினால் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் நூலகத்தை ஆர்வமாக பயன்படுத்ததொடங்கினர்

நாட்டில் 2010ம் ஆண்டின் பின்னர் சுமூகமான நிலமை காணப்படுவதனால் நூலகமும் சொந்தக்கட்டிடத்தில் நிலைகொள்ளத் தொடங்கியுள்ளது நீண்டகால முயற்சி அண்மையில் வெற்றியடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்

கல்லூரியில் மேலும் நவீனப்படுத்தப்பட்ட நூலக அமைப்பைக் கொண்ட புதிய கட்டிடம் ஒன்றை அமைத்துக்கொள்ள எடுத்த முயற்சிகள் காலத்தின் சூழ் நிலையால் சாத்தியமற்றுப் போனாலும் எதிர்காலத்தில் புதிய நூலம் ஒன்றை அமைப்பது காலத்தின் தேவையாகும்

தற்காலத்தில் நூலகபாவனையை கணனி ஆக்கிரமித்துக்கொண்டுள்ளமையால் வாசிப்புப்பழக்கம் மாணவர்களிடம் குறைந்து செல்கிறது நூல்களின் அறிவைத்தேடுவதற்கு மாணவர்கள் விரும்புவதில்லை. எனினும் நூல்கள் மூலம் தெளிவான அறிவினை மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் ஆளுமையை வளர்க்கவேண்டிய தார்மீகக்கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

"வாசிப்பு மனிதனை பூரண மனிதனாக்குகிறது" என்பது காலத்தால் அழிக்க முடியாததாகும் சிறந்தபல நூல்களைக் கொண்டிருக்கும் கல்லூரி நூலகத்தைபயன்படுத்தி தங்களுடைய அறிவைமேம்படுத்துவது மாணவர்களின் கடமையுமாகும்.

" தான் கற்ற நூலறிவேயாகும்
நுண்ணறிவு"

ஔவையார்

பாடசாலை நூலகங்களும் அதன் வளர்ச்சிப்பாதையும்.....

கா. உதயகுமாரன்
இதழாசிரியர்

ஆரம்ப காலத்தில் நூல் அகம் நூலகம் என்ற கருப் பொருளுடன் நூல்களை சேர்த்து வைக்கும் ஒரு இடமாகவே நூலகம் காணப்பட்டது. அதாவது தகவலைப் பெற்று ஒழுங்குபடுத்தி தேவையான தகவலை தேவையான வாசகருக்கு தேவையான நேரத்தில் சேவைக்கு விடுதல் என்ற நோக்கில் நூலகம் இயங்கியது. இன்று நூலகம் என்ற கருத்து மாறி "தகவல் மையம்" என்ற அளவிற்கு விரிவடைந்துள்ளது. நூலகம் பல விரிவாக்கல் சேவைகளை வழங்கும் நிறுவனமாக மாறிவிட்டது. நூலகத்தைத்தேடி வாசகர் செல்லும் நிலைமாறி இன்று வாசகரைத்தேடி நூலகம் செல்லும் அளவிற்கு நூலகங்கள் பல விரிவாக்கல் சேவைகளை வழங்கிவருகிறது.

நூலகம் தாம் வழங்கும் சேவையை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக நூலகம் பாடசாலைநூலகம், பொதுநூலகம், விசேடநூலகம், தேசியநூலகம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதில் மாணவப்பருவத்திலுள்ள வாசகர்களுக்கு வித்திடக்கூடிய நிலையமாக பாடசாலை நூலகங்களே காணப்படுகிறது.

எமது நாட்டில் இலவசக்கல்வி 1945ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது முதல் கல்வித் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியாலும் நூலுருவான நூலுருவற்ற ஆவணங்கள் வகையிலும் தொகையிலும் அதிகரித்து காணப்பட்டமையினால் எதிர்கால சந்ததியினரின் தேவைகளை கருத்தில் கொண்டு அனைத்து ஆவணங்களையும் நாம் சேகரித்து வைப்பது மிகவும் முக்கியமான தொன்றாகிவிட்டது. இந்நிலையில் நாம் பாடசாலை நூலகத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்து வருகிறோம். மாணவர்கள் மேற்படிப்புகளுக்காக எங்கு சென்றாலும் நூல் நிலையத்தை எவ்வாறு பயன்படுத்துவது. அதிலுள்ள பயன்கள் என்பவற்றை அறிவதற்கு அத்திவாரமாக இருப்பது பாடசாலை நூலகமாகும்.

பாடசாலை நூலகத்தின் முக்கியத்தை விளக்க வந்த நிபுணர் ருத் ஆண்டேவிஸ் பின்வருமாறு கூறியுள்ளார். ஒரு பாடசாலையின் முழுமையான கல்வித்திட்டத்தோடு ஒருமித்து ஆதரவளிக்கும் ஓர் அங்கமாக பாடசாலையின் நூலகம் இயங்கும் போது அது கல்வித்துறையில் அதி உன்னத நிலையை எய்த உதவும் ஒரு சக்தியாகப் பரிணமிக்கிறது. ஒரு பாடசாலையில் நூலகத்தின் சேவைத்திட்டமும் அப்பாடசாலையின் கல்வித் திட்டமும் இணைபிரியாத பரஸ்பரத் தொடர்புடையனவாகும்.

ஏனைய நூலகங்களைப் பயன்படுத்துவதற்கு பாடசாலை நூலகம்

ஆரம்ப அடித்தளமாக அமைவதுடன் வகுப்பறை நிர்ப்பந்தங்களை தவிர்த்து சுயவிருப்புக்கு சுதந்திரமளித்து வாசிப்புபழக்கத்தை ஊக்குவிக்கும் அடித்தளமாகவும் ஆசிரியர்களின் தலையீடு இன்றி தாமாகவே அறிவேடுகளில் இருந்து கற்றுக் கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்வதோடு கற்றல் கற்பித்தல் தொடர்புகளுக்கு அப்பாற் சென்று பொதுவான விடயங்களை தேடும் ஒரு களமாகவும் அமைகிறது.

உண்மையில் மாணவர்களுக்கு வாசிப்புத்திறன் என்பது தானாக அமைவதில்லை வீட்டிலுள்ள பெற்றோர்களும் அவன் கற்கும் சூழலும் தான் அதனை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் இதற்கு ஐந்து வயதில் இருந்தே பிள்ளைகளுக்கு நாம் பயிற்சி கொடுக்க வேண்டும். பெற்றார்கள் தமது வாழ்க்கைத் தகுதிக்கு ஏற்றவகையில் பத்திரிகைகளையோ, நூல்களையோ, வாங்கிக் கொடுத்து தாமும் அதில் பங்கு பெறல் வேண்டும். அவர்களுக்கு மகிழ்வூட்டும் எத்தனையோ விடயங்களால் இப்பயிற்சியினை அவர்களுக்கு வழங்கலாம் அதேபோல் ஆசிரியர்களும் தமது பாடத்திற்கமைய அதற்குரிய தகவல்கள் முழுவதையும் தாங்களே கொடுத்துவிடுகிறார்கள் அவ்வாறன்றி சில விடயங்களை கொடுத்து மாணவர்களை தேடி அறிய விடுதல் வேண்டும் இவ்வாறு செய்யுமிடத்து அவர்களுக்கு வாசிக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கிறது. ஒன்றைத் தேடிப்போகும் போது பலவற்றை மாணவர்கள் அறிவதற்கு தூண்டப்படுகிறார்கள். பத்திரிகை கூட வாசிக்க நேரம் இல்லாத மாணவர் சமூதாயம் தற்போது வளர்கிறது. இதனால் பொது அறிவு கூட சித்தி எய்த முடியாத நிலையில் உயர்தர மாணவர்கள் பலர் பாதிப்படைகிறார்கள். பத்திரிகைகளிலும் கூட தமக்கு சுவார்சியமான தகவல்களைத் தேடுகிறார்களே ஒழிய கல்வித் தேடல்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இல்லை.

பாடசாலையில் நூற்தெரிவு :-

ஒரு பாடசாலை நூலகத்தை பொறுத்தவரை நூலகருக்கே ஆசிரியர் மாணவர்களின் தேடல் பற்றி தெரிந்திருக்கும். எனவே நூல் கொள்வனவின் போது நூலகத்திற்கு பொறுப்பாக இருப்பவரை முக்கியமாக நூல் கொள்வனவில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். அத்துடன் அன்பளிப்பு நூல்கள் எல்லாம் நூலகத்திற்கு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. எமது பாடசாலையின் தரம் மாணவர்களின் தரம், மொழி, சமயம் கலாச்சாரங்கள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு தேவையற்ற நூல்களைத் திருப்பிவிடலாம். உதாரணமாக எமது நூல் நிலையத்தின் நூல்தொகையை கூட்டுவதற்காக அன்பளிப்பாக கிடைக்கிறதே என்பதற்காகவும் இஸ்லாமிய நூல்களை பெற்று இறாக்கைப்படுத்த வேண்டிய தேவை இல்லை.

பயிற்சி பெற்ற நூலகர்கள்

குறிப்பாக தற்போது மாணவர்கள் நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட நூலுருவற்ற சாதனங்களுக்கே அதிக முக்கியத்துவம்

கொடுக்கிறார்கள் எனவே கொள்வனவின் போது கட்புல செவிப்புல சாதனங்களுக்கும் கூடியளவு முக்கியத்துவம் கொடுக்கலாம். மாணவர்கள் இச்சாதனங்களை நூலகத்தில் பாவிப்பதனால் ரசனையுடனும் மகிழ்வுடனும் அமைதியுடனும் விடயங்களை கிரகிக்கின்றனர். அதைவிட தேடலை இலகுபடுத்துவதற்காக மாணவர்கள் இணையத்தை பாவிப்பதனால் நூல்களின் பாவனை தற்போது அருகிவருகிறது. எனவே மாணவர்களின் அறிவுத் தேடல்களுக்கு ஏற்றவிதத்தில் கட்புல செவிப்புல அறிவுச் சாதனங்களை நூலகத்திற்குள் புகுத்தினால் இடவசதி நேரம் என்பவற்றையும் மீதிப்படுத்திக் கொள்ளலாம்.

நூலகத்தின் பின்னோக்கிய நிலைமைக்கான காரணம் :-

மாணவர்களின் அறிவுத் தேடலுக்கு அத்திவாரமாக அமைவது பாடசாலை நூலகமே இங்கு அநேகமாக ஆசிரிய நூலகர்களே கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்களால் நூலகத்தை முழுமையாகக் கவனிக்க முடியாதநிலையுள்ளது. நூலகத்தை முழுமைபெறச் செய்ய வேண்டுமெனின் முழுநேரமும் அந்நூல்நிலையத்தில் பொறுப்பாக ஒருவர் இருப்பாராயின் அவராலேயே அந்நூலகத்தின் சேவையை முழுமையாக நிறைவேற்றமுடியும்.

எனவே இந்த நூலகங்களின் பணி சிறப்புற வேண்டுமாயின் நூலகவியலில் பயிற்சி பெற்ற நூலகர்களே அதற்கு பொறுப்பாக நியமித்தல் வேண்டும். இத்துறையிலே இன்று எமது பாடசாலைகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்துவருகின்றன. உண்மையில் நாம் பாடசாலை நூலகங்களில் முன்னேற்றம் காணவேண்டுமாயின் இலங்கை நூலகச் சங்கத்தால் நடத்தப்படும் நூலகவியல் நெறியில் தேறியவர்களை பாடசாலை நூலகங்களில் அமர்த்துவது கல்வித்திணைக்களங்களின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். நூலகவியலில் பயிற்சி பெற்ற நூலகர்கள் பாடசாலை நூலகங்களில் அமர்த்தப்பட வேண்டுமென கூறுவதற்கு தக்க காரணங்களுண்டு சிறப்பான கட்டம், பெருந்தொகையான நூல்களும், தளபாடங்களும் சேர்ந்து ஒரு நூல் நிலையமாகிவிட முடியாது.

நூல் நிலையம் என்ற அமைப்பு முக்கிய மூன்று அம்சங்களை கொண்டதாகும்.



ஒரு நூலக வாசகர்கள் தக்கபயனைப் பெறவேண்டுமாயின் அங்குள்ள வாசகர்களையும் நூல்களையும் இணைத்தற்கான தகமையும் பயிற்சியும் உள்ள நூலகர் ஒருவராலேயே முடியும் வாசகரின் தேவையும் தரமும் நூல்களின் தரமும் பரப்பும் அறிந்து கடமையாற்றும் நூலகரொருவர் இன்றி அந்நூல் நிலையதின் இயக்கம் பாதிப்புள்ளாகும்.

சேர். பொன். இராமநாதன்.

திருமதி. சுலோசனா யோகராசா
B.A, Dip. in Edu, M.ED

சுதந்திர இலங்கையை உருவாக்கிய சிற்பியாகவும் இந்து மதத்தையும் சைவப் பெண்கள் கல்வியையும் உலகப் புகழ் ஈட்ட வைத்தவராக இருள் மூடி இருந்த அந்நியராட்சிக் காலத்தில் உதய சூரியனாக பிறந்தவரே சேர்.பொன்.இராமநாதன் திருவும், கல்வியும் சீரும் தழைத்த மானிப்பாய் எனும் நல்லூரிலே தமிழ் அரசர் ஆண்டகாலத்திலே "கணக்கர்" எனும் உயர் பதவி வகித்த மாண முதலியார் பரம்பரையிலே வந்த இராசவாக்கல் முதலியார் திரு. பொன்னம்பலம் செல்லாச்சி அம்மையார் தம்பதிகளுக்கு 1851.04.16ம் திகதி இரண்டாவது மகனாக சேர் பொன் இராமநாதன் வந்து உதித்தார். இவரது அண்ணனாக குமாரசுவாமி முதலியாரும் தம்பியாராக அருணாசல பிரபுவும் அமைந்தனர். இவ்வாறு பெருமதிப்பு வாய்ந்த குடும்பத்திலே நடுமணியாகப் பிறந்தார்.

இன்று றோயல் கல்லூரி என்று அழைக்கப்படுவதும் அன்று கொழும்பு அக்கடமி என்று அழைக்கப்பட்ட கல்விச்சாலையில் இளமைக்கல்வியை இவர் கற்றார். பின்பு சென்னை சென்று அங்குள்ள இராசதானிக் கல்லூரியில் உயர்கல்வி கற்றார். இலங்கை திரும்பிய சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் அக்கால புகழ்மிகு பிரதம நியாயதுரந்தராக விளங்கிய சேர்.ரிச்சர்ட் மார்க்கன் என்பவருடைய உதவியாளராக அவர் கீழிருந்து வக்கீல் சேவையை பழகிக் கொண்டார். நாவன்மையும் விடாமுயற்சியும் நுண்மையும் பெற்ற இராமநாதன் வெகுவிரைவில் வக்கீல் தொழிலில் உயர்வடைந்தார்.

சேர் பொன். இராமநாதனுடைய தாய் மாமனாகிய முத்துக்குமாரசுவாமி அவர்கள் சட்டநிருபன சபையில் தமிழரின் பிரதிநிதியாக இருந்தார். இவர் 1879இல் காலம் சென்றமையால் அவரின் இடத்துக்கு வயதிற் குறைந்த சேர். பொன். இராமநாதன் நியமிக்கப்பட்டார். இருபத்தெட்டு வயதில் பதவியேற்ற அன்னார் இன மத பேதம் காட்டாது இலங்கை மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்.

சேர் பொன் இராமநாதனும் பாரியாரும் 1886ம் ஆண்டில் முதன்முதல் பிரித்தானியா சென்றனர். அங்க விக்டோரியா மகாராணியையும் எட்வேட் சக்கரவர்த்தியையும் பேட்டி கண்டார் இராமநாத வள்ளல். இலங்கைக்கும் மக்களுக்கும் செய்த சேவைகளைப் பாராட்டி பிரித்தானிய அரசாங்கம் 1889ஆம் ஆண்டில் இவருக்கு CMC கௌரவப் பட்டத்தினை வழங்கியது. சட்ட நிபுணராக விளங்கிய இவரின் திறமையை அறிந்த அரசாங்கம் 1892இல் சொலிசிட்டர் ஜெனரல் பதவிக்கு இவரை நியமித்து இப்பதவியில் இருந்தபடியே மூன்றுமுறை சட்ட ஆலோசகராக பணிபுரிந்துள்ளார்.

சேர் பொன் இராமநாதன் அவர்கள் நன்னித்தம்பி எனும் பெரியாரின் மகள் செல்லம்மா அம்மையாரை திருமணம் செய்ததன் பேறாக நான்கு பெண்களும், மூன்று ஆண்களும் பிறந்தனர். மகேசன் என்னும் மைந்தனும்

சிவகாமசுந்தரி எனும் புதல்வியும் இயற்கை எய்தினர். அவர்கள் மணப்பருவம் வந்ததும் தகுந்த இடத்தில் மணம் செய்து கொடுத்தார். செல்லாச்சி அம்மையார் 1904ம் ஆண்டு தம் ஐம்பதாவது வயதில் இயற்கையெய்தினார். சேர் பொன் இராமநாதன் இதன் பின் 1907ஆம் ஆண்டில் அமெரிக்கா சென்று வரும் போது அவுஸ்திரேலியாவில் அடிவெய்ட் எனும் இடத்தில் இருந்து திரு.எஸ்.டி. ஹரிசன் என்பவரின் மகள் லீலாவதி அம்மையாரை இரண்டாம் மனைவியாக்கி நாடு திரும்பினார். இதன் பேறாய் சிவகாமசுந்தரி என்னும் புதல்வி தோன்றினார். இவர் சுப்பையா நடேசபிள்ளை எனும் பெரியாரைத் துணைவராகப் பெற்றார்.

1905இல் இவர் அமெரிக்கா சென்று பிரசங்கங்கள் செய்யத் தொடங்கினார். இவரின் பேச்சு வன்மையை கேட்ட அமெரிக்கர்கள் இவரை "கிழக்கின் விவேகி" என பாராட்டி அழைத்தனர். இலங்கையின் சட்ட சபையிலே படித்த இலங்கையருக்கு ஒரு அங்கத்துவம் 1911இல் வழங்கப்பட்டது. இந்த அங்கத்துவத்தை சேர் பொன் இராமநாதன் பெற்று 1911ஆம் ஆண்டு முதல் 1920ஆம் ஆண்டு வரை தொண்டாற்றினார்.

1915ஆம் ஆண்டு இலங்கையின் வரலாற்றில் சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் இனக்கலவரம் தோன்றியது இதனைக் கண்ட பிரித்தானிய அரச இராணுவ ஆட்சியை பிரகடனப்படுத்தி சிங்களவரைக் கண்ட இடத்தில் சுட்டுக் கொன்றது. பல சிங்களத் தலைவர்கள் விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நேரத்தில் இராமநாதன் பிரபுவின் வயது அறுபத்து நான்கு. மக்கள் சேவையாற்றி அவர் உடல் நோயினால் நலிந்து இருந்தது. அவரின் உள்ளம் இராணுவத்தின் அடாவடியங்களைக் கண்டு துடிதுடித்தது. இதனால் சட்டசபையிலே 1915ஆம் ஆண்டு ஐப்பசி 14ஆம் திகதி பிற்பகல் 2.00 மணியளவில் இருந்து இரவு 10.00 மணிவரை இலங்கை மக்கள் சார்பில் பேசினார். அச்சமின்றி அரசாங்கம் மீது குற்றம் சாட்டினார். ஆனால் சட்டசபையில் பெரும்பான்மையினராக ஆங்கிலேயரே இருந்தமையால் இவரது நீதிப் போராட்டம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதனால் மனம் சோராது உலக யுத்தத்தின் இரைச்சல்களையும் கண்டு பயப்படாது உயிரையும் மதியாது பிரித்தானியா சென்றார். பிரித்தானியப் பாராளுமன்றத்தில் தமது வாதத்தை கூறி நீதிபெற்று கொழும்பு திரும்பினார். கொழும்புத் துறைமுகத்தில் சேர் பொன் இராமநாதனுக்கு மக்கள் அளித்த வரவேற்பு இதுவரை எவருக்குமே அளிக்கப்படவில்லை. கொழும்புத்துறைமுகத்தில் இருந்து இவருடைய வாசஸ்தலமான "சுகஸ்தான்" வரை தேரில் ஏற்றி சிங்களத் தலைவர்களால் இழுத்து வரப்பட்டார்.

சேர்.பொன். இராமநாத வள்ளலின் தந்தையார் பொன்னம்பலம் முதலியார் கொழும்பில் கொச்சிக்கடையில் சிவன் ஆலயம் ஒன்றை உருவாக்கி இந்து மக்களின் வழிபாட்டிற்கு வழிசமைத்துக் கொடுத்தார். இவ்வாலயத்தின் அறங்காவலராக இராமநாத வள்ளல் வந்ததும் கருங்கற்களால் ஆலயத்தை புணரத்தாரணம் செய்து 1912ஆம் ஆண்டு கும்பாபிசேகம் செய்தார். இதன் பின்பு யாழ்ப்பாண சைவமங்கையரின் கல்வியை இந்து கலாசார பண்பாட்டுடன் வளர்க்க எண்ணி 1913ஆம் ஆண்டு மருதனார்மடம் சுன்னாகத்தில் 26 ஏக்கர் நிலத்தில் இராமநாதன் கல்லூரியை நிறுவினார்.

அக்காலத்தில் உயர் கல்வி கற்ற தமிழ் பெண்கள் இன்மையால் இப்பாடசாலைக்கு அதிபர்களாகப் பிரித்தானியப் பெண்களே நியமிக்கப்பட்டனர். இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை வரவழைத்தார். மேலும் இந்து சமய ஆண்களின் கல்வியை வளர்க்கும் பொருட்டு திருநெல்வேலியில் 1921இல் பரமேஷ்வரா கல்லூரியையும் நிறுவினார். இக்கல்லூரி இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகமாக தோற்றம் பெற்று இராமநாத வள்ளலின் கனவை நனவாக்குகின்றது.

அன்னார் 1921 -1924 வரையில் இலங்கைச் சட்டசபையில் நியமன அங்கத்தவராக இருந்தார். இவர் சேவையை பாராட்டி பிரித்தானிய அரசாங்கம் "நைற்" பட்டத்தை வழங்கியது. 1924இல் வட மாகாணத்து வட பிரிவின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இராமநாதன் வள்ளல் தமது சேவையை இலக்கியத் துறையிலும் செலுத்தியுள்ளார். பகவத் கீதைக்கு சிறந்த விளக்கவுரையை தமிழில் எழுதி வெளியிட்டுள்ளார். கிறிஸ்து சுவிசேஷங்களைக் கற்று அதற்கும் விரிவுரை எழுதியுள்ளார். சமூகம், தத்துவஞானம், இலக்கியம் சம்பந்தமான பல கட்டுரைகளை அரச ஆசியசபை வெளியிடும் சஞ்சிகைகளில் எழுதியுள்ளார். 1915 ஆம் ஆண்டு கலகத்தைப் பற்றி ஒரு நூல் வெளியிட்டுள்ளார். சமய நெறி அடிப்படையில் வாழ்ந்த வள்ளலாரின் சித்தாந்த குருவாக ஸ்ரீலஸ்ரீ அருட்பரானந்த தேசிகர் இருந்தருளினார்.

சேர் பொன் இராமநாத வள்ளலின் மூத்தோன் குமாரசுவாமி முதலியார், இளையோன் அருணாசல பிரபு, தந்தை பொன்னம்பல முதலியார் தீர்த்தயாத்திரை செய்து திரும்பியபின் இவ்வுலகவாழ்வை நீத்தார். அன்னாரின் வாழ்க்கைத் துணைவி லீலாவதி அம்மையார் சைவசமயத்தைத் தழுவியதுடன் தமிழ் மொழியைத் தெளிவாகக் கற்றுத் தேர்ந்தார். வள்ளலின் சேவைகளுக்கு வலது கரமாக விளங்கினார். இராமாயண நூலை எளிய ஆங்கில நடையில் மொழிபெயர்த்த இவரது சேவைகளைப் பாராட்டி இலங்கைப் பல்கலைக்கழகம் தனது முதலாவது பட்டமளிப்பு விழாவில் 1942இல் "டாக்டர்" பட்டம் வழங்கி கௌரவித்தது.

சிறந்த தேசபக்தராகவும் சட்ட நிபுணராகவும் அறிஞராகவும், நாவலராகவும், தத்துவஞானியாகவும் பல்வேறு துறைகளில் பாராட்டப்பட்ட சேர் பொன் இராமநாதன் அவர்கள் தமது எண்பதாவது வயதில் 1930 காரத்திகை மாதம் 26ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். கொழும்பில் வார்ட் பிளேசில் உள்ள சுகஸ்தானத்திலிருந்து இவரது புகழுடம்பு கொழும்பு புகையிரதநிலையம் கொண்டு சென்று அங்கிருந்து புகையிரதம் மூலம் யாழ்ப்பாணம் மருதனார் மடத்திலுள்ள இராமநாதன் கல்லூரியின் முன்றலில் சமாதி வைக்கப்பட்டு இராமநாதேஸ்வரமாக மிளிர்கின்றது. இலங்கை மக்களுக்கு ஆற்றிய தொண்டினை நினைவூட்டும் முகமாக 1946இல் இவரது உருவச்சிலை பாராளுமன்ற முன்றலில் மக்களால் நிறுவப்பட்டது. "தோன்றில் புகழுடன் தோன்றுக" என்னும் முதுமொழிக்கு சான்றாக வாழ்ந்த சேர் பொன் இராமநாதனின் கல்லூரியில் தினமும் கால் பதிக்கும் யாவரும் பெரும் பாக்கியம் செய்தவர்களே.

சேர் பொன் இராமநதன் அவர்களின் இலங்கை இந்திய தொடர்பு

கலாபூசணம், பண்டிதர் வை. கணேசபிள்ளை
ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/ இராமநாதன் கல்லூரி

புண்ணிய பூமிஆகிய பரத கண்டமும் சிவ பூமி ஆகிய இலங்கையும் பிரிக்க முடியாத தொப்பூள் கொடி உறவினைக் கொண்டதென்பர். மொழியால், பண்பாட்டால் கலாச்சாரத்தால் சமய ஒழுக்கத்தால் பிண்ணிப்பிணைந்து காணப்படுவது இந்த உறவு சேர் பொன் இராமநாதனின் பிறப்பிற்கும் இந்திய நாட்டுக்கும் தொடர்பு வைத்தும் கடவுளின் தொடர்பே. இவ்வாறு பிறப்பினால், கல்வியினால், சேவையினால், உறவு முறைகளினால் ஆத்மீகத்தால் சேர் பொன் இராமநாதனுக்கு இந்தியத் தொடர்புகள் இருந்து வந்தன

பிறப்பினால் வந்த தொடர்பு

சேர் பொன் இராமநாதனின் தந்தையார் பொன்னம்பலம் முதலியார். இவர் சிறந்த கடவுள் பக்தர். ஆசார சீலர் இவர் இந்திய நாட்டிற்குத் தம்மனைவியாருடன் 1850ம் ஆண்டு மேமாதம் யாத்திரை செய்தார். இராமேஸ்வரத்தை அடைந்த பொழுது இராமேஸ்வரப்பொருமை நோக்கி நல்ல அறிவு ஒழுக்கங்களில் சிறந்த பத்திரனைத் தந்தருள் வீரேல் தங்களுடைய திரு நாமத்தையே அப்பிள்ளைக்குச் சூட்டுவேன் என்று வேண்டிக் கொண்டார். அவ்வாறே இராமேஸ்வரப் பெருமானின் அருளாள் 1951ம் ஆண்டு ஒரு ஆண் குழந்தை பிறந்தது முதலியர் மனம் மகிழ்ந்து இராமேஸ்வரநாதனின் பெயரையே "இராமநாதன் என பெயர் சூட்டினார். இவரே இலங்கையின் சட்டில்லாத் தவப்புதல்வராக விளங்கியவர் தரன் பிறந்த நாட்டிற்கும் சமூகத்திற்கும்

கல்வியினால் ஏற்பட்டதொடர்பு

அரும்பணியாற்றிய மகானாவர். இது பிறப்பினால் வந்த தொடர்பு.

இளமைக் காலத்திலேயே தாயை இழந்துவிட்ட இராமநாதன் பேர்த்தியாரான விசாலாட்சி அம்மையாரின் அரவனைப்பில் வளர்ந்தார். இவருக்கு குமாரசுவாமி என்ற அண்ணனும், அருணாசலம் என்ற தம்பியும் சகோதரர்களாவர். இவர்கள் ஆரம்பக் கல்வியைக் கொழும்பு இராணிக் கல்லூரியில் கற்று, மேற்படிப்பிற்காக இந்தியாவிலுள்ள இராசதானிக் கல்லூரியில் சேர்க்கப்பட்டனர். அப்பொழுது இராமநாதனுக்கு 14 வயது. ராவ் பகதூர் சி. வைதா மோதரம் பிள்ளையின் மேற்பார்வையில் கல்விபயின்றனர். சேர் பொன் இராமநாதன் நிறைய நூல்களை வாசிக்கும் பழக்கம் உடையவர். இக்கல்வி முறை அவருக்கும் வாய்ப்பாக இருந்தது. சென்னை வாழ்க்கை முறையும், கல்வியும் அவரது ஆத்மீகச் சிந்தனைக்கு விருந்தாக அமைந்ததோடு, தமிழ் நாட்டு மொழி, சமயம், பண்பாட்டு நெறிகளை அறிவதற்கும் அதனை மேனாட்டுக்கு எடுத்துச் சொல்வதற்கும்பயன்பட்டது. மேலும் அங்கு உடற்பயிற்சி நிலையமொன்றுக்குச் சென்று உடலை அழகாகவும் உறுதியாகவும் வைத்துக் கொள்ளக் கற்றுக் கொண்டார். இவ்வாறு பல கலைக்கழக இடைநிலைக் கல்விவரை கற்று தேர்வில் சித்தி பெற்றார் ஆனால் பட்டதாரி ஆகுமுன்பே தந்தையாருக்கு ஏற்பட்ட நெருக்கடி காரணமாகக் கல்வி நிறுத்தப்பட்டு, இராமநாதனும் குமாரசுவாமியும் இலங்கைக்கு அழைக்கப்பட்டு விட்டனர். இவர்கள் மாமன் மூத்துக் குமாரசுவாமியின் நெறிப்படுத்தலில் சட்டக் கல்வி கற்றனர். சட்டத்துறை நாயகம் பதவியில் இருந்த

சேர் றிச்சாட் மோகனிடம் சட்டக்கல்வியைக் கற்று தனது 22ம் வயதிலேயே இராமநாதன் உயர்நீதிமன்ற வழக்கறிஞரானார் இவ்வாறு சேர். பொன் இராமநாதன் றோயல் கல்லூரியிலும், சென்னை இராசதானிக்கல்லூரியிலும் படிப்பை மேற்கொண்டது இலங்கை இந்திய கலாசாரத் தொடர்பை வளர்க்க அனுபவமாயிற்று.

1879ம் ஆண்டு முத்துக் குமாரசுவாமி சிவபதம் அடைய அந்த இடத்திற்குச் சட்டநிரூபண சபையில் தமிழர் பிரதி நிதியாக அங்கம் வகிக்கத் தகுதியுடையவர். சேர் பொன் இராமநாதனே என்ற ஆறுமுகு நாவலரின் பிரசாரத்தின் பேறாக இராமநாதன் தமிழர் பிரதியாக நியமிக்கப்பட்டார். இதற்கு நாட்டுக்கு கோட்டை செட்டிகள் சங்கமும் கொழும்பில் முக்கிய பிரசாரம் செய்து ஆதரவு தெரிவித்தது. இதுவும் இந்திய இலங்கைத் தொடர்புகளை விசாலமாக்கியது எனலாம்.

ஆத்மீகச் சொற்பொழிவினால் ஏற்பட்ட தொடர்புகள்

ஆத்மீகச் சொற்பொழிவிற்காக உலக நாடுகளுக்குச் சென்றிருந்தார். இந்திய செல்வங்களான மகாபாரதம், இராமயாணம் பகவத்கீதை முதலிய நூல்களில் கூறப்படும் கருத்துக்களை நன் கறிந்து பிரசாரம் செய்ததோடு பகவத் கீதையைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார் மேலும் இலங்கையிலும் இந்தியாவிலும் பல இடங்களில் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். இந்தியப்பிரமுகர்களின் ஆதரவுகள் பெருகிற்று குறிப்பாக 1906ல் சிதம்பரத்தில் சைவசித்தாந்த சமாஜம் நடத்திய சைவவசிந்தாந்த மகாநாட்டில் தலைமை வகித்துள்ளார். தென்னிந்தியாவில் கோடைக் கானலில் ஆத்மீக நிலையமான சிவனடியில் சில காலம் தங்கியுள்ளார். மேலும் மதுரைத் தமிழ்ச்சங்க விழாக்கள் திருவள்ளுவர். மகாசபை போன்றவற்றிற்குத் தலைமைதாங்கிச் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

அருட்பரானந்தரைக் குருவாகக் கொண்ட தொடர்பு

1888ல் இலக்கணம் இராமசாமிப்பிள்ளை என அழைக்கப்படும் அருட்பரானந்தர் தஞ்சாவூர் இராணியின் தூதுவராக இராமநாதனைச் சந்திக்கக்கொழும்புக்கு வருகைதந்தார். அருட்பரானந்தரின் வருகை இராமநாதன் வாழ்வில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியது. ஞானகுருவே ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டுவர். இராமநாதனுக்கு அருட்குருவாக வந்த அருட்பரானந்தரின் உபதேசம் கிடைத்தது. குருஉபதேசம் பெற்ற இரதமநாதன் ஆன்மீகத்துறையில் பெரும் முன்னேற்றத்தைக் கண்டார். இராமநாதனின் ஆளுமையுருவாக்கத்தில் அருட்பரானந்தரின் வழிகாட்டல் முக்கிய இடத்தை பெற்றது. துடிப்புள்ள இளைஞராயிருந்த காலத்தில் மேனாட்டு மோகத்தில் இருந்த இராமநாதன் உயர்நிலையடைந்தார். அவரது வாழ்வில் அமைதி மதிநுட்பம், உறுதி, துணிவு, ஆத்மஞானம் கைவரப் பெற்றவராய் உலகியவில் பற்றற்றவராய் காணப்பட்டார். நடை, உடை, உணவு முதலியவற்றில் மாற்றங்கள் காணப்பட்டன. இதுவும் இந்திய இலங்கை உறுவுக்கு உறுதுணையாயிற்று.

தென்னிந்தியாவில் தஞ்சாவுரைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்பரானந்தரின் இயற்பெயர் இராமசாமிப் பிள்ளை. இவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவன். தஞ்சபவூர் அரச குடும்பத்தாரின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார். அருட்பரானந்தர். கடவுள் அருள் பெற்ற குழந்தையாக அவதரித்தவர் தாயாரின் கனவில் தோன்றிய முருகன் உனது வயிற்றில் எனது பக்தன் உருவாவான் என்று கூறக் கருவில் திருவுடையாராக அவதரித்தவர். அருட்பரானந்தர். இவருடைய ஞானகுரு தில்லை நாதன்சுவாமிகள் இவர் தஞ்சை அரசகுடும்பத்தவர். 1855ல் துறவுபூண்டவர் இவர் தனது சீடர்களை பறையர்வாழும் சேரிகட்குக் கூட்டி செல்ல ஒருவரைத் தவிர ஏனையோர் விட்டுச் சென்றுவிட்டனர். குருவின் உண்மையான சீடர் விட்டகலாத

இராமசாமிப் பிள்ளையாவர். இத்தகை மகானைக்குருவாகப் பெற்றார். சேர் பொன் இராமநாதன் அவர்கள். இராமநாதனால் பூசிக்கப்பட்ட அருட்பரானந்தர் 18.07.1893ல் தஞ்சாவூரில் சமாதி அடைந்தார். இதனை அறிந்த சேர் பொன் இராமநாதன் அவரது சமாதியிலே இலிங்கம் ஒன்றைப் பிரதிட்டை செய்து குருவுக்கு பக்தி சிரத்தையோடு அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்தும் குருவின் ஆலயநித்திய பூசை வழிபாடுகள் நடைபெற வேண்டிய ஒழுங்கினையும் செய்துவைத்தார். அருட்பரானந்தரின் ஞான உபதேசமே சேர் பொன் இராமநாதன் வாழ்வில் ஆத்மீக ஒளிவீசவும், மக்கள் சேவையே மகேசன் சேவை யெனப்பணி செய்யவும் இறை நிலையடையவும் செய்தது எனலாம். குருவின் பட மொன்றினை சேர் பொன் இராமநாதன் தமது இல்லத்தில் வைத்துப் பூசித்தமை குறிப்பிடத்தக்கது. சேர் பொன் இராமநாதரின் மரு....அருட்பரானந்தரின் உறவினருமான திரு.சு.நடேச பிள்ளையின் தொடர்பும் இதனால் ஏற்பட்டதே. எனவே தஞ்சாவூர் அரச குடும்ப உறவும், ஞான குருவின் தொடர்பும் இலங்கை இந்தியத் தொடர்பை வலுப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

திருமண உறவால் ஏற்பட்ட தொடர்பு

சேர். பொன் இராமநாதன் அவர்கள் 1906ம் ஆண்டில் செல்வி கரிசனைத்திருமணம் செய்து கொண்டார். இதன் பேறாகச் சிவகாம சுந்தரி என்ற பெண்பிள்ளையைப்பெற்றெடுத்தார், அருட்பரானந்தரைக் குருவாகப் பெற்ற பேற்றினால் அவரது உறவினரான சு. நடேசபிள்ளையின் உறவையும் இராமநாதன் பெற்றுக் கொண்டார். தனது மகள் சிவகாமசுந்தரிக்குக் கணவராகவும், தனது வாரிசாகவும் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளையைத் தேர்ந்தெடுத்தார். இதன் பேறாக இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரிகள் துலங்கின. 1953ம் ஆண்டுவரை கல்லூரியின் பொறுப்புகளைக் கவனித்து வந்த லீலாவதி இராமநாதன் அம்மையார். சிவபதம் அடைய, வாரிசாக இருந்த ஸ்ரீமான் நடேசபிள்ளை கல்லூரியின் பெறுப்புக்களைச் சிறப்பாக நடாத்தினார். சேர் பொன் இராமநாதனின் கல்விச் சிந்தனைகளைச் சிறப்பாக முன்னெடுத்துச் சென்றார். மேலும் இலங்கை அரசாங்கசபையில் கல்விக்குழு உறுப்பினராயும் அமைச்சரவையும் பணியாற்றினர். இலங்கையிலும் இந்தியாவிலும் சிறந்த அறிஞர் எனமதிக்கப்பட்டார். இலக்கியம், சைவம், தத்துவம், இசை, என்னும்துறைகளில் துலங்கினார். தனது கவனம் முழுவதையும் இராமநாதன் விட்டுச் சென்ற கல்லூரிப் பணிக்கே செலவிட்டார். 30 ஆண்டுகளாகப் பரமேஸ்வராக் கல்லூரியில் அதிபராக இருந்து பணியாற்றியுள்ளார்.

மேலும் இந்தியாவிலிருந்து இசைத்துறை, நடனத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களையும், பேச்சாளர்களையும் காலத்திற்குக் காலம் வரவழைத்து மேடையேற்றி மக்களையும் மாணவர்களையும் பயனடையச் செய்தமை இராமநாதன் காலத்தில் இருந்தே நடைபெற்று வந்த நிகழ்வாகும். இவையாவும் இலங்கை இந்திய உறவைப்பலப் படுத்திவைத்தன 1927ம் ஆண்டு காந்தியடிகள் இராமநாதன் கல்லூரிக்கு வருகைதந்துள்ளார். அவரது வருகை ஒரு விழாவாகக் கொண்டாடினார் இராமநாதன். தனது வரவேற்புரையில்கதர்த் தொழிலுக்கு நிதிதிரட்டப் போவதாகக் கூறிய கூற்று மகாத்மா காந்தியை மகிழ்வித்தது. மகாதமாவின் ஆசியையும் எமது கல்லூரி பெற்றுக் கொண்டது.

இராமநாதன் கல்லூரியினால் ஏற்பட்டதொடர்பு

1913ம் ஆண்டு இந்து தமிழ்ப் பெண்களுக்கெனக் கட்டப்பட்ட இக் கல்லூரி தனக் கெனஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளது. இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன் சைவத்தமிழ்ப்பண்பாடு, பாரம்பரியங்கள் பெறும்வகையில் அமைக்கப்பெற்றது. இந்தியநாட்டு இலச்சிய இலக்கியப் பெண்களைப்

போல இலங்கைப் பெண்கள் உருவாக வேண்டும் மென்னும் நோக்கத்தில் ஏற்படுத்திய இக்கல்லூரி தனது இலக்கைப் பூர்தி செய்துள்ளது.

இந்திய நாட்டைப் போல் குருகுல வாசம் செய்து கல்வி கற்க வேண்டும். நன் மாணாக்கர் பலர் தோன்ற வேண்டும் என்னும் எண்ணத்தில் விடுதியைக் கல்லூரியுடன் இணைதுக் கட்டினர்.

இக் கல்லூரியின் அதிபர்களாக ஆசிரியர்களாக இந்திய பெண் மணிகளை வரவழைத்துக் கடமையில் ஈடுபடுத்தியுள்ளார். சமயல், விடுதி - முதலிய நடவடிக்கைகளுக்கும் கல்லூரி வளாகத்திலேயே தங்குமிட வசதி அமைத்துக் கொடுக்கப் பட்டது. இந்த வகையில் திருமதி பிள்ளை அவர்கள், பத்மிணி, மறயம்மா, இராமையர், ஐயங்கார் போன்றோரைக் குறிப்பிடலாம். எனவே சேர்.பொன்இராமநாதனின் இந்திய இலங்கைத் தொடர்பு மிக இறுக்கமானதாகவும், வளமுற்றதாகவும் இருந்து வந்துள்ளது. இதற்கு அக்கால நாட்டுச் சூழலும் உதவிற்று எனலாம்.

ஆலயங்கள் தந்த தொடர்பு

சேர்.பொன் இராமநாதன் அவர்களால் அமைக்கப்பட்ட கல்லூரிகளும், ஆலயங்களும், இந்திய இலங்கைத் தொடர்புக்கு எடுத்துக் காட்டாக அழியாத சின்னங்களாக விளங்குகின்றன. இந்திய திராவிட சிற்ப முறையைப் பின்பற்றியனவையாக முழுதும் கருங்கற் பொழிவினால் ஆலயங்கள் அமைந்துள்ளன் கொழும்பு கொச்சிக்கடையில் அமைந்துள்ள பொன்னம்பல வாணேச்சரம் பரமேஸ்வரன் ஆலயம், இராமநாதன் கல்லூரியில் அமைந்த இராமநாதேஸ்வரம் யாவும் இந்திய இலங்கைத் தொடர்பை எடுத்துக் காட்டுவன. இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட சிற்பிகளைக் கொண்டே இராமநாதன் இவற்றை அமைத்தார். கல்லூரிகளும் இவ்வாறே அமைக்கப் பெற்றன. இலங்கை இந்தியத் தொடர்பின் சின்னங்களாக காலத்தால் அழியாதவையாக இவை சான்று பகிர்கின்றன.

நூலகத்தொடர்பும் நூல்களும்

சேர்.பொன் இராமநான் அவர்கள் கல்லூரியைக் கட்டும் பொழுதே நூலகத்தையும் இணைத்துக் கட்டினார். கல்லூரியின் தென்மேற்கில் நுலகம், அமைந்திருந்தது. ஏராளமான நூல்களை இந்தியாவில் இருந்து பெற்றுக் கொண்டார். வேறு நாட்டு நூல்களும் இருந்தன. நூல்களின் தரத்திற்கேற்ப அவை அலுமாரிகளிலும்..... அடுக்கி அழகாக வைக்கப்பட்டிருந்தன. நூலகத்தின் அழகும், சிறப்பும், ஒழுங்கமைப்பும் கல்லூரியின் கல்வி வளத்தை எடுத்துக் காட்டுவனவாக இருந்தன. என்னவளம். இல்லை இந்த நுலகத்தில் என்று சொல்லும் அளவிற்கு நூலகம் விளங்கியது. இந்நூலகப் பொறுப்பாளராக இந்தியாவில் இருந்து வந்த திரு பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் குடும்பமாக இங்கு இருந்தமை குறிப்பிடத்தக்கது. கல்லூரியில் பெரும்பாலான செயற்பாடுகளில் அதிபர் ஆசிரியர்கள் தொடக்கம் நூலகம் வரை இந்தியக் குடும்பங்கள் செயற்பட்டன. அவர்கள் அறிவும் ஆற்றலும் செயற்திறனும் மிக்கவர்களாக இருந்தனர்.

நூல்களின் வகைகள்

நூல்கள் தொகுதி தொகுதியாக அடுக்கப்பட்டிருந்தன அவை கொள்வனவு செய்யப்பட்டவையும், அன்பளிப்புக்களும், சேர். பொன் இராமநாதன் தம்பதிகளால் எழுதப் பெற்றவையுமாகும். இக் காலத்தில் கணனி மூலம் நூல்களில் விடயங்களைக் கண்டு கொள்கின்றோம். ஆனால் ஒருகாலம் இராமநாதன் கல்லூரியில் தேடக் கிடைக்காத அரிய பொக்கிசங்களான நூல்கள் நிறைய இருந்தன. விடயங்களை நாம் இலகுவில் கண்டறியக் கூடியதாக இருந்தது.

சமயம், தமிழ், இலக்கியம், புவியியல், குடியியல், சித்திரம், காப்பியம், இலக்கணம், ஓவியம், கவிதை

நாவல்கள், சிறுகதைகள் சங்க இலக்கியங்கள், 18 புராணங்கள் இதிகாசங்கள், பெரியபுராணம், கந்தபுராணம், இந்து தத்துவங்கள், வேதங்கள், சமயசாஸ்திரங்கள், உபநிடதங்கள், கணிதம் சிற்பம், ஓவியம் எனப் பாகுபடுத்தி பெயரிட்டு, இலக்கங்கள் இட்டு வைக்கப்பட்டிருந்தன.

எந்த ஒரு நூலையும் சிரமமின்றி எடுக்கக் கூடிய ஒழுங்கமைப்புக்கள் இருந்தன. திருமுறைகள் பண்ணிரண்டும். மெய்கண்ட சாஸ்திரங்கள் 14, சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்கள் சிறந்த விளக்கவுரைகளுடன் காணப்பட்டன. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளாதாரம், இறையநகரப் பொருள், நன்னூல், வடமொழி இலக்கிய வரலாறு, பகவத்கீதை என நூல்கள் ஒன்றைப் போல் பல நூல்கள் இருந்தன. எனக்கு 1980 தொடக்ககம் கல்லூரியில் ஆசிரியராக இருந்து வந்த தொடர்புண்டு தமிழின் மேல் உள்ள விருப்பத்தினால் அடிக்கடி நூலகம் செல்வேன். செல்லும் பொழுதெல்லாம் நூலகம் செந்தமிழ்ச் சோலையாக எனக்கிருந்தது.

தமிழ்ச்சமய நூல்களை விட ஆங்கிலநூல்களும் தேவையான பத்திரிகைகளும் இருந்தன. சேர் பொன் இராமநாதன் அவர்களும் அவரது பாரியாரும் எழுதிய நூல்களும் அங்கே காணப்பட்டன. ஔவை நாயகின் ஆத்திசூடி மந்திர விளக்கம், செந்தமிழ் இலக்கணம் திருக்குறட் பாயிரம், இராமநாத பாஷ்யம் பகவத்கீதை தமிழ் மொழி பெயர்ப்பும் விருத்தியும் என்பன சேர் பொன் இராமநாதனால் எழுதப்பட்ட நூல்களாகும்.

இவற்றைவிட இந்திய மகான்களாக காந்தியடிகள், விவேகானந்தர், இராமகிருஷ்ணர், சங்காரச் சாரியார், ஜவகர்லால்நேரு போன்றோருடைய நூல்களும் ஈழத்துச் சித்தர் பரம்பரையினர், இந்தியாவில் தோன்றிய 18 சித்தர்கள் என்போருடைய நூல்களும் இந்திய தத்துவ ஞானநூல்கள் பலவும் இங்கு காணப்பட்டன. அவையாவும் காலவெள்ளத்தில் அழிந்துபோக இப்பொழுது கணிசமான அளவு எஞ்சிய நூல்களே காணப்படுகின்றன. இதற்குப் பொறுப்பர்கத் திருமதி உதயகுமாரன் காஞ்சனமாலா இருந்து நடாத்தி வருகின்றார்.

இந்திய அமைதி காக்குப்படை வருகையும் நூல்களும்

1987 ல் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வருகை தந்தது அதன் காரணமாகவும் எமது கல்லூரியின் சில பகுதிகளும், நூலகமும் சேதமடைந்தன நூல்கள் ஒற்றை ஒற்றையாகக் கழன்று குவிக்கப்பட்டிருந்தன. புத்தக அலுமாரிகள் சேதமடைந்தன நூல்கள் களவு போயின. எஞ்சியவற்றை ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து மாதக் கணக்கில் தெரிந்து நூல்களை இயன்றளவு பாதுகாத்தோம். அவ்வாறு பாதுகாக்கப்பட்டவையே எஞ்சியிருக்கும் நூலகமாகும். வன் செயலினால் அழிந்த நூலகத்திற்கு அப்பொழுதிருந்த கௌரவம் அமைச்சர் திரு. தேவராஜா அவர்களும், காரியதர்சியாக இருந்த மாணிக்கவாசகரும், அரிய பல நூல்களைத் தந்துதவினர், வடமொழி,ஆங்கிலம், தமிழ் மொழி நூல்களும் கிடைக்கப்பெற்றன எதிர்காலத்தில் நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து நூலகம் பயனுள்ளதாக்க வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையுமாகுமே இவை யாவும் எது நீண்டகாலக் கல்லூரித் தொடர்பினால் கண்ட உண்மைகளே

புதிய கல்விச் சீர்திருத்தத்தில் ஆரம்பக்கல்வியின் போக்கு

திருமதி க. இராஜமனோகரன்
ஆசிரியர்

மாணவர்களிடையே ஒற்றுமை, சாந்தி, சமாதானம் என்பன தற்காலங்களிலே தொலைந்து எப்பொழுதும் சண்டை, போட்டி, பொறாமை போன்ற செயல்கள் மேலோங்கி நிற்கும் வேளையிலே இதை மாற்றியமைக்க வேண்டும் என்ற பல கல்வியியலாளர்களின் சிந்தனைகளுக்கமைவாகவே இந்தப் புதிய கல்விச் சீர் திருத்தம் கொண்டுவரப் பட்டது. இது முதற்கட்டமாகி 1998ஆம் ஆண்டு கம்பகா மாவட்டத்தில் மாற்றியமைக்கப்பட்டு ஆரம்ப மாணவர்களிடையே அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய திறன்களை வளர்க்கும் நோக்குடன் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் 1999ஆம் ஆண்டு நாடு பூராகவும் இக்கல்விச் சீர்திருத்தம் மாற்றியமைக்கப்பட்டது.

இச்சீர்திருத்தமானது ஆரம்பப் பருவப் பிள்ளைகளின் விசேட ஆற்றல்கள், உள்ளார்ந்த செயற்பாடுகள் ஆகியவற்றை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்யமுடியும். இவற்றை விடப் பிள்ளைகள் மேலும் சிந்தித்து வினாக்களைக் கேட்டல், விடை கூறல், கற்பனைக் கதை கூறல் என்பவற்றிற்கும் உதவுகிறது. அடுத்து தானாகச் செயற்பட மூத்தோரை மதிக்க, பெரியோரைக் கனம் பண்ண, எல்லா உயிர்களையும் மதிக்க இச்சீர்திருத்தம் வாய்ப்பு அளிக்கிறது. அடுத்து பிள்ளைகளின் கல்வி விருத்திக்குப் பெற்றோர்கள் தங்களை ஈடுபடுத்தச் சந்தர்ப்பம் அளிக்கிறது. அதேபோல் பெற்றோரும் பிள்ளைகளின் அபிவிருத்திப் பாதையில் பங்கேற்கவும் வாய்ப்பு அளிக்கிறது.

இச்சீர்திருத்தமானது ஆரம்பக்கல்விப் பாடசாலைகளில் (தரம் 1-5வரை) மூன்று முக்கிய கட்டங்களாகப் பிரித்துக் கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்கப்படுகின்றன.

1. தரம் 1 - 2 வரை
2. தரம் 3 - 4 வரை
3. தரம் 5

முதன்மை நிலை 1

முதன்மை நிலை 2

முதன்மை நிலை 3

இவ்வொரு கட்டங்களிலும் 3 பிரதான கற்றல் முறைகள் அடங்குகின்றன.

1. மேசைசார்ந்த வேலை
2. செயல் சார்ந்த வேலை
3. விளையாட்டுக்கள்.

முதன்மை நிலை 1 இல் (தரம் 1 - 2 வரை) கற்றல் முறை விளையாட்டாக அமைகின்றது. இங்கு மேசை சார்ந்த வேலை கற்றல் செயற்பாட்டில் குறைவாகவே உள்ளது.

இரண்டாவது முதன்மை நிலை இரண்டில் (தரம் 3 - 4 வரை) மேற்கூறிய மூன்று கற்றல் முறைகளுக்கும் சமமாகப் பங்கு அளிக்கப்படும்.

மூன்றாவது கட்டத்தில் (முதன்மை நிலை 3) எழுத்து, வாசிப்பு கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

இவ்வொவ்வொரு கட்டக்கல்வி முறைகளும் மாணவர் மையக்கல்வியையே கொண்டிருக்கும். இங்கு தான் பிள்ளைகளின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆற்றல்கள் விருத்திபெற அதிக கவனம் செலுத்தப்படும்.

ஆரம்பக் கல்விச் சீர்திருத்தப் பாடவிதானத்தில்

1) உடற்கல்வி
2) சுற்றாடல் சார் செயற்பாடுகள்
3) முதல் மொழி (தமிழ்)
4) கணிதம்
5) சமயம்

என்பன முக்கிய பாட துறைகளாக அமைகின்றன. அத்துடன் தரம் 1, 2 இல் வாய்மொழி ஆங்கிலம், வாய்மொழி சிங்களம் என்பன மேலும் புகுத்தப்பட்டுள்ளன. தரம் 3, 4, 5 இல் ஆங்கிலம், சிங்களம் எழுத்து வேலைகளுடன் மேலதிக பாடங்களாக சேர்க்கப்பட்டுள்ளன. தற்பொழுது மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் அடையும் நோக்குடன் ஆரம்பக் கல்வியில் இருந்தே மும்மொழித் திட்டம் கொண்டு செல்லப்படுகின்றது.

இப்புதிய கல்விச் சீர்திருத்தம் பிள்ளைகளின் சுயகற்றல், தன்னம்பிக்கை வளர்ச்சி என்பவற்றை உருவாக்குவதுடன் அடுத்தகட்ட இடைநிலைக் கல்விப் பருவத்திற்கு விருப்புடன் செல்லும் ஆர்வத்தைக் கட்டுப்படுத்துவதுடன் தானக சுய கற்றலுக்குச் செல்லும் ஆர்வத்தை உண்டு பண்ணுகிறது.

வாசிக்காத நாட்களெல்லாம் சுவாசிக்காத நாட்களே.

திரு. நி. மதிரூபன் (BFA, DIP in Edu)
ஆசிரியை



தோழனே!
இது புத்தகமல்ல
இதைத் தொடுபவன்
என் இதயத்தைத் தொடுகிறான்.
நீயும் நானும் நெருக்கமாகின்றோம்
இதோ ..... இதன் பக்கங்களிலிருந்தும்
உன் கரங்களுக்குத் தாவுகிறோன்

புல்லின் இதழ்கள் என்ற கவிதையின் மூலம் புதுக்கவிதையை உலகத்திற்கு அடையாளப் படுத்திய வால்ட்விட்மனின் கவிதை வரிகள். இவை புத்தகத்தின் மகத்துவத்தை உணர்த்துகின்ற உன்னத வரிகள்.

புத்தகம் .....
இதயங்களை இணைக்கும் நட்புப் பாலம்
அறியாமை என்றும் இருட்டை நீக்கும் சூரியன்
அறிவுத் தாகத்தைத் தணிக்கும் அதித நீரூற்று

ஞானம் தரும் போதி மரம் ....

வாழ்க்கையை நேசிப்பவர்கள் புத்தகங்களை நேசிப்பவர்கள் அறிவை விரிவு செய்வதற்கும் புரட்டிப் போட்டுகின்ற வாழ்க்கையில் இராட்சத சுழற்சியில் உலர்ந்து போகின்ற மனசை ஈரப்படுத்திக் கொள்வதற்கும், வற்றிப் போய்க் கொண்டிருக்கின்ற அன்பு, ஈகை, கருணை பாசம், பரிவு போன்ற நல்லுணர்வுகளை மெல்லுணர்வுகளாக மாற்றிக் கொள்வதற்கும் அறியப்படாத உலகை அறிவதற்கும் மனிதர்களின் வாழ்வியல் அனுபவப் பகிர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் புத்தக வாசிப்புப் பெரிதும் துணை புரிகின்றது.

"புத்தகம் இல்லாத வீடு யன்னல் இல்லாத அறை போன்றது. எந்த வீட்டில் நூலகம் இருக்கின்றதோ. அந்த வீட்டில் ஆன்மா இருக்கின்றது" என்பார் சிந்தனையாளர் பிளேட்டோ.

தான் வாசித்து நேசித்த புத்தக அறைக்கு "மனநல மருத்துவ நிலையம்" என்று பெயர் வைத்தான் எகிப்து நாட்டு அரசன் பாரோ.

"மனநல மருத்துவநிலையம்" - எவ்வளவு அர்த்தம் நிறைந்த அடைமொழி. மனிதனை முழமையடையச் செய்து சரியான பாதைக்குத் திரும்ப வைப்பது புத்தகம் தான். திரும்பிப் பார்க வைப்பதும் புத்தகம் தான். அதனால் தான் புத்தகங்களைக் காலம் என்னும் கடலில் கட்டப்பட்டிருக்கின்ற கலங்கரைத் தீபங்கள் என்று புகழ்கின்றோம்.

படிக்கும் ஒவ்வொரு முறையும் புதிய புதிய சிந்தனைகளைத் தரக்கூடிய ஆற்றல் புத்தகத்திற்கு உண்டு. புத்தகங்கள், சிறந்த நண்பர்கள். உன் நண்பர்கள் யாரெனக் காட்டு உன்னைப் பற்றிச் சொல்கின்றேன் என்பது பழைய மொழி. நீ படிக்கின்ற புத்தகங்களைக் காட்டு உன்னைப்பற்றிச் சொல்கின்றேன் இது இன்றைய புதுமொழி.

அறிவுச் சுரங்கமாய்த் திகழும் புத்தகங்களைப் படிப்பது நல்லது தான்.

அதைவிட நல்லது தேடித்தேடிப்படிப்பது. தேடுங்கள் கண்டடைவீர்கள் என்பது விவிலிய வாக்கு. அந்தத் தேடலில் தத்துவ ஞானியானவர்கள் பலர்.

ஒரு மனிதனுடைய குணநலப் பண்புகளை உயர்த்தி, தூய்மைப்படுத்திச் சிந்திக்கவும், சிறந்தமுறையில் வாழவும் செய்பவை புத்தகங்கள் தான்

புத்தகத்தை வாசிப்பதன் காரணமாகத் தங்களுக்குள் இருக்கும் கதவு திறக்கப்பட்டு மகான்களாகவும், மகாத் மாக்களாகவும் மாறியிருக்கின்றார்கள்.

மோகனதாஸ் காந்தியாக இருந்தவரை மகாத்மா காந்தியடிகளாக மாற்றியது. ஜான்ரஸ்கின் எழுதிய கடையனுக்கும் கடைத்தோற்றம். என்ற புத்தகம்.

வெங்கட் ராமனாக இருந்தவரை மகா ஸ்ரீ ரமண மகரிஷியாக மாற்றியது சேக்கிழார் எழுதிய "பெரியபுராணம்" என்ற புத்தகம்.

முப்பத்தி மூன்று ஆண்டுகள் இலண்டன் நூலகத்தில் கிடந்து கார்ல் மாக்ஸ் எழுதிய மூலதனம் என்ற புத்தகம் உலக சமுதாயத்தை உழைக்கும் வர்க்கத்தை உயர்த்திப்பிடித்தது.

டால்ஸ்டாயின் போரும் அமைதியும், அன்னகரீனாவும் உலகஇலக்கியத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றவை. இப்படி மனமாற்றத்திற்கும், சமூக மாற்றத்திற்கும் புத்தகங்களே சாட்சியங்களாக இன்றும் திகழ்ந்து கொண்டிருக்கின்றன.

காளிதாசன் காலத்தில் கட்டப்பட்ட அரண்மனைகள் இப்போது இல்லை. ஆனால் அவர் எழுதிய "சகுந்தலம்" இன்றும் ஜீவித்துக் கொண்டிருக்கின்றது.

வாழ்வாங்கு வாழ வழி சொன்ன வள்ளுவரும் கம்பரும் இன்று இல்லை. ஆனால் அவர்கள் எழுதிய திருக்குறளும், இராமாயணமும் இன்றும் வழி காட்டிக் கொண்டிருக்கின்றன. இது தான் புத்தகத்தின் மகத்துவம்

"புத்தகங்கள் காலத்தின் விதை நெல்" என்பர். பா.வேந்தர் பாரதிதாசன் ஆம் ஓர் விதை நெல்தான் பல நெல்மணிகளை உற்பத்தி செய்கின்றன. புத்தகங்களில் பொதித்திருக்கின்ற கருத்துக்களும் விதை நெல்லாய்த் தான் பலரை உருவாக்குகின்றன.

உலக வரலாற்றில் இடம் பெற்ற மாவீரன் அலெக்சாண்டர் உலகையே வெல்லவேண்டும் என்ற கனவு உலகத்தின் முதல் தன்னம்பிக்கையாளன்.

அலெக்சாண்டர் சிறுவனாக இருந்தபோது போர்ப்பயிற்சியைக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்கின்றார் தந்தை ∴பிலிப் ஒவ்வொரு பயிற்சியின் போதும் வெற்றியை மட்டுமே பெற்றுக் கொண்டிருந்த அலெக்சாண்டர் ஒருநாள் தோற்றுப் போகின்றான்.

எதற்ககாத் தோற்றாய்? தந்தை ∴பிலிப் கேட்கிறார்.

"அப்பா எப்போதும் நானே ஜெயித்து விடுவதால் இதோ இவன் அழுது விடுகிறான் அனால் தான் சந்தோசத்திற்காக ஒருமுறை தோற்றது போல் நடித்தேன்" என்றான் அலெக்சாண்டர்.

மகனுக்குள்ளிருந்த மனிதாபிமானத்தை ரசித்தாலும் அவர் "மகனே! உன் வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் விட்டுக் கொடு ஆனால் யாருக்காகவும் உன் வெற்றியை மட்டும் விட்டுக் கொடுக்காதே.

இந்த உலகம் வெற்றி

பெற்றவர்களை மட்டுமே பேசும்" என்றார். யாருக்காகவும் உன் வெற்றியை விட்டுக் கொடுக்காதே இந்த மந்திரச் சொல்லைப் படித்தபோதும், ஒவ்வொரு முறை படிக்கின்ற போதும் இருள் படிந்த என் விழிகளில் வெளிச்சத்தின் திவலைகள் பரவுகின்றன. நான் புரட்டிய இந்தப் புத்தகம் போல் நீங்களும் புரட்டுங்கள்.

தூங்கச் செய்வது புத்தகம் அல்ல. எந்தப் புத்தகம் நம்மைத் தூங்க விடாமல் செய்கிறதோ அந்தப் புத்தகம் தானே நல்ல புத்தகம். இதை மெய்யாகவே உணர்ந்தேன். அலெக்சாண்டரின் வரலாற்றில் மட்டுமல்ல இன்னொரு நிகழ்வு

இத்தாலி மக்களின் எழுச்சித் தலைவன் கரிப்பால்டியிடம் ஒரு வீரன் கேட்டான் நாங்கள் போரிட்டால் எங்களுக்கு என்ன கிடைக்கப் போகின்றது. காயமும் மரணமும் தானே.

கரிப்பால்டி சொன்னான் நீங்கள் காயப்படலாம், மரணிக்க நேரலாம் ஆனால் இத்தாலி விடுதலை பெறும். கடைசி வார்த்தையைப் பாருங்கள். இத்தாலி விடுதலை பெறும். எவ்வளவு பொருள் பொதிந்த வார்த்தை.

இப்படி நல்ல புத்தகங்களைப் படிக்கப்படிக்க நம்மையும் புரட்டிக் கொண்டே இருக்கும்.

எனவே நல்ல புத்தகங்களைத் தேடித்தேடிப் படியுங்கள் வாழ்க்கைகான நல்ல வழிகள் தெரியும். எந்த வழியில் போவது என்று தெரியாமல் திகைப்பவர்களுக்குப் புத்தகங்கள் நல்ல திசைகாட்டிகள். திசைகள் தெரிந்து விட்டால் தேடுவது எளிதில் கிடைத்து விடும்.

முன்பெல்லாம் இளைஞர்களின் கைகளில் புத்தகங்கள் இருக்கும். ஆளுமை சம்பந்தப்பட்ட அடையாளமாக இருந்தது. இன்றைக்கு எங்கே அந்த இளைஞர்கள்?

குழந்தைகளுக்கு வயலின் கற்றுத் தருகின்றார்கள், கராத்தே கற்றுத் தருகிறார்கள், நாட்டியம் கற்றுத் தருகிறார்கள், நல்ல புத்தகங்களை வாசிக்கக் கற்றுத் தருகிறார்களா? பாடப்புத்தகங்களைத் தாண்டி வேற புத்தகங்களைப் படிக்கக் கூடாது என்று சொல்லும் பெற்றோர்களை என்ன சொல்வது? புத்தகங்களில் நடுவேதான் குழந்தைகளை வளர்க்க வேண்டும்.

"புத்தகங்களுக்காகச் செலவழிப்பது செலவல்ல" மூலதனம் என்பார் அறிஞர் எமர்சன். எனவே புதிய தலைமுறையை உருவாக்கப் புத்தகங்களை வாங்கிக் கொடுப்போம்.

.

விரும்பிய புத்தகத்தை
விலை கொடுத்து
வாங்கிப் படிப்பவன் தான் வாசகன்.
வாங்குபவனிடம் வாங்கிப்படிப்பவன்
வாசகனல்ல யாசகன்.

- என்பார் கவிஞர் வாலி. புத்தகத்தை யாசிக்காமல், வாங்கி வாசிப்போம். வாசிக்காத நாட்களெல்லாம் சுவாசிக்காத நாட்களே.

நெஞ்சை நெகிழவைக்கும் நெடுநல்வாடை ஓர் பார்வை.....

ஆக்கம் - திருமதி ஈஸ்வரி செல்வம்

B.A. Dip. in Education M.A (Ta...)

அமிழ்தினும் இனியது நம் தமிழ்மொழி யாகும். இம்மொழி காலத்தால் முந்திய மொழியாகும். இது அரிய, சீரிய கருத்துக்களை நயம்பட

உரைப்பதாகும். இச்சிறப்புக்களை எல்லாம் தன்னகத்தே கொண்டு காலத்தின்

கண்ணாடிபோல் தெளிவுறக் காட்டி நிற்பது சங்ககால இலக்கியங்கள் ஆகும். அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என வகுத்துக் கூறப்படுகின்றன. இதில் பத்துப்பாட்டு நூலில் நெடுநல்வாடையும் ஒன்றாகக் குறிப்பிடப்படுகின்றது.

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி மருவினிய
கோல நெடு நல்வாடை கோல்க்குறிஞ்சி
பட்டினப்பாலை கடாத் தொடும் பத்து"

என்ற பழஞ்செய்யுள் பத்துப்பாட்டு நூல்கள் பற்றிக் கூறுகின்றது. பத்துப் பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்பன ஆற்றுப்படை நூல்களாகும். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய மூன்று நூல்களும் அகப்பொருள் பற்றியனவாகும். மதுரைக் காஞ்சி புறப் பொருள் பற்றிக் கூறுவதாகும். இதில் இதில் நெடுநல்வாடை அகம், புறம் என்ற பண்புகள் ஒருங்கே அமையப் பெற்ற நூல் ஆகும். நெடுநல்வாடை கற்பனை வளமும், கருத்துச் செறிவும் நிறைந்த சுவைமிக்க பாடல்களைக் கொண்டுள்ளது. இது திருமுருகாற்றுப் படையை இயற்றிய நக்கீரரால் பாடப்பட்டதாகும். இங்கே மதுரைக் காஞ்சியின் தலைவனான தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ் செழியனே பாட்டுடைத் தலைவனாகக் கொள்ளப்படுகின்றான். நீண்ட நல்ல வாடையை பாடும் பாட்டு இதுவாகும். தலைவனைப் பிரிந்த தலைவிக்கு துன்பம் தரும் நெடுவாடையாகவும் வினைமுடித்துச் சென்ற தலைவனுகக்கு இது நீண்ட நல்வாடையாகவும் தோன்றுவதால் இது நெடுநல்வாடை என்று பெயர் பெற்றதென அறிஞர்கள் பலர் கூறுகின்றனர். நெடுநல்வாடையின் பாடுபொருள் பற்றி நோக்குகின்றபோது கூதிர்பருவத்தே துணைதுறந்து வாடும் தலைவியின் நிலையை எடுத்துக் காட்டுகின்றது. அது மட்டுமன்றித் தலைவனுடைய பாசறை இருப்பு பற்றியும் கூறுகின்றது. இதுவே இந்நூல் அகமா? புறமா? என்ற கேள்வியை எழுப்புகின்றது. இங்கு, சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப் பொறாமை என்ற அகப் பொருள் இலக்கியத்தின் பண்பை மீறியமையால் இது அகப் பொருள் பற்றிய செய்தியைக் குறிப்பிட்ட போதிலும் புறம் என்றே அறிஞர்களால் கூறப்படுகின்றது. அதாவது

"வேம்பு தலை யாத்த
நோன்காழ் எஃகம்"

என்ற பாண்டியனுடைய அடையாளம் ஆகிய வேப்ப மாலையைக் குறிப்பிடும் தொடர் இங்கு வந்தமையால் இது அகப்பாட்டு ஆகாமல் புறப்பாட்டு என்றே கருதப்படுகின்றது. நெடுநல்வாடை நூற்றி எண்பத்தெட்டு அடிகளைக் கொண்டு அமைந்துள்ளது. இங்கே தலைவியின் துயர் தீரவேண்டுமானால் தலைவனின் பாசறைத் தொழில் இனிதாக நிறைவு பெற வேண்டும் என கொற்றவையை (காளி) வழிபடும் செவிலித்தாயின் கூற்றாக இப்பாட்டினை புலவர்

மிகச்சிறப்பாக எழுதியுள்ளார்.

"புலப்பொரு வதியும் நலங்கிலர் அரிவைக்கு

இன்னா அரும் படர் தீர விறல் தந்து இன்னே முடிக"

அடிகள் (166 - 168)

என்று செவிழித்தாய் வேண்டுவதாக கூறப்படுகின்றது.

அடுத்து இப்பாடலில் பேசப்படும் வாடைக் காற்றின் கொடுமை, குளிர்காலத்து நிகழ்ச்சிகள், அரண்மனை அழகு, அரசியின் படுக்கையறை, படுக்கை கோப்பெருந்தேவியின் பிரிவுத் துயர், பாசறையில் பாண்டியனின் நிலை, கொற்றவையை வேண்டுதல் என நூலில் பொதிந்துள்ள ஒவ்வொரு அம்சங்களும் எவ்வாறு படிப்பவர் நெஞ்சை நெகிழ வைத்துச் செல்கின்றது என்பதை அவதானிப்போம். காற்று தென்றலாக வீசும் பொழுது மனதிற்கு இதமளிக்கின்றது. புயலாக வீசும் பொழுது மனிதனுக்கு பயம் அளிக்கிறது. இங்கே கூறப்படும் வாடைக்காற்று கொடுமை அளிப்பதாக ஆசிரியர் வர்ணித்துச் செல்கின்றார். அதாவது, வாடையின் கொடுமையை நெடுநல்வாடை மிக அற்புதமாக படம் பிடித்துக் காட்டுகின்றது. அந்த வகையில் விலங்குகள் மேய்தல் தொழிலை மறக்க, குரங்குகள் குளிரால் நடுங்க, மரத்தில் தங்கி வரும் பறவைகள் தரையில் விழ, கறவைப் பசுக்கள் பால் தராமல் கன்றுகளை உதைக்க, குன்றம் குளிரால் நடுங்க வாடை வீசுகின்றது.

"மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்று கோள் ஒழியக் கடிய வீசிய
குன்று குளிரப் பன்ன கூதிர்ப் பாளாள்"

அடிகள் (9 - 12)

என வருணிக்கப் பெறும் குளிர்காலத்தில் நாணிலங்களிலும் காணப்படும் நிகழ்வுகள், மதுரை மாநகரின் தோற்றமும் இந்நூலைப் படிப்பவர் நெஞ்சை நெகிழ வைக்கும் என்பது உறுதியாகிறது.

மேலும், மன்னனின் மாளிகை கூறப்படுகின்றது. அம்மாளிகையானது சிற்பநூல் வல்லார் நாளும் கோளும் பொருந்தப்பெற்ற நன்னாளில் வேலை தொடங்கிச் சிறப்புற அமைக்கப்பெற்ற மாளிகை என கூறுவதன் மூலம் சாஸ்திரவிதிகளைப் பின்பற்றி வாழும் சமூகத்தை இங்கே காணக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் பாதுகாப்பாகவும், மிக அழகாகவும் அமைக்கப்பெற்ற அம்மாளிகையில் அரசியின் படுக்கை அறைக்குள் வாடைக்காற்றுச் சென்று வேதனைப் படுத்துகிறது எனச் சுட்டிக்காட்டப்படுவது வியக்கத்தக்க விடயம் ஆகும். இதனூடாக ஆசிரியர் கதையை மிக அழகாகவும் நுட்பமாகவும் எடுத்துக் கூறுவதை அவதானிக்கலாம்.

மேலும் அழகான மாளிகையின் அந்தப்புரத்திலமைந்த கட்டிலில் படுத்திருக்கிறாள் அரசி, அவள் தலைவனின் பிரிவைத் தாங்க முடியாது ஆழ்ந்ததுயரத்தில் இருக்கிறாள் என்பதை அவளதுதோற்றம் பார்ப்பவர் மனம் அனலிடப்பட்ட மெழுகுபோல வருந்தக் கூடியவகையில் பாண்டுகின்றது. அதாவது அவள் அழகிய அணிகளையெல்லாம் துறந்து பட்டாடை நீங்கிச் சாதாரண துகில் உடுத்திக் கொண்டு புனைபா ஓவியம் போல் காட்சி அளிக்கிறாள். கட்டிலின் மேல் விதானத்தில் அமைந்த திங்களைச் சார்ந்திருக்கும் உரோஹிணியைக் கண்ணுற்று இது போன்று தலைவனைப் பிரியாவாழ்வு நமக்கில்லையே என ஏங்குகிறாள். மேலும் அவள் துயரத்தின் வெளிப்பாட்டை ஆசிரியர் கூறுகையில் தலைவனைப் பிரிந்து துயரிலிருப்பதால் மங்கல அணிகள் அன்றி பிற அணிகளை அவள் அணியவில்லை என்றும் அவளுடைய கூந்தல் மயிர்ச்சாந்து முதலியன பூசப் பெறாமல் உலர்ந்து காற்றில் அசைந்து அவளுடைய நெற்றியின் மேல் புரண்டது. அவள் தன்னுடைய காதுகளில் மகர குழைகளை

(மீன்தோடு) அணியவில்லை. குழையின் தழும்பு தோன்றும் அவளுடைய காதுகள் சிறிதே தாழ்ந்து விளங்கின. பொன்னால் செய்த தொடியினை நீங்கிச் சங்கினாற் செய்த வளையல்களையே அவள் அணிந்திருந்தாள். அவளுடைய கையில் காப்பு நாணும், விரலில் நெளி மோதிரமும் விளங்கின. அவள் பூத்தொழில் அமைந்த பட்டாடையை நீக்கி நூற்புடைவை ஒன்றை உடுத்திருந்தாள் என்று இவ்வாறு தலைவனைப் பிரிந்து துயரினால் அவள் மிகவும் வருந்தி இருந்தாள் என மிகச்சிறப்பாக எடுத்தியம்பப்பட்டுள்ளது.

மேலும் புனையா ஓவியம் போல் இருந்த அவளை தோழியரும், செவிலியரும் அவளுடைய வருத்தம் நீங்குமாறு பலவாறு கூறி அவளை ஆற்றமுயன்றனர். ஆற்றாளாகிய கோப்பெருந்தேவி தன் படுபக்கையில் உறக்கமின்றி கிடந்தாள். அவ்வேளை விதானத்தில் சந்திரனோடு உரோஹினி கூடியிருப்பது போல் வரையப்பட்டிருக்கும் ஓவியத்தைக் கண்ட அவள் அந்த உரோகினி தன் கதலனாகிய சந்திரனைப் பிரியாதிருப்பதை போல தான் தன் தலைவனுடன் இருக்க முடியவில்லை என்று புலம்பி அழுகின்றாள். இந்நிலையை நோக்கும் போது அரசி மன்னன் போர்க்களம் சென்றுவிட்டான். அவன் திரும்பி வர வேண்டும் என்ற துயரம் ஒர புறம் இருக்க, இயற்கை நிகழ்வுகள் நெஞ்சத்தை உருக்க வருந்தினாள் போலும், ஏனெனில் அது கார்காலம். இக்காலத்தில் இயற்கை நிகழ்வுகள், மனித உணர்வையும் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. நெடுநல்வாடையின் இயற்கை நிகழவு பற்றி ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார். மேகம் வானத்தில் எழுந்து உலகமெல்லாம் குளிரும் படி மழை பொழிந்தது. மிக்க மழையால் பெருகிய வெள்ளத்தைக் கொண்டு வெறுத்த இடையர் தம் நிரைகளை வேற்று நிலத்திற்கு ஓட்டிச் சென்றார்கள். அவர்கள் தாம் பழகிய இடத்தை விட்டு வேறு இடத்திற்கு வந்தமை பற்றி வருந்தினர். காந்தள் மலர்களால் தொடுத்த அவர்களது தலைமாலைகள் மழைநீரால் பொலிவு இழந்தன. கடும்குளிரால் வருந்திய அவர்கள் தீயில் காய்ச்சி சூடு எற்றிய தம் கைகளைக் கன்னத்தில் வைத்துக் கொண்டும் குளிர் நீங்கப் பெறாதவராய் தம் பற்கள் பறை கொட்ட நடுங்கினர். பறவைகள் குளிருக்கு ஆற்றாதனவாய் நிலத்தில் விழுந்தன. பசுக்கள் பாலுண்ண வரும் தன் கன்றுக்குட்டிகளை உதைத்து விளக்கின.

இத்தகைய குளிர்காலத்தில் முசுண்டைப் பூக்களும், பீர்க்கம் பூக்களும் தூறுகள் தோறும் மலர்ந்தன. சேறு பரவிய மணற் உபரப்புக்களில் நாரைகளும், கொக்குகளும் இருந்தவாறே கவர்ந்துண்ணுமாறு கயல் மீன்கள் ஓடும் நீரை எதிர்த்து வந்தன. அகன்ற வயல்களில் நிறைந்த மழை பெய்தமையால் நெற்கதிர்கள் முற்றி விளைந்தன. பாக்கு மரத்தின் பாளைகளில் பசுங்காய்கள் முற்றின. சோலைகளில் உள்ள மரக்கிளைகளில் இருந்த நீர்த்துளிகள் விழுந்தன. மாடமாளிகைகள் உயர்ந்து விளங்கும் ஊரின் அகன்ற தெருக்களில் கீழ்மக்கள் கள்ளை நிறைய குடித்த மகிழ்ச்சியால் மழைத்துளியையும் பொருட்படுத்தாதவராய் திரிந்தனர். மகளிர் அரும்புகள் மலர்தலால் மாலைப் பொழுதை அறிந்து விளக்கேற்றி நெல்லையும், மலரையும் தூவி இல்லறத் தெய்வத்தை வணங்கினார்கள். வீட்டில் வாழும் புறாக்கள் தம் பெடையிடத்தே சென்று இரைதேடி உண்ணாமல் இரவு, பகல் அறியாமல் மயங்கி கொடுங்கையைத் தாங்கும். பல வகையில் கடுத்த கால்கள் ஆறும்படி மாறிமாறி நின்றியிருந்தன. ஏவல்கள் தம் தலைவர்களுக்காகக் கஸ்தூரி முதலிய வாசனைப் பொருட்களை அம்மியில் இட்டு அரைத்தனர். சந்தனக் கற்களும், கட்டைகளும் பயன்படுத்தாமல் கிடந்தன எனக் குளிரின் கொடுமை கூறப்படுகின்றது.

மேலும், மகளிர் மங்கலமாகச் சில மலர்களையே இட்டு முடிக்க

எனக் குளிரின் கொடுமை கூறப்படுகின்றது.

மேலும், மகளிர் மங்கலமாகச் சில மலர்களையே இட்டு முடிக்க வேண்டித் தம் கூந்தலை நறும் புகையில் உலர்த்தினர். அழகிய ஆலவட்டங்கள் உறையிலிடப்பட்டு சுவர்களில் மாட்டப்பட்டிருந்தன. தென்றல் காற்று வீசுதற் பொருட்டு அமைக்கப்பட்ட சாளரங்களின் கதவுகள் தாழிடப் பெற்றன. குளிரின் மிகுதியால் இளையோரும், முதியோரும் மட்குடத்துக் குளிர் நீரை பருக விரும்பாமல் கணப்புச்சட்டியில் இடம்பெற்ற நெருப்பின் வெப்பத்தை விரும்பி குளிர்காய்ந்தனர் என ஆசிரியர் மிக அழகாக இயற்கையின் கொடுமையான மாற்றத்தையும் அதனால் உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை எவ்வாற மாறி துன்பமடைய வைக்கிறது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்த துயரமான நேரத்தில் அரசியின் தீர்க்க முடியாத துன்பம் ஒர புறம் இருக்க அவ்வேளை பாசறையில் தங்கியிருக்கும் பாண்டியனோ காமத்தை வென்ற அன்பினனாகக் கடமை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு நள்ளென யாமத்தும் பள்ளி கொள்ளாமல் புண்பட்ட வீரரைப் பார்த்து முகமன் கூறப் பாசறையை விட்டு வெளியே செல்கின்றான். குதிரையும் யானையும் தொடர்ந்து வரத் தலைவன் அவற்றில் ஏறிச்செல்லாமல் வீரன் ஒருவனின் தோளில் கையை வைத்து நடந்து சென்று, வீரர்களுக்கு ஆறுதல் கூறுகின்றான். மறுநாள் வெற்றிக்கான வழிகளை எண்ணுகிறான். வாடை வீசுகிறது. இந்நிகழ்ச்சிகள் மன்னனின் கடமை உணர்ச்சியையும், வினை மேம்பாட்டையும் எடுத்துக் காட்டுகின்றது. இக்காட்சியினை நக்கீரர் மிக அழகாகவும் மனதில் பயங்கும் கவலையும் தோன்றும்படி விபரித்துச் செல்வதை அவதானிக்கலாம்.

போர்க்களத்தில் யானைகளைக் கொன்று விழுப்புண்பட்ட தன் வீரர்களைப் பார்த்து, இன்மொழி புகன்று, அவர்கள் உற்ற துன்பதைப் போக்க விரும்பிய பாண்டியன் தன் இடத்தினின்றும் புறப்பட்டான் வேப்பந்தார் தாங்கிய வேற்படையை உடைய படைத் தலைவன் முன்னே செல்ல வீரர் சிலர் பாண்டியனைப் பின்தொடர்ந்தனர். படைத்தலைவன் விழுப்புண்பட்ட வீரர்களை முறையே பாண்டியனுக்கு காட்டினான். அவன் பாசறையின் ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும் போது மழை பெய்தமையால் பரவிக் கிடக்கும் கரிய சேற்றினை யானைகளும், குதிரைகளும் உழக்கியதால் அவன் மேல் தெறித்தன.

பாண்டிய மன்னன் தன் இடத்தோனின்றும் சரிந்து விழும் மேலாடையை இடக்கையில் தாங்கிக் கொண்டவாறே வலக்கையை வாளேந்தி முன் சென்றான். போர் வீரனுடைய தோளின் மேல் கை வைத்தவனாய் விழுப்புண்பட்ட வீரர்களைச் சென்று பார்த்தான். அவன் நன்றியுணர்வும் அன்பும் தோன்ற அவர்களை அகமும் முகமும் மலர்ந்து நோக்கினான். அப்பொழுது மழைத்துளிகள் அவனை நனைக்காதவாறு வீரர்கள் முத்து மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட குடையைத் தாங்கிப் பிடித்தனர். இவ்வாறு அவன் நள்ளிரவிலும் உறக்கம் கொள்ளாதவனாய் சில மறவர்கள் தன்னைச் சூழ்ந்து வர அப்பாசறையிடத்தே விழுப்புண்பட்ட வீரர்களிடம் சென்று அவர்களைப் பார்த்து வந்தான் என நெடுநல்வாடை ஆசிரிய பாண்டிய மன்னன் மனநிலையையும், அவனுடைய வீரர்களின் துயரத்தையும் கடமையுணர்வையும் படிப்பவர் மனதை உருக்கும் வகையில் எடுத்துக்காட்டியுள்ளனர்.

தலைவியோ தலைவன் நினைப்பில் துயர் அடைகின்றாள். ஆனால், தலைவனோ தலைவியின் நினைப்பை விடுத்து பாசறை நினைவில் இருக்கிறான். இவ்வேளை செவிலித்தாயும் தோழியும் தம் தலைவியாகிய பாண்டிமாதேவியின் தனிமைத் துயரம் நீங்குமாறும்

போர்க்களத்தில் பாண்டிய மன்னனுடைய போர்த்தொழில் முற்றுப் பெற வேண்டி வெற்றித் தெய்வமாகிய கொற்றவையை வேண்டுவதாகக் கூறப்படுகின்றது.

தொகுத்து நோக்கும் போது, நக்கீரரால் பாடப்பட்ட நெடுநல்வாடையினது பாடுபொருளாக அரண்மனை வருணனை அந்தப்புரத்து வருணனை, அரசியின் துயரநிலை, தலைவனுடைய பாசறை நிலை போன்ற பல்வேறு அம்சங்கள் காணப்படுகின்றது. இதன் ஒவ்வொரு பகுதியும் படிப்பவருக்கு ஒவ்வொரு சுவையை தருவதாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் அரண்மனை வருணனை அழகுணர்ச்சியையும், கலைத்திறனையும் சுட்டிநிற்கின்றது. இது போல அந்தப்புர வர்ணனை படிப்பவர்க்கு வியப்பைத் தந்து நிற்கின்றது. அரசியின் பிரிவுத்துயர் ஒவ்வொரு பெண்களுக்கும் தமக்கு ஏற்பட்ட துன்ப நிலையாக எண்ணி துயரடையும் நிலையையும் ஏற்படுத்துகிறது. அத்துடன் தலைவனுடைய பாசறை நிலை, அவனது கடமையுணர்வு, வீரர்கள் மேல் கொண்ட அன்பு என்பவற்றைக் எடுத்துக் காட்டுவதோடு மட்டுமன்றி ஒவ்வொரு வீரனையும், சிறந்த ஆண் மகனையும் அதையும் மிஞ்சி நாட்டை கண்போல காக்கும் மன்னனையும் காட்டுகிறது. தலைவன்/மன்னன் மீது எற்படும் அனுதாப உணர்வையும் சுட்டிக்காட்டுகிறது. அவன் கடமையா? காதலா? என்ற நிலையில் கடமையே ஓர் ஆண்மகனுக்கு சிறப்பென தெளிவுபடுத்துகிறது. மேலும் நெடுநல்வாடையை நோக்கும் போது முல்லைத்திணையை ஒத்திருக்கின்றது எனக் குறிப்பிட்டுக் கூறலாம். நெடுநல்வாடையின் முற்பகுதி வாடையின் காரணமாக நலிவுறும் பயிரினங்கள் பற்றியும், உயிரினங்கள் பற்றியும் எடுத்துக்கூறுவனவாக அமைந்துள்ளன இவற்றுள் கார்ப்பருவத்தே மழை பொழிகின்ற செய்தி, கோவலர் நிலை, மழைக் காலத்தில் மகளிர் வழிபாடு செய்தல் மனையின் கண்ணே உறைகின்ற புறவுகளின் செய்கைகள், மகளிரின் பருவத்து நுகர்ச்சி, ஆடல் மகளிரின் இசை வேட்கை முதலான நிகழ்வுகள் பற்றி கூறுகிறது. இப்பகுதிகளைப் படிக்கும் போது மனதில் குளிர் காலத்து நிகழ்வுகள் அவற்றின் கொடுமைகளும் ஒவ்வொருவரும் தாம் அனுபவிப்பது போன்ற மயிர்க்கூச்செறியும் உணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் மிகத் துல்லியமாக அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

அடுத்து, இந்நூலின் பிற்பகுதியில் அரண்மனை வர்ணனை, அந்தப்புரத்து வர்ணனை, துயருறும் அரசியின் நிலை, தலைவனின் பாசறையிருப்பு, செவிலித்தாயின் வேண்டுதல் என்பன படிப்பவர் நெஞ்சை நெகிழ வைத்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. ஆகவே நெடுநல்வாடை புறத்திணை நூல் என அறிஞர்கள் கூறிய போதும் அவை அகத்திணை பண்புகளைக் கொண்ட மிகச் சிறந்த நூலாகும். இது படிப்பவர் செருஞ்சை நெகிழ வைக்கும் என்பதில் ஐயமில்லை. அத்துடன் நெடுநல்வாடையில் சித்திரிக்கப்பட்டிருக்கும் பாடல்கள் அனைத்தும் படிப்போரை சிந்திக்க வைப்பது மட்டுமன்றி அவர்களது மனதையும் நெகிழ வைக்கின்றது. எனவே நெடுநல்வாடை நீண்ட நல்ல வாடைக்காற்று பற்றிக் கூறிய மிகச்சிறந்த நூலாகுமென கூறின் மிகையாகாது.

வெண்பா

வாடை நலிய வடிவக்கண்ணாள் தோன்றசை
ஓடை மழகளிற்றான் உள்ளான்கொல் - கோடல்
முகையோடு அலமர முற்றெரிபோல் பொங்கிப்
பகையோடு பாசறை யுளான்.

உசாத்துணைகள்

1. *சங்க இலக்கியம் வழங்கும் பத்துப்பாட்டு*
நர்மதா பதிப்பகம், சென்னை–
M. நாராயணவேலுப்பிள்ளை

2. *தமிழ் இலக்கியம், பதிவும், பார்வையும்*
கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்
மலர் பதிப்பகம் யாழ்ப்பாணம்.

விசேட கல்வியின் அவசியம்.

திருமதி. சரோஜாதேவி தேவகுமார்
(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி.)

ஒவ்வொரு மாணவனுக்கும் பிறப்புரிமையான தனித்தன்மை உண்டு. அவர்கள் தனித்துவமான ஒரு நபராவார். சூழல் பாதிப்புக் காரணமாக ஒரு மனிதனிடம் தனித்துவ இயல்புகள் ஏற்படக் கூடும். அவர்கள் ஒவ்வொருவரினதும் அனுபவங்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. மாணவர்கள் காட்டும் இவ்வாறான தனித்தன்மை இயல்புகளை ஆசிரியர்கள் மிக உன்னிப்பாக நோக்க வேண்டும். ஒரே வகுப்பில் ஒரே விதமாக வளர்ச்சியடையும் அறிவு மட்டம் வித்தியாசமாக அமைவதைக் காணலாம்.

வகுப்பறையில் பொதுவாக கைக்கொள்ளும் கற்பித்தல் முறைகள் சில மாணவருக்கு சிரமங்களை தோற்றுவிக்கிறது. இவ்வாறான சிரமங்கள் ஏற்படுவதற்கு அவர்களது குறைபாடுகளால் அல்ல அவர்களின் தனித்துவம் காரணமாக ஏற்படுகிறது எனவும் கொள்ளலாம். இதனால் அதற்கேற்றவாறு கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை வடிவமைப்பதன் மூலம் முன்னரிலும் கூடிய பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளமுடியும்.

எல்லா மாணவருக்கும் உரிமையான தனித்துவம் உண்டு. அவர்களின் எதிர்காலம் வாழ்க்கைக்கு இயல்பாக்குவதற்கு உதவி தேவைப்படுகின்றது. ஒரு சில மாணவருக்கு சிற சிறு உதவியும் சில மாணவருக்கு கூடிய உதவியும் பாடசாலைக் காலத்தில் நீண்டகால குறுகிய கால கட்டங்களாக மேலதிக உதவிகளை பெற்றுக் கொடுக்க வேண்டியது ஆசிரியரின் பங்காகும்.

அதிகளவு உதவியை பெற்றுக் கொள்ள வேண்டிய மாணவனை ஊனமுற்ற, அங்கவீனமுற்ற பலவீனமுற்ற மாணவர் என இனம் காண்கிறோம். அவ்வாறு ஊனமுற்ற மாணவருக்கு தத்தமது திறனை வளர்த்துக் கொள்வதற்கு சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுத்தல் ஆசிரியரது கடமையாகும்.

விசேட கல்வித் தேவையுடைய மாணவருக்காக இன்று எமது நாட்டில்

1) ஒன்றிணைந்த கல்வி முறைமை

2) விசேட வதிவிடப் பாடசாலை முறைமை

என இரண்டாகக் காணப்படுகின்றது.

ஒன்றிணைந்த கல்வி முறைமை என்றால் கேட்டல் குறைபாடு அல்லது பார்வைக் குறைபாடு போன்றவற்றினால் பாதிக்காப்பட்டுள்ள மாணவருக்கு சாதாரண மாணவர்களைப் போன்று வழமையான பாடசாலைகளில் கல்வி கற்க வசதி செய்து கொடுக்கும் முறைமையே ஒன்றிணைந்த கல்வி முறைமை எனப்படும். இது போன்று விசேட கல்வித் தேவைகளையுடைய மற்றைய மாணவர் சார்பாகவும் இம்முறைமை பொருந்தும். இதன்படி விசேட கல்வித் தேவைகளை உடைய மாணவர்கள் மற்றைய மாணவரைப்

போன்று தமது வீடுகளுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று பொதுவான மாணவருடன் சேர்ந்து கல்வி கற்பர். இம்முறையின் தனித்துவமான இயல்பு ஆகும். விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் மாணவரில் காணப்படும் பலவீனங்களைக் களைவதற்குத் தகுந்த வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இவ்வளங்களைப் பயன்படுத்துவார். மற்றைய ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படும்.

இம்முறையின் வாயிலாக சாதாரண மாணவர் ஊனமுற்ற மாணவருடன் சேர்ந்து செயலாற்றவும் அவர்களைப் புரிந்து கொள்ளவும் முடியும். இதனால் இரு தரத்தினர் மத்தியிலும் நல்லிணக்கமும், நல்மனப்பாங்கும் ஏற்பட வழிகாட்டும்.

விசேட வதிவிட பாடசாலை முறைமையானது விசேடகல்வித் தேவைகளையுடைய மாணவருக்காக சம்பிரதாய பூர்வமான பாடசாலை முறைமையாகும். விசேட கல்வியின் ஆரம்பம் இந்த வதிவிடப் பாடசாலை முறைமையுடன் ஆரம்பமானதே இம்முறையிலுள்ள முக்கிய இயல்பு யாதெனின் விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவருக்கு வதிவிட வசதியை அளிப்பதாகும். இன்று நாட்டின் எல்லாப் பாகங்களிலும் விசேட வதிவிடப் பாடசாலைகளைத் தனியார் நிறுவனங்களும் சமய நிறுவனங்களும் நிறுவியுள்ளன. இவை பார்வை கேட்டல் ஊனக்குறைபாடுடையவருக்காகும்.

கேட்டல் குறைபாடுடைய மாணவனில் ஏற்படும் மொழியாற்றல் பேச்சாற்றல் தொடர்பான பலவீனங்கள் அவர்களின் கல்வி தொடர்பான வேலைகளைப் பெரிதளவில் பாதிக்கும். இவ்வாறு ஏற்படும் பாதிப்பு ஏற்படும் இழப்பு கல்வியின் வழிமுறைகளைக் கண்டுபிடிப்பது கல்வியின் குறிக்கோளாகும். கரும்பலகையில் எழுதும் போது பேசுதல் பயன்தரமாட்டா. ஆகவே அவர்கள் நலன்கருதி வகுப்பறையை நோக்கியபடி பேசுங்கள். கதவு, யன்னல், ஒளி உட்புகும் தானங்களை நோக்கியவாறு கேட்டல் குறைபாடுடைய மாணவரை உட்கார வைக்கவேண்டும். பலதரப்பட்ட பேச்சை செவிமடுக்க இவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள். தானாக முன்வரும் சாதாரண மாணவனை உதவிக்கு பயன்படுத்தலாம். இவ்வாறான மாணவர்களை போட்டிகள், விவாதங்கள், நாடகங்கள், நாட்டியங்கள் போன்றனவற்றில் பங்குபற்ற ஈடுபட அதிக சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும்.

எனவே விசேடகல்வி முறைமை மூலம் பராமரிக்கும் கட்டம் தாபனங்கள் மூலம் பராமரிக்கும் கட்டத்தில் தகுந்த தொழிற் பயிற்சியினை பெற்றுக் கொடுத்தல். அவர்களை உற்பத்தியில் ஈடுபடவைத்தல் விசேடகவனம் செலுத்தப்பட வேண்டும். சமூகத்தில் பயன்தரும் தொழில்கள் பற்றிய அறிவும் திறனும் பெற்றிருத்தல் வேண்டும். இவ்வாறு விசேட கல்வியை பெற்று தனித்துவமான சூழலை எதிர்கொண்டு சமூகத்தில் வாழ்வதற்கு இயல்பூக்கத்துடன் வாழ வழிகாட்டும் செயற்றிறன் மிக்க ஆசிரியர் அவசியமாகும்.

விசேட கல்வித்துறை வளர்ச்சியில் யா/இராமநாதன் கல்லூரி

திருமதி இ. மோகனவதனி ஆசிரியை
யா/ இராமநாதன்கல்லூரி

இலங்கை மணித்திருநாட்டின் இணையற்ற புதல்வர்களுள் சேர்பொன் இராமநாதன் அவர்களுக்கு தனியான ஓர் இடம் உண்டு. தன் உயர்ந்த மதிநுட்பத்தாலும் ஒப்புயர்வற்ற ஆற்றல்களாலும் உலகம் போற்றும் ஓர் உன்னதக் கல்விமானாகத் திகழ்ந்த இவருக்கு ஈழமணித்திருநாட்டின் வரலாற்றில் எப்போதும் ஒரு தனியான இடம் உண்டு. 20ம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் எமது சைவ மங்கையர்களில் பெரும்பாலானோர் கல்வியறிவு அற்றவர்களாகவே காணப்பட்டனர். தமது வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளேயே நாள் முழுவதும் நசுங்கிக் கிட்டந்த நமது பெண்களின் நிலைகண்டு அவர் மிகவும் மனம் வருந்தினார். பெண்கள் இவ்விதம் அறிவிலிகளாய் பேதையராய் வாழும் வரை நமது சமுதாயம் ஒருபோதும் மேம்படாது என்பதை நன்குணர்ந்த அவர் நமது பெண்களை அறிவாற்றல்களில் உயர்ந்தோர் ஒழுக்கத்தின் உறைவிடங்களாய் சமூகத்தைக் கட்டியெழுப்பும் சாதனை மங்கையராய் உலகம் போற்றும் உன்னதங்களாய் உயர்த்த திட சங்கற்பம் பூண்டார். அதன் பயனாக 1910 ம் ஆண்டு புகழ்பூத்த இராமநாதன் கல்லூரியின் அமைவிடம் தெரிவு செய்யப்பட்டு அடிக்கல்லும் நாட்டப் பெற்றது. அன்று இடப்பட்ட அந்த வித்து மூன்றே மூன்று ஆண்டுகளில் விருட்சமாகி இந்நிழலும் இனிய கனிகளும் தரத்தயாரானது. ஆம் 1913 ஜனவரி 20ம் திகதிக்கு முதலாவது சைவத்தமிழ் பெண்கள் பாடசாலையாக இராமநாதன் கல்லூரி உதயமாயிற்று

இராமநாதன் கல்லூரியின் தோற்றம் நமது சமுதாய மறுமலர்ச்சியின் ஒரு ஒப்பற்ற படிக்கல் என்று கூறின் அது மிகையன்று ஒரு சில ஆண்டுகளுக்குள்ளேயே இவ் ஒப்பற்ற கல்லூரி தனக்கென ஓரிடத்தை தங்க வைத்துக் கொண்டது. அற்புதமான சைவச் சூழலில் தமது பெண்பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற ஆவலோடு நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இருந்தும் பெற்றோர் நாடித் தேடி வரும் அளவிற்கு கல்லூரி தனது இருப்பைப் பலப்படுத்திக் கொண்டது.

சமுதாயத்தில் கல்வி ரீதியாக மிகவும் நலிவுற்ற நிலையில் இருந்த நமது பெண் பிள்ளைகளின் நல் வாழ்வுக்காக நற்பணியாற்றி வந்த இக்கல்லூரி சமுதாயத்திலேயே நலிவுற்ற நிலையில் உள்ள மற்றொரு தரப்பினரான விசேட தேவை கொண்ட பிள்ளைகளை நோக்கியும் தனது அன்புக்கரங்களை நீட்டத் தவறவில்லை.

நமது நாட்டில் உள்ள விசேட தேவை கொண்ட மாணவர்கள் சாதாரண பாடசாலைகளில் சாதாரண மாணவர்களோடு இணைந்து கல்வி கற்பதற்கான வாய்ப்பு 1972 ம் ஆண்டுவரை இருக்கவில்லை. அவர்கள் தமக்கென அமைக்கப்பட்ட விசேட பாடசாலைகளில் ஆரம்பக்கல்வியை மட்டுமே அக்காலத்தில் கற்க முடிந்தது. 1972 இல் இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பயனாகவே விசே தேவை கொண்ட மாணவர்களை சாதாரண பாடசாலைகளில் கற்கலாம் என்ற நிலை உருவானது. அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் யாழ்ப்பாணத்தில் இக்கல்வித் திட்டத்தை செயற்படுத்தும் பாரிய பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். இருந்த போதிலும் அக்காலத்தில் பல

பாடசாலைகள் இவ்விதமான பிள்ளைகளை உள்வாங்கிக் கொள்வதற்கு பெரிதும் தயக்கம் காட்டியே வந்தன. எனினும் இராமநாதன் கல்லூரி இவ்விடயத்தில் மிகவும் முன்மாதிரியாகவே நடந்து கொண்டது. 1970 களில் நடுப்பகுதியில் செல்வி.யோகேஸ்வரி வைத்திலிங்கம் என்ற விழிப்புல வலுவிழந்த மாணவி இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட கல்வித்திட்டத்தின் கீழ் இக்கல்லூரியில் இணைக்கப்பட்டார். அன்றுமுதல் இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட கல்வித்திட்டத்தின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் இக்கல்லூரி ஆற்றிய பங்களிப்பு மிகவும் அளப்பரியது. ஒன்றிணைக்கப்பட்ட கல்வித்திட்டத்தினை யாழ் மாவட்டத்தில் வெற்றிகரமாக செயற்படுத்திய அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாருக்கு உறுதுணை புரிந்த பாடசாலைகளில் இராமநாதன் கல்லூரின் தனியான ஓரிடம் உண்டு.

1988 ஆம் ஆண்டு விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதற் கொண்டு இராமநாதன் கல்லூரிக்கும் வாழ்வகத்திற்கும் இடையே மிக நெருக்கமான உறவு இருந்து வந்துள்ளது. 1998 இல் வாழ்வகம் மானிப்பாயில் இயங்கிய போது வலிகாமம் கல்வி வலயத்தின் அனுசரணையுடன் வாழ்வகம் நடாத்திய ஆசிரியர்களுக்கான 6 மாதகால விசேட கல்விப் பயிற்சி நெறி இராமநாதன் கல்லூரியிலேயே நடைபெற்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 2002 இல்வாழ்வகம் சுன்னாகத்தில் இயங்க ஆரம்பித்த காலம் முதற் கொண்டு இராமநாதன் கல்லூரியுடான உறவு மேலும் நெருக்கமானது. அப்போது வாழ்வகத்தில் போதிய கட்டட வசதிகள் இல்லாததால் வாழ்வகத்தின் பல நிகழ்வுகள் இராமநாதன் கல்லூரியிலேயே இடம்பெற்றது. அதிகமான மாணவர்களும் இராமநாதன் கல்லூரியில் இணைக்கப்பட்டனர். தற்போது வாழ்வகத்தின் 18 மாணவர்கள் இராமநாதன் கல்லூரியில் கல்வி பயின்று வருகின்றனர். மேலும் மூன்று மாணவிகளான செல்விகள் டில்வியா ஞானசீலன் இராஜலட்சுமி மார்க்கண்டு ஆகியோர் கலைப்பிரிவு மூன்றாம் ஆண்டிலும் செல்வி தயாளினி வெற்றிவேல் கலைப்பிரிவு

முதலாம் ஆண்டிலும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பயில்கின்றனர். இவர்களை விட கடந்த காலங்களில் இங்கு கல்வி கற்ற மாணவிகளான செல்வி யோதீஸ்வரி வைத்திலிங்கம் (தற்போது திருமதி யோதீஸ்வரி பிரபாகரன்) செல்வி ராஜினி விஜயரட்ணம், செல்வி ரேகா கிருபானந்த தேவன் ஆகியோர் பட்டதாரிகள ஆகியுள்ளர். இவர்களை இன்னும் பல மாணவிகள் பல்வேறு நிலைகளில் தமது கல்வியை மேற்கொண்டு பயனடைந்துள்ளனர். 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகைளப் பெற்று ஒரு பெரும் சாதனையை நிலை நாட்டிய வாழ்வக மாணவன் செல்வன்.துரைராசா அருண்குமார் இராமநாதன் கல்லூரி அன்னையின் மடியில் வளர்ந்தவன் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிட முடியாது. இராமநாதன் கல்லூரியில் விழிப்புல வலுவிழந்த மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய வகையான விசேட தேவை கொண்ட சுமார் நாற்பதிற்கு மேற்பட்ட மாணவர்களும் கல்வி பயில்கின்றனர். இவர்களையும் இக்கல்லூரித்தாய் அன்புடன் அரவணைத்து போசித்து வருகின்றாள்.

எந்தவொரு பாடசாலைக்கும் சிறந்ததொரு நூல் நிலையம் மிக மிக இன்றியமையாதது. அரியதொரு நூல் நிலையம் பெரிய பல சாதனையாளர்களை, சான்றோர்களை உருவாக்கும் என்பதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது. பாடசாலையிலேயே நூல் நிலையம் ஒன்று நன்கு பேணப்படுமானால் மாணவர்களின் நுண்ணறிவு தானாகவே வளரும்.

இராமநாதன் கல்லூரியிலும் அழகியதொரு நிலையம் இயங்கி வருகின்றது. இந்நூல்நிலையத்தினை விழிப்புலன் வலுவிழந்த பிள்ளைகளும் பயன்படுத்தக் கூடியதாக மேம்படுத்த வேண்டும் என்ற சிந்தனை தற்போது முகிழ்ந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதொரு விடயமாகும். இன்று பொதுவாக விழிப்புலனற்றவர்கள் தமக்கு வேண்டிய நூல்கள் விரும்பியபோதே வாசித்துக் கொள்ள வேண்டிய நிலையே காணப்படுகின்றது. இருந்த போதிலும் தற்கால நவீன விஞ்ஞான தொழினுட்ப வளர்ச்சி காரணமாக இந்நிலையை மாற்றக் கூடிய பல சாதனங்கள், வசதிகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. பல நூல்கள் இன்று ஒலி வடிவில் இரு வெட்டுக்களில் வெளிவருகின்றன. மேலும் தேவையான நூல்களை இவ்விதமாக ஒலி வடிவில் நாம் தயாரித்துக் கொள்வதற்கான வசதிகளும் ஏற்பட்டுள்ளன. இதற்கு சாதாரணமான ஒரு கணனியே போதுமானது. எனவே கல்லூரி நிலையத்தில் இதற்கென ஒரு இறுவெட்டுக் களஞ்சியமும் ஒரு கணனியும் இவ் இறுவெட்டுக்களைப் பிள்ளைகள் செவிமடுத்துவதற்கென ஒர சில பிளேயர்கள் என்பது இருப்பது மிகவும் பயனுடையதாக இருக்கும். நூல்களை வாசிப்பதற்கு நல்ல குரல் வளம் உள்ள உயர் வகுப்பு மாணவிகள் அல்லது பழைய மாணவிகள் அல்லது ஆசிரியர்களின் உதவியினைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் பிறேயில் நூல்களையும் இந் நூலகத்தில் சேர்தது வைக்க முடியும். ஆங்கில நூல்கள், சஞ்சிகைகள் பலவற்றை நாம் இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்

தமிழ் நூல்களைப் பொறுத்தமட்டில் மதுரையில் உள்ள இந்தியப் பார்வையற்றோர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு நூற்றுக்கணக்கான தமிழ் நூல்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் விரல்களால் தொட்டு உணரக் கூடிய இலங்கைப் படம், உலகப்படம் போன்றன புடைப்புப் படங்களாக பாவனைக்கு வந்துள்ளன. இவற்றையும் நாம் இந்நூல் நிலையத்தில் பேணுவதன் மூலம் இம்மாணவர்களின் பாடம் சார்ந்த அறிவினை மேம்படுத்த முடியும்.

விழிப்புல வலுவிழந்தவர்கள் அன்றாட பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றை உடனுக்குடன் வாசிப்பதற்கான வசதிகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை ஸ்கான் செய்து தமிழிலோ, ஆங்கிலத்திலோ உடனுக்குடன் ஒலி வடிவில் தரக்கூடிய நவீன சாதங்கள் தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றையும் எமது நூலகத்தில் நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். இவற்றில் சிலவற்றை மேற்கொள்வதற்கு சற்று செலவு அதிகமாக ஏற்படும் என்பது உண்மையே. எனினும் திட்டமிடப்பட்ட சரியான முன்னெடுப்புக்கள் இவை அனைத்தையும் எளிதில் பலிதமாக்கும் என்பதில் ஐயமில்லை.

புறக்கண்களால் இந்த உலகத்தை தரிசிக்க முடியாத தமது பிள்ளைகளின் அகக்கண்களை அறிவுக்கண்களைத் திறந்து விடுகின்ற போது அவர்கள் முன்னுள்ள பெருந்தடைகள் எல்லாம் தூசாய், தும்பாய் போய்விடும் நம் சமூகத்தின் ஒப்பற்ற பிரசைகளாய் அவர்களும் நிமிர முடியும். அறிவுக்கண்ணைத் திறக்கும் இவ் அரும் பணியை நமது நூலகம் ஆற்றட்டும். நம் கல்லூரித்தாய் மென்மேலும் பெருமை பெறட்டும்.

இன்றைய தொலைக்காட்சி நாடகங்களும் கல்விச் சமூகமும்

திருமதி பிரதீபா கிரிதரன்
ஆசிரியை

இன்று மனித வாழ்வில் முக்கிய இடம் பெறுகின்றவை தொலைக்காட்சி நாடகங்கள் இவை குழந்தைகள் மாணவப் பருவத்தினர் வயது வந்ததோர். வயோதிபர் யாரையும் விட்டு வைக்கவில்லை இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் மாணவப் பருவத்தினரே.

தொலைக்காட்சியில் இருபத்து நான்கு மணி நேரமும் விதம் விதமான நாட்கள் விதம் விதமான பெயர்களில் தேவாரம் பாடியவர்களின் பெயர்கள் கூறமுடியாத பிள்ளைகள் நாடகங்களின் பெயர்களை அடுக்கடுக்காக கூறுகின்றனர். பெற்றோர், பிள்ளைகள், வீட்டிலுள்ளோர் கூட்டாக இணைந்து பல உலக விடயங்கள் கதைப்பதோ கல்வி விடயங்களைஅலசி ஆராய்வதோ இன்று இல்லை சிறுவர் முதல் வயோதிபர் வரை இணைந்து கொள்வது நாடகம் பார்ப்பதில்தான்.

முன்னைய காலங்களில் அம்மம்மாமார் பாட்டாமாரிடம் இருந்துதான் பிள்ளைகள் புராணக் கதைகளையோ பண்டைய விடயங்களையோ அறிந்ததுண்டு தேவாரங்கள் சொல்லிக் கொடுப்பார்கள் தேவாரங்கள் பாட வழிப்படுத்துபவர்களும் அவர்களே இன்றோ வீட்டிலுள்ள வயோதிபர்க்கு பேரன் பேர்தியுடன் கதைக்க நேரமில்லை விளையாட நேரமில்லை தொலைக்காட்சி நாடகங்களுடனேயே அவர்களது பொழுது கழிக்கிறது.

சுற்றிவர இருந்து சுடச்சுட தோசை எங்கே? ..... அடிபட்டு உண்ணும் அப்பம் எங்கே? எல்லாம் கடையில் ஓடர் பிட்டு என்றால் கொத்திக் கொத்தி நாடகம் பார்கலாம் சாப்பிட்டு சாப்பிட்டு நாடகம் பார்க்கலாம். அன்றாட செயல்களில் அரைவாசிக்கு மேல் தொலைக்காட்சிக்கு முன்னால் கழிகின்றது. வீட்டில் பெரியவர்கள் வழிகாட்ட மாணவர்கள் பின்பற்றுகின்றார்கள்.

காலையில் எழுந்து பறந்து பறந்து வீட்டு வேலைகளை முடித்து வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் மாலையில் வீடு திரும்பினால் எமக்கு ஓய்வு வேண்டுமென்று தொலைக்காட்சிக்கு முன்னால் அமர்கின்றார்கள் பிள்ளைகளுடனும் கதைக்க அவர்களது பிரச்சினைகளை கேட்க அவர்களுக்கு ஆறுதலாக இருக்க கற்றலுக்கு வழிகாட்ட பெற்றோருக்கு நேரமில்லை. பிள்ளைகள் தங்களது பிரச்சினைகளை மனம் விட்டுக் கதைக்க இடமின்றி வழிகாட்டலுக்கு ஆளின்றி வழி தவறுகின்றார்கள்.

வீட்டில் இரவில் கூட நாடகச் சத்தமென்றால் பிள்ளைகள் எங்கே படிப்பது வீட்டுபாடம் எங்கே செய்வது? தெரியாதவற்றை யாரிடம் கேட்பது?

செய்யவில்லை என்று ஆசிரியர்கள் அடிப்பது குற்றமாகி விடுகிறது. மனித உரிமை ஆணைக்குழுவிடம் செல்லவேண்டியதாகின்றது.

முன்னைய காலங்களில் நாடகத்துறைகள் சமூகசீர் கேடுகளை திருத்துபவையாக அமைந்தன குடும்ப ஒற்றுமைக்கு வழிகாட்டுபவையாக அமைந்தன. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை கடைப்பிடிக்கப் பண்ணுபவையாக இருந்தன. இன்று எரிச்சல், பொறாமை ஒருவரை அழிப்பதெப்படி? கணவனுக்குத் தெரியாமல் மனைவியும் மனைவிக்குத் தெரியாமல் கணவனும் செய்யும் செயல்களைத் தூண்டுபவையாகவும் அச் செயல்களை எவ்வாறு செய்யலாம் என்பதற்கு வழிகாட்டுபவையாகவும் அமைகின்றன. இன்றைய பல குடும்பப் பிரச்சினைகளுக்கும் பிள்ளைகள் தீய செயல்களை பின்பற்றுவதற்கும் பிள்ளைகளை விட்டுப் பெற்றோர்கள் வேறு வாழ்க்கைத் துணைகளைத் தேடுவதற்கும் காரணமாக நாடகங்கள் அமைகிறன.

விரலுக்குத் தக்கது வீக்கம் என்ற மொழிக்கே இன்று இடமில்லை. விரலை மிஞ்சி வீக்கம் செல்கின்றது. பிள்ளைகள் தமது குடும்பநிலைகளை அறிந்து குடும்பக் கஸ்டங்களைப் புரிந்து கொண்டு நடப்பதாக இல்லை கல்வியில் கவனம் செலுத்துவதில்லை ஆசிரியர்களுக்குத்தான் கருத்தரங்கு கணீப்பீடு மாணவர்களுக்கு புதிய உலகம் நவீன வாழ்க்கைமுறை இவற்றைக் கற்றுத்தருபவை இந் நாடகங்களே.

சிறுவர் முதல் பெரியோர் வரை உளவளத்தணை ்பது மிகவும் அவசியமான ஒன்று தமது உள்ளக்கிடக்கைகளை தமது அன்புக்குரியவர்களிடமோ மதிப்பிற்குரியவர்களிடமோ பகிர்ந்து கொண்டால் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை முறைக்கு அடி கோலும் இன்று உள்ளடக்கிடக்கைகளை பகிர்நது கொள்ள மனிதர்கள் அல்ல ஊடகங்களே உதவுகின்றன. அதுதான் உயர்குருதி அமுக்கம் எம்மைத் துரத்துகின்றது.

உலகம் நவீன மயமானாலும் கல்வி முறைகள் நவீன மயப்படுத்தப்பட்டாலும் சிறியார் முதல் பெரியோர் வரை தொலைக்காட்சி நாடகங்களுக்கு அடிமையாகாமல் இருப்பதாலேயே எமது கல்வியை, நன் நடத்தைகளை, சந்தோஷமான வாழ்க்கை முறைகளை வளர்த்துக் கொள்ள முடியும்...

தொலைக்காட்சி நாடகங்கள் பார்ப்பது சிறந்த பொழுது போக்கல்ல..... நமது பொழுதுகளை மற்றவர்களுக்கு பயனுடையதாக்குவதே சிறந்த பொழுது போக்கு.



தென்னாசிய வலய ஒத்துழைப்பு அமைப்பு

South Asian Association of Regional Co-operation

(Saarc – சார்க் அமைப்பு)

திருமதி தழிழ்வாணி குமாரதாஸ்
BA (Hons)

தென்னாசிய நாடுகளிணைந்து வலய ரீதியான அமைப்பாக செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே சார்க் அமைப்பாகும். இந்த அமைப்பினை ஏற்படுத்துவதற்காக வங்களாதேஷின் ஜனாதிபதியான சியா உல் ரஹீமான் ஆலோசனை வழங்கி இருந்தார். 1983 யூன் மாதம் புதுடெல்லி நகரில் வலய வெளிநாட்டு செயலாளர்களின் மூலம் ஒத்துழைப்பினை வழங்கி 9 துறைகள் பற்றிய திட்டமிடலை முன்வைத்தார்.

அந்த 9 துறைகளும் பின்வருமாறு

- விவசாயம் கிராம அபிவிருத்தி
- தொடர்பாடல், வானிலை விஞ்ஞானம்
- சனத்தொகை செயற்பாடு
- போக்குவரத்து
- தபாற்சேவை
- விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
- விளையாட்டு
- கலை
- கலாச்சார செயற்பாடுகள்

1985 டிசெம்பர் 8ம் திகதி பங்களாதேஷின் பார்க்கா நகரில் தென்னாசிய வலய ஒத்துழைப்பு அமைப்பு (Saarc) சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகள்

இவ் அமைப்பில் வங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் அங்கத்துவம் பெறுகின்றன. இவ் அமைப்பில் ஆப்கானிஸ்தான் 2007 ஏப்ரல் 3ம் திகதி முதல் அங்கத்துவம் பெறுகின்றது.

இவ் அமைப்பின் நோக்கங்கள்

- வலய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம், கலாச்சார அபிவிருத்தி
- பொருளாதார சமூக, கலாசார, விஞ்ஞானத் தொழில்நுட்பத்துறை ரீதியான செயற்பாடுகளில் பங்குகொள்ளல், பரஸ்பர உதவிகளைப் பரிமாறிக்கொள்ளல்.
- வலய நாடுகளில் மக்களின் பொதுச்சேவை நலன் நடவடிக்கைகளை முன்னேற்றுதல், வாழ்க்கைத்தரத்தைக் கட்டியெழுப்புவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வலய நாடுகளில் சமாதானத்தையும் தன்னம்பிகைகளையும் விருத்தி செய்தல்.
- அங்கத்துவ நாடுகயளில் நிலவும் பிரச்சினைகைள கவனத்தில் கொள்ளல், மற்றும் அவற்றிக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்

ஓவியக்கலை ஒருபார்வை

திருமதி சத்தியபாமா ஞானேந்திரன்
B.F.A. Dip.in.Edu.ஆசிரியர் சித்திரம்

அழகியற்கலைகளினுள் ஒன்றாக விளங்குவது ஓவியமாகும்.மனிதன் மொழியைப் பயன்படுத்துவதற்குத் தொடங்க முன்னரே தனது உள்ளத்தின் உணர்வுகளை ஓவியத்தின் வாயிலாக பெலப்படுத்தினான். ஓவியக்கலையை நயப்பதற்கு மொழி அவசியம் இல்லை. ஆழமான கட்புலன் உணர்வு இருந்தாலே போதுமானது.

மனிதன் தனது உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தவும், தான் இயற்கையில் காணும் காட்சிகளை விபரிக்கவும், ஓவியக்கலை ஓர் ஊடகமாக விளங்குகின்றது. அது இன்று அழகியற்கலைகளுள் பிரதான இடத்தைப் பெற்று சாதி, மத, மொழி, பால், நிற வேறுபாடுகளிற்கு அப்பாற்பட்ட பொது மொழியாக மாறியுள்ளது.

ஓவியக்கலையானது ஒருமனிதனின் ஆளுமையை விருத்தி செய்வதிலும், அவனது தனித்துவத்தை பேணுவதிலும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. மேலும் உடல்ரீயதாகவும், உளரீதியாகவும் மனிதவாழ்வில் வளம்பெற உதவுவதோடு ஒரு மனிதனை பூரணத்துவம் உடையவனாக மாற்றுகின்றது.

சுற்றாடலில் காணப்படும் அனைத்து விடயங்களும் மனித வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டவையாகும். மக்கிடையே சூழலுடன் இணைந்த அழகியல் பெறுமானம் பற்றிய விழிப்புணர்வை இக்கலை ஏற்படுத்துகின்றது.

மக்கள் வாழ்க்கையிலே எதிர்நோக்கும் பல்வேபறு முரண்பாடுகள், உளத்தாக்கங்கள் என்பன நிகழும் சந்தர்ப்பங்களில் ஆக்கபூர்வமாக இயங்குவதற்குத் தேவையான சிந்தனா சக்தி விருத்தியையும் வாழ்க்கையின் பல்வேறு தேவைகளுக்காக தரம் உயர்ந்த படைப்புக்களை உருவாக்குவதிலும் இவ் ஓவியக்கலை சிறப்பிடம் பெறுகின்றது.

எமது வாழ்க்கையை நாம் பயனுடையதாக கழிக்கும் திறன் போல நாம் ஏதோனும் ஒரு கருமத்தை வினைத்திறன் உடையதாக ஆற்றுவதற்கும் அவரவர் பற்றிய மதிப்பும் எண்ணமும் உடையவராய் கடமையாற்றுவதற்கும் ஒருவருக்கொருவர் நல்லெண்ணத்தை ஏற்படுத்தவும் தேவையான மனப்பாங்கு, திறன், விருத்தி என்பன இச்சித்திரக்கலை மூலம் எமக்கு கிடைக்கின்றது.

இவ்வாறான சிறப்புக்களை தன்னகத்தே கொண்ட ஓவியக்கலையானது ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதனின் இருப்பிடங்களான குகைகள் போன்றவற்றிலேயே ஆரம்பமானது அக்கால மனிதன் தான் வெளியில் கண்ட காட்சிகளை ஓவியமாக வரைந்தான். புராதன ஓவியக்கலையின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக உலகின் பல்வேறு நாடுகளிலும் காணப்படும் குகை ஓவியங்களை கூறலாம். இக்குகை ஓவியங்களுக்கு உதாரணமாக பிரான்சில் காணப்படும் லஸ்கோ மற்றும் ஸ்பானியாவில் காணப்படும் அல்ராமீரா மற்றும் இலங்கையில் காணப்படும்

தந்திரிமலை, பில்லவ, துறவக போன்ற குகை ஓவபியங்களைக் குறிப்பிடலாம்.

ஆரம்ப காலத்தில் வெறும் குறியீடுகளாக காணப்பட்ட ஓவியமானது காலப்போக்கில் மனிதனின் அறிவு முதிர்ச்சி காரணமாக பல்வேறு பரிநாமங்களை பெற்றது.

ஆண்டான் அடிமை சமுதாயத்தில் ஓவியக்கலைஞனுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்படவில்லை, ஆட்சியாளனின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே ஓவியனால் ஓவியம் வரைய முடிந்தது. அவனால் எதனையும் சுதந்திரமாகச் சிந்தித்து வரைய முடியாமல் போனது.

இந்நிலையானது பின்பு வந்த காலப்பகுதியில் மாறி ஓவியக் கலைஞர்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டது. இதனால் ஓவியக்கலை பெரு வளர்ச்சி கண்டது. உதாரணமாக எகிப்திய, கிரேக்க ஓவியங்களை கூறலாம். ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக ஐரோப்பிய நாடுகளுள் ஒன்றான இத்தாலியில் பல்வேறு துறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டது. இம்மாற்றமானது ஓவியக் கலையிலும் ஏற்பட்டது. இக்காலப்பகுதியில் உலகப் புகழ்பெற்ற ஓவியர்களான மைக்கல் அஞ்சலோ, லியானாடோ டாவின்சி, றாபாயல்சான்சியோ போன்றோர்கள் தோன்றினார்கள். இவர்களால் பல்வேறு ஓவியங்கள் படைக்கப்பட்டன. இன்றும் உலகமக்கள் அனைவரினதும் மனங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் உலக புகழ்பெற்ற ஓவியமான மொனலிசா டாவின்சியால் வரையப்பட்டது.

இவ்வாறாக மரபுவழி ஓவியங்களை மட்டும் படைத்துக் கொண்டிருந்த ஓவியர்கள் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக புகைப்படக் கருவி கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஓவியர்கள் தமது மரபை மாற்றிக் கொள்ளத் தலைப்பட்டனர். ஏனெனில் ஒரு ஓவியனால் பல மணி நேரம் செலவு செய்து வரையப்படும் ஓவியங்களுக்கு பதிலாக ஒருசில நிமிடங்களிலேயே புகைப்படக் கருவியின் மூலம் அதனைப் படம்பிடித்துக் காட்ட முடியும். இதனால் ஓவியர்கள் வெளியில் காணும் காட்சிகளை விடுத்து தமது மனதில் ஏற்படும் உணர்வுகளுக்கு புதிய வடிவம் கொடுக்க தொடங்கினார்கள். இதுவே பிற்காலத்தில் நவீன ஓவியமாகப் பரிணமிக்கின்றது. இது காலப்போக்கில் பல்வேறு ஓவியக் கொள்கைகளை உருவாக்கியது. இவ் ஓவியக் கொள்கைகளாக மனப்பதிவு வாதம், கனவடிவு வாதம், அரூப வாதம், அகவய ஐதார்த்த வாதம் போன்றன காணப்படுகின்றது.

எனவே முடிவாக நோக்குமிடத்து ஓவியக் கலையானது பல்வேறு படிமுறைகளாக வளர்ச்சி பெற்று பல்வேறு சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு மனித வாழ்க்கையில் இன்றியமையாத பெரும் பங்கினை வகிக்கின்றது.

விரதங்களும் மனித வாழ்வும்

திருமதி. மாலினி சிவசுதன்
ஆசிரியை

விரதமாவது மனம் பொறிவழிப்போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் எனும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு விதிப்படி வழிபடுதல் ஷ" என்பது விரதம் என்பதற்கு நாவலர்பெருமானது வரைவிலக்கணமாகும். விரதம், நோன்பு, உபவாசம் என்பன ஒரே தன்மையுடையனவே.

நாம் சில தேவைகளின் பொருட்டு இறைவனிடம் எமது வேண்டுதல்களை முன் வைத்து குறிப்பிட்ட காலத்துக்கு அனுட்டித்து அதன் பின் விரத உத்தியானம் செய்பவவை காமிய விரதங்கள் ஆகும். தாய் தந்தையர் இறந்த திதிகளில் வரும் சிரார்த்த தின விரதம் அமாவாசை விரதம், பௌர்ணமி விரதம், புரட்டாதி மாத மாளய பட்ச விரதம் என்பன பிதிர்களுக்குரிய விரதமாகும்.

விரதங்களை நாம் எமது மனம் போன போக்கில் அனுட்டிக்கப்படக் கூடாது விரதம் அனுட்டிப்பதற்கான நோக்கம், காலம், அனுட்டிக்கப்பட வேண்டிய முறை என்பவற்றை சரியான முறையில் அறிந்து கொண்டு அனுட்டிக்க வேண்டும். அத்துடன் ஆசாரா சீலர்களாகவே இருத்தல் வேண்டும். மற்றவர்கள் விரதம் அனுட்டிக்கின்றார்கள் என்பதற்காக நாங்களும் விரதம் அனுட்டிக்கக் கூடாது. நோயாளிகள் வயதானவர்கள், குழந்தைகள் விரதம் அனுட்டிக்க வேண்டிய அவசியம் இல்லை.

விரதம் அனுட்டிக்கும் திருமணமான பெண்கள் தமது மாமியாரின் அனுமதி பெற்ற பின்னரும் கன்னிப் பெண்கள் தமது பெற்றோரின் அனுமதி பெற்ற பின்னருமே விரதம் அனுட்டிக்க வேண்டும். இல்லை எனில் விரதம் அனுட்டிப்பதால் பயன் கிடைக்காது. விரத்ததை ஆரம்பிப்பதற்கு முன் இன்ன நோக்கத்திற்காக இன்ன முறைப்படி இவ்வளவு காலம் இவ் விரதத்தை அனுட்டிக்கிறேன் என்று சங்கல்ப்பம் செய்து ஆலயத்தில் அர்ச்சனை செய்து ஆரம்பிக்க வேண்டும். இந்த விரதம் எனக்கு ஏற்றது தானா? என தெரிந்து அனுட்டிக்க வேண்டும். திருமணம் ஆகாத கன்னிப் பெண்கள் கந்தசஷ்டி விரதம், வரலட்சுமி, கேதார கௌரி விரதம் போன்றவற்றை அனுட்டிக்கு முன் அவ்விரதம் அனுட்டிக்கப்படும் நோக்கத்தை சரியாக தெரிந்த கொண்டு அனுட்டிக்க வேண்டும். கந்தசட்டி விரதம் புத்திர பாக்கியம் வேண்டி அனுட்டிக்கப்படுவது இதனை கன்னிப் பெண்கள், மாணவர்கள், அனுட்டிக்கலாமா? எனவே வரன் முறை தெரிந்து விதிப்படி அனுட்டிக்க வேண்டும். சிறுவர்கள் அதாவது பாடசாலை மாணவர்கள் கல்வித் தெய்வமாகிய சரஸ்வதியைப் போற்றி நவராத்திரி விரதம் அனுட்டிக்கலாம்.

விரதம் அனுட்டிப்போர் அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்னர் எழுந்து நீராடி சந்தியாவந்தனம் முதலிய அனுட்டானங்களை முடித்து வீட்டில், ஆலயத்தில் வழிபாடு செய்தல் வேண்டும். திருமுறைப் பாடல்கள் ஓதுதல் சிவசின்னம் அணிதல், உணவினை விடுத்தல் அல்லது சுருக்குதல் போன்றவற்றைச் செய்தல் வேண்டும். சினிமாப்படம் பார்த்தல் போன்ற தேவையற்ற விதங்களில் பொழுதைக்கழித்தல் தகாது. மாமிச உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். தாமச குணத்தை அதிகப்படுத்தும் உள்ளி, வெங்காயம், முருங்கைக்காய், போன்றவற்றை உணவில் சேர்த்தல் தகாது. வெற்றிலை, புகையிலை, மதுபானம் என்பவற்றைத் தவிர்த்தல் வேண்டும் விரத காலங்களில் இயன்றளவு தானதர்மம், மகேஸ்வர பூசை என்பன செய்தல் வேண்டும்.

விரதம் அனுட்டிக்க ஆரம்பித்தால் இடையில் நிறுத்தக் கூடாது. இதனால் விரதபலன் கிடைக்காது விரதத்தை தூய்மையான முறையில் அனுட்டிக்க வேண்டும். உரிய காலம் முடிந்ததும் விரத உத்தியாபனம் செய்து விரதத்தை நிறுத்தவேண்டும்.

சைவ சமயம் சம்பந்தமான சில தகவல்கள்

திருமதி சுகுணா சீனிவாசகம்
B.A (Hons) Dip.in.Edu

பஞ்சாங்கம்

ராசிகள் 12

நாள் திதி நட்சத்திரம் யோகம் கரணம் இவை ஐந்தையும் குறிப்பிடுவது பஞ்சாங்கம் எனப்படும்.

ராசிகள் 12

மேஷம்,ரிஷபம்,மிதுனம்,கடகம்,சிம்மம்,கண்ணி,துலாம்,விருட்சிகம்,தனுசு, மகரம்,கும்பம், மீனம் எனப் பன்னிரண்டு ராசிகள் உண்டு

நட்சத்திரங்கள் 27

அச்சுவினி,பரணி,கார்த்திகை,ரோகினி,மிருகசீரிஷம், திருவாதிரை,புனர்பூசம்,பூசம் ஆயிலியம்,மகம், பூரம்,உத்தரம்,அத்தம்,சித்திரை,சுவாதி, விசாகம்,அனுஷம்,கேட்டை, மூலம்,பூராடம்,உத்திராடம்,திரவோணம்,அவிட்டம்,சதயம்,பூரட்டாதி,உத்தரட்டாதி.ரேவதி

உத்தி,அமிர்தம்,ரோகம்,லாபம்,தனம்,சுகம்,விஷம்,சோரம் என எட்டுவகையானவை கௌரிபஞ்சாங்கத்தில் உண்டு இதைகவனித்து அமிர்தம், லாபம், தனம், சுகம், உத்தி எனப் போடப்பட்டிருக்கும் வேளைகளில் சுபகாரியம் செய்யலாம் மற்றநேரங்களில் சுபகாரியம் செய்யக்கூடாது

இராகு காலம் எமகண்டம் என்று போடப்பட்டிருக்கும் காலங்களிலும் சுபகாரியம் செய்யக்கூடாது கரிநாள் என போடப்பட்டிருக்கும் நாட்களிலும் சுபகாரியம் செய்யக்கூடாது

ராகுகாலம்	ஞாயிறு	-	பகல்	மணி	12.00	- 1.30
	திங்கள்	-	காலை	மணி	10.30	- 12.00
	செவ்வாய்	-	காலை	மணி	9.00	- 10.30
	புதன்	-	காலை	மணி	7.30	- 9.00
	வியாழன்	-	காலை	மணி	6.10	- 7.30
	வெள்ளி	-	பகல்	மணி	3.10	- 4.30
	சனி	-	பகல்	மணி	1.30	- 3.10
எமகண்டம்						
	ஞாயிறு	-	மாலை	மணி	4.30	- 6.00
	திங்கள்	-	காலை	மணி	7.30	- 9.00
	செவ்வாய்	-	பகல்	மணி	3.00	- 4.30
	புதன்	-	பகல்	மணி	12.00	- 1.30
	வியாழன்	-	பகல்	மணி	1.30	- 3.00
	வெள்ளி	-	காலை	மணி	10.30	- 12.00
	சனி	-	காலை	மணி	9.00	- 10.30

திதிகள்

அமாவாசை, பிரதமை துகிதியை, திருதியை, சதுர்த்தி பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி,
தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி என திதிகள் உள்ளன

இதில் சுபகாரியங்களுக்குரிய திதிகளும் உள்ளன சுபாகாரியங்கள் செய்யக்கூடாத திதிகளும் உள்ளன அதனை நன்றாகக் கவனித்து செயற்பட வேண்டும்.

வளர்பிறை தேய்பிறை

அமாவாசை வந்து 15ம் நாள் பௌணமி வரும் அமாவாசை வந்தால் வளர்பிறைக்காலம் பௌர்ணமிவந்தால் தேய்பிறைக்காலம் ஆகும்.

பஞ்ச பட்சிகள்

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒரு பட்சி உண்டு

1) அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகினி, மிருகசீரிடம் இவை ஐந்திற்கும் பட்சி - வல்லூறு
2) திருவாதிரை, புணர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம் இவை ஆறுக்கும் பட்சி - ஆந்தை
3) உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம் இவை ஐந்திற்கும் பட்சி - காகம்
4) அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம், இவை ஐந்திற்கும் பட்சி - கோழி
5) திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி இவை ஆறிற்கும் பட்சி - மயில்

பருபட்சி நாட்கள்

இந்த நாட்களில் அவரது பஞ்சபட்சியானது செயலிழந்துவிடும். இந்த நாட்களில் எந்தவித சுபகாரியமும்; பிரயாணமும், புதிய முயற்சிகளும் செய்யக் கூடாது

வல்லூறு - பருபட்சி நாட்கள்

வளர்பிறை - வியாழன், சனி
தேய்பிறை - செவ்வாய்

ஆந்தை - பருபட்சி நாட்கள்

வளர்பிறை - ஞாயிறு, வெள்ளி
தேய்பிறை - திங்கள்

காகம் - பருபட்சி நாட்கள்

வளர்பிறை - திங்கள்
தேய்பிறை - ஞாயிறு

கோழி - பருபட்சி நாட்கள்

வளர்பிறை - செவ்வாய்
தேய்பிறை - வியாழன், சனி

மயில்- பருபட்சி நாட்கள்

வளர்பிறை - புதன்
தேய்பிறை - புதன், வெள்ளி

சகுணங்கள்

சுபசகுணங்கள்

கன்னி,பசு,ரத்னம்,மலர்,தயிர்,யானை,குதிரை, பல அந்தனர்கள், இரு அந்தனர்கள் கொடி எரியும் அக்னி, பூர்ணகும்பம், தாமரை, சந்தனம். பிணம், வெள்ளைமாலை, சலைவைத்துனி, குழந்தையுடன் உள்ளபெண், கன்றுடன் கூடிய பசு, வாத்திய ஒலி, நெய்,பால், இவை எதிரில் வந்தால் உத்தமம்

வாழ்க நன்றாய் இரு எழு? புறப்படு முதலிய ஒலி வருமானால் நல்லது

அசுப சகுணங்கள்

மோர்,எண்ணெய் தேய்துக் கொண்டால், தலைமுடி விரித்துப்போட்டிருப்பவள், ஊர்சுத்துபவன்,
குயவர்,சிவத்தமலர்,ஈரத்துணி,உப்பு,பன்றி,வலதுகால்தடுக்குதல், அழுகை பாம்பு, முயல் இவை எதிரில் வரலாகாது

விளக்கேற்றும் முகத்தின் பலன்கள்

ஒருமுகம் - மத்திமமானது
இருமுகம் - குடும்ப ஒற்றுமை ஏற்படும்
மூன்றுமுகம் - புத்தி சுகம் ஏற்படும்
நான்குமுகம் - பசு,பூமி,செல்வம் பெருகும்
ஐந்துமுகம் - சகல நன்மைகளும் கிடைக்கும்



அறிந்த விஷயமும் அறியாத செய்தியும்.....

தீயணைக்கும் வீரர்கள் ஜீவலைக்குள் நுழைவது எப்படி?

திருமதி. தே. லிங்கேஸ்வரன்
ஆசிரியை

தீயணைப்புப் படையில் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட உடலையே பயன்படுகிறதுஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் எளிதில் தீப்பிடிக்காது என்பதை நாம் அறிவோம் இதே ஆஸ்பெஸ்டாஸ் (Asbestos) கொண்டுதான் தீயணைப்பு வீரர்களின் உடை தயாரிக்கப்படுகிறது.

இவ்வுடையின் மேல் சில்வர் பூச்சுக் கொடுக்கப்படுவதால் தகிக்கும் வெப்பம் தீ எதிரொளிப்பதின் மூலம் தடுக்கப்படுகிறது. இப்படியாக பெரும் தீக்குள் எந்தவிதத் தடுப்புமில்லாமல் சென்று ஆபத்தில் உள்ளோரைக் காக்க முடிகிறது

தீ சூழும்போது ஆக்சிஜன் குறைந்து இணி2 அதிகரிப்பதால் மூச்சு விட சிரமம் ஏற்படும் இதனால் இம்மாதிரி உடைகளில் ஆக்ஸிஜன் சிலண்டரும் தயாரிக்கப்படுகிறது.

மழை பெய்யம் போது சில வேளைகளில்மழைத்துளிகளோடு, ஐஸ் கட்டிகளும் விழுகின்றதே ஏன்?

ஆங்கில ஹெயல் ஸ்டோன்ஸ் என ந்த ஆலங்கட்டி மழையை அழைப்பார்கள் மழைத்துளிகள் ஈர நைப்பான மேக அடுக்குகளில் மேல் நோக்கி உந்தப்படும்போது இப்படிஆலங்கட்டிகளாக மாறுகின்றன. மழைத்துளிகளாக உருவாகி கீழே விழும் நிலையில் கீழேவிழாமல் தொடர்ந்து மேல் நோக்கித் தள்ளப்படும்போது இத்துளிகளைச் சுற்றி புதிய ஈரம் (நைப்பு) மூடிக்கொள்ள இது கெட்டியாகி விடுகிறது.

பெரிய ஆலங்கட்டியை இரண்டாகப் பிளந்து ஆராய்ந்தால் பல அடுக்குகளைக் காணலாம் ஆலங்கட்டிகள் உருண்டையாகத்தான் இருக்கும் பனித்துகள் (ஸ்ரோ.ப்ளேக்ஸ்) எப்போது அறுகோணப் படிகளாகக் காணப்படும் மாரிகாலத்தில் பனிமழை பெய்யும் ஆனால் ஆலங்கட்டி மழை வருடத்தில் எந்தப் பருவத்திலும் பெய்யலாம்.

ஓடிக்கொண்டிருக்கும் ரயிலின் ஓசை பாலத்தைக் கடக்கும் போது மாறுபடுவது ஏன்?

ஒரு ரயில் அந்த பாதையில் செல்லும்போது மூன்று காரணங்களால் ஓசை உண்டாகிறதுமுதலாவது தண்டவாளத்துக்கும் ரயிலின் சக்கரத்துக்கும் உள்ள உராய்வு.

இரண்டாவது இரண்டு தண்டவாளத்துக்கும் இடையில் இருக்கும் இடைவெளியில் சக்கரத்தினால் ஏற்படும் விளைவு தண்டவாளத்தில் உள்ள ஸ்வீப்பர் கட்டைகள் ஜல்லிக்கற்களின் மீது நன்கு பதிக்கப்பட்டிருப்பதால் அதன் அதிர்வுகள் குறைகின்ற அதன் ஓசையும் பூமியினுள் உறிஞ்சப்பட்டு விடுகின்றன.

ஆனால் பாலத்தின் மீது ரயில் செல்லும் போது இந்த ஸ்வீப்பர்

கட்டைகளும் அதைத் தாங்குகிற தூண்களும் பூமியின் மீது பதிக்கப்பட்டாததால் அதன் அதிர்வுகள் அதிகமாகி ஓசையும் அதிகரிக்கிறது.

உள்ளீடற்ற தன்மையாலும் அதிர்வு ஓசை தரையிலும் நீரிலும் எதிரொலிக்க கப்படுவதாலும் ஓசை இன்னும் அதிகரிக்கிறது. **A/C** கார் பயன்படுத்துவோருக்கு ஓர் எச்சரிக்கை! **A/C** கார் பயன்படுத்துபவரா நீங்கள் அப்படியானால்

நீங்கள் இதை கண்டிப்பாகப் படிக்க வேண்டும்

A/C காரை பயன்படுத்தும் போது எப்போதுமே காருக்குள் நுழைந்தவுடன் **A/C** ஐ இயக்கி ஜன்னலை மூடக்கூடாது காருக்குள் அமர்த்தவுடன் காரின் ஜன்னல்களை ஒரு சில நிமிடங்களுக்கு திறந்த வைத்துவிட்டு அதன் பின்னர் தான் **A /C** ஐ இயக்கவேண்டும்.

இது குறித்த நிகழ்த்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளில் பல அதர்ச்சி உண்மைகள் கண்டறியப்பட்டுள்ளன பொதுவாகவே அனைத்து கார்களுக்குள்ளும் அமைந்துள்ள DASHBOARD இருக்கைகள் மற்றும் காருக்குள் உள்ள அனைத்து பிளாஸ்டிக்கினால் ஆன பாகங்கள் பென்சீன் எனப்படும் கேன்சரை உருவாக்கும் நச்சை உமிழ்கின்றன.

சாதாரணமாக மனித உடல் ஏற்றுக் கொள்ளும் பென்சீனின் அளவு சதுர அடிக்கு 50 மில்லி கிராம்.

வீடுகளில் நிரலில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் காருக்குள் சதுர அடிக்கு 400 முதல் 800 மில்லி கிராம் என்ற அளவில் பென்சீன் இருக்கும் அதே வேளையில் வெயிலில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் காருக்குள் பென்சீனின் அளவு சதுர அடிக்கு 4000 மில்லி கிராம் வரையில் அருக்கும் இது மனித உடல் ஏற்றுக் கொள்ளும் அளவை விட 40 மடங்கு அதிகம்

இதன் காரணமாக கேன்சா லுக்கூமியா சிறு நீராக பாதிப்பு கல்லீரல் பாதிப்பு போன்றவை ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன

கார்களிலுள்ள ஜன்னல்களை சிறிது நேரம் திறந்து வைப்பதனால் அதிகப்படியான பென்சீன் வெளியேறிவிடும் **A /C** காருல உக்காந்த போயி என்ஜாய் பண்ண விரும்புறவுங்க கொஞ்ச நேரம் ஜன்னல திறந்து காத்து வாங்கிட்டு அப்புறமா A/C ஆண் பண்ணி என்ஜாய் பண்ணுங்க.



நனோ தொழிநுட்பம் (Nano Technology)

திருமதி. கோமளராஞ்சிதம் கந்தவேள்
ஆசிரியை
யா/இராமநாதன் கல்லூரி

மனிதனின் பரிணாம வளர்ச்சிப் பாதையில் விஞ்ஞான தொழிநுட்ப விருத்தி புதிய கண்டு பிடிப்புக்கள் என உலகமயமாக்கப்பட்ட அறிவியல் பயணத்தின் பார்வை இன்று நனோ உலகினுள் புகுந்து புதுமை படைக்க தொடங்கியுள்ளது.

இனி எங்கும் நனோ எதிலும் நனோ என்றவகையில் குழந்தைகள் முதல் முதியோர் வரை நாகரிகமாக உச்சரிக்கும் ஒரு சொல்லாக "Nano" தொழில்நுட்பம் வளர்ச்சி பெற்றுள்ளது

நனோ பற்றி அறிந்திராதவர்கள் கூட நுண்ணிய பொருட்கள் யாவற்றிற்கும் நனோவை அடைமொழியாக வைத்திருப்பது நனோ தொழிநுட்பத்தின் பால் உலகம் ஈர்க்கப்படுவதனை வெளிப்படுத்தி நிற்கின்றது.

நனோ என்பது மிகநுண்ணிய என்ற பொருளைத் தருகின்ற கிரேக்க மொழிச் சொல்லாகும். நனோ என்பது மிகச் சிறிய பருமனை அளக்கும் ஒரு அளவீட்டு அலகாகும். அதாவது m இன் 1 பில்லியனில் 1 பங்கு ஆகும். $(1nm = 10^{-9}\ m)$

அதாவது

1 மில்லிமீற்றர்	$= 10^{-3}m$
1 மைக்ரோ மீற்றர்	$= 10^{-6}m$
1 நனோ மீற்றர்	$= 10^{-9}m$
1 பிக்கோ மீற்றர்	$= 10^{-12}m$

என்ற வரிசையில் தொடரும் பெம்டோ (febto) அட்டோ, செப்டோ, யோக்டோ என்ற நுண்ணிய அளவீடுகள் வரையறை செய்யப்பட்டு அலகுகளுக்கு பெயரிடப்பட்டுள்ளது.

இவ்வகையிலமைந்த வெறுங்கண்ணுக்கும் புலப்படாதகளில் நனோவின் அளவு பற்றி விளக்குவோமாயின்

ஒரு தலைமயிரின் தடிப்பின் 1/100000 பங்கு nm இற்குச் சமனானதாகும்

பொதுவாக அணுக்களின் விட்டம் 0.lnm ஆகும்

ஒளிறுணுக்கு காட்டியினூடே 200nm விட்டமுடைய பொருட்களையே அவதானிக்க முடியும்

இலத்திரன் நுணுக்கு காட்டியினூடாக 0.5nm அளவுள்ள பொருட்களையே அவதானிக்கமுடியும்

பத்து ஐதரசன் அணுக்களை ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக அடுக்கினால் பெறப்படும்
நீளமே lnm.

ஒரு செங்குருதிக் கலத்தின் விட்டம் 2500 nm.

என்ற தகவல்களிலிருந்து நனோ மீற்றரின் நுண் அளவை அனுமானிக்க முடியும். இவ்வளவு நுண்ணிய நனோ அளவு பருமனுள்ள பாகங்களை கொண்டு பொருட்களை வடிவமைக்கும் நுட்பமே நனோ தொழிநுட்பமாகும். சர்வதேச நியதிகளுக்கமைய 1-100 nm இற்கு இடைப்பட்ட பருமனுள்ள நனோ துணிக்கைகளை கொண்டு பொருட்களை தயாரிக்கும் நுட்பமே நனோ தொழிநுட்பமாகும்.

பொருட்களை உற்பத்தி செய்தலில் இருவிதமான அணுகு

முறைகள் பின்பற்றப்படுகின்றது. அவையாவன

1) Top - Down Method
2) Bottom - Up Method

Top - Down Method அணுகுமுறையே இன்றுவரை பொருட்களை தயாரிக்க பயன்படுகின்றது. இம்முறையில் ஒட்டுதல், தகடாக்கல், கம்பியாக்கல் மூலம் படிப்படியாக மூலப்பொருள் அளவை மாற்றிக் கொண்டே (குறைந்து) செல்லுதல் Micro technology எனப்படும்.

Bottom-up அணுகுமுறை அணு மட்டத்திலிருந்து ஆரம்பித்து அதன் முடிவுப் பொருளை உற்பத்தி செய்யும் முறையாகும் அதாவது அணு/மூலக்கூறுகள் அளவிலான பகுதிகள் தேவைக்கேற்ப சீராக ஒழுங்குபடுத்தப்பட்டு உயர்தரம் கொண்ட முடிவுப் பொருளை உற்பத்தி செய்தல் Nano technology எனப்படும்.

உயிர்க்கலங்.கள் சிறந்த இயற்கையான நனோ தொகுத்களாகும் உயிர்க்கலங்களினுள் காணப்படுகின்ற கலப்புன்னங்கங்கள் குறித்த ஒரு தொழிற்பாட்டினை ஆற்றுதலுக்காக சிறத்தலடைந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் நனோ அளவிலான பகுதிகளாக இருப்பதுடன் உயர் செயற்பாட்டுத்திறன் கொண்ட நனோத் தொழிற்சாலைகளாகும், இவ்வுன்னத படைப்புக்களுக்கு இணையான செயற்பாட்டுத்திறன் கொண்ட செயற்கை கருவிகளை உண்டாக்கும் தொழிநுட்பமே நனோ தொழிநுட்பம் ஆகும்.

நனோ தொழிநுட்பத்தின் பொருட்கள் வாயு/திரவ வடிவில் இல்லாமல் குறிப்பிட்ட வரிசையில் மாறிக் கொண்டிருக்கும் திடப்பொருட்களாகும், இந்நனோ பொருட்கள்,கருவிகள் கண்ணுக்குப் புலப்படாத அளவில் செயற்படும் ஆற்றலுடையனவாக இருப்பதனால் அவற்றின் செயற்பாட்டை தான் உணரமுடியுமே தவிர கண்களால் காண இயலாது.

Nano technology இல் ஒரு திண்ம பொருளை நனோ மீற்றர் அளவிலான பருமனுக்கு கொண்டு வந்து அணுஅளவில் (நனோ துணிக்கைகள்) மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டு இரசாயன செயற்பாடுகள் மூலமாக ஒன்றிணைக்கப்படும் போது அவை அதிக சக்தியை பெறுவதுடன் பொறியியல் ரீதியில் செயற்பாட்டுத்திறன் (quantum fuctional / capability) மிக்கனவாகவும் உள்ளன அதன்படி நானோ தொழிநுட்டம் மூலம் உருவாக்கப்படும் அனைத்து சாதனங்களும் மிகுந்த ஆற்றலுடையனவாகக் காணப்படுகின்றன.



இந்நனோ சாதனங்கள் எதிர்காலத்தில் மருத்துவம், பொறியியல், இரசானவியல், சுற்றுப்புறசூழல், தொலைத்தொடர்பு ஆகிய துறைகளில் பெரும்புரட்சியை ஏற்படுத்தப் போகின்றது.

இன்று மருத்துவத்துறையில் நனோ ரோபோக்கள் நனோ கமராக்கள், சென்சர்கள், நனோ வடிகட்டிகள் சத்திரசிகிச்சை உபகரணங்களில் நனோ பூச்சுக்கள் (நுண்ணுயிர்கொல்லிகளுக்கான) என பல்வேறு விணைத்திறன் மிக்க மருத்துவ உபகரணங்கள் பாவனையில் உள்ளன

மேலும் நனோவின் உன்னத படைப்புக்கள் உடலை துளையிடாது பாதுகாத்து குறித்த பகுதிக்கு மட்டும் நனோ துகள்கள் மூலம் மருந்தை அனுப்பி சிகிச்சை அளித்தல் குருதியில் குளுக்கோசின் அளவை கணித்தல்

செயற்கையான என்பு/வன் கூடு தயாரித்தல், புற்றுநோய் கலங்களை தேடி அழித்தல் போன்ற பல்வேறு முயற்சிகளில் வீறுநடை போடுகின்றன.



இன்று உலகு எதிர்கொள்ளும் ஒரு பாரிய பிரச்சினை சக்தி நெருக்கடியாகும் இதற்கு மாற்று சக்தி வளங்களின் பயன்பாடு தேவையான ஒன்றாகும் இந்த வகையில் solar cell வினைத்திறன் குறைந்ததாகவும் விலை உயர்வானதாகவும் காணப்படுவதால் இதனை Nano technology மூலம் கூடிய வினைத்திறன் உடையதாக (15% - 45%) மாற்ற வேண்டும் என்பது Dr. அப்துள் கலாமினது 2020ல் இந்தியா என்ற கனவினுள் உள்ளடங்குகின்றது.



Nano technology ல் பயன்படும் பிரதான மூலகம் புளரீனினை (காபன்) எரிபொருட் கலங்களில் பயன்படுத்துதலினால் வினைத்திறன் மிக்கதாக்கல், மீகடத்தி தயாரிப்பு என்பன சக்தி நெருக்கடிக்கு நனோவின் ஆற்றல் மிகு சேவைகளாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று உலகளாவிய ரீதியிலான மற்றொரு பிரச்சினை சூழல் மாசடைதலாகும். இதில் பிரதானமாக வளிமண்டலம், நீர்கோளம் என்பன மாசடைதலை தடுத்து நிறுத்தும் முகமாக நனோவடிகட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை தூசுக்கள் பக்றீரியாக்கள் என்பவற்றை வடிகட்டுவதன் மூலம் வளி, நீர் என்பன மாசடைதலைத் தடுக்கின்றது.



ஆடை உற்பத்தியில் வியர்வையை உறுஞ்சக்கூடிய தூசுதுணிக்கைகள் படிவடையாத வகையில் நனோ துணிக்கைகள் பொருத்தப்பட்ட தயாரிப்புகளில் நனோ Technology புகுந்துள்ளது.

புறவூதாகதிர்களினால் தோலில் ஏற்படும் பாதிப்புக்களை தவிர்க்கக்மூடிய body lotion கள் நனோ Technology இன் ஊடுருவலினால் தரம் மிக்கவையாக சந்தைகளில் விற்பனையாகின்றது.

இவ்வாறாக அனைத்துத் துறைகளிலும் Nano technology கால் பதிப்பதன் மூலம் வினைத்திறன் மிக்க உறுதியான நீண்ட ஆயுளைக் கொண்ட உற்பத்திப் பொருட்களின் ஆளுகை பெரும் நனோ புரட்சியையே ஏற்படுத்தப்போகின்றது.

இந் Nano technology நுழைவினால் உலகம் அதிக அனுகூலங்களை பெறப்போகும் அதேவேளை Nano waste இனால் ஏற்படப்போகும் உடல் ரீதியான, சுற்றாடல் சார்ந்த பாதிப்புக்களுக்கும் முகம் கொடுக்க தயாராக வேண்டியது பெரும் சவாலே ஆகும்.

சாரணியத்தின் மேன்மை

போ. டெய்சி
யா/இராமநாதன்கல்லூரி

கல்வி என்பது மாணவரினது மறைந்திருக்கும் ஆற்றலை வெளிக் கொணர்ந்து அவர்களை சூழலுடன் இசைவாக்கம் பெற்ற ஓர் சிறந்த பிரஜையாக அவனை உருவாக்குவதே ஆகும். கல்விச் செயற்பாட்டில் இணைபாட விதானம் மாணவரின் அக, புற உளப்பாங்குகளை மெருகூட்டி மாணவனைச் சிறந்த ஆளுமை உள்ளவனாக மாற்றுவதில் முனைப்புடன் செயலாற்றுகிறது. சாரணியமும் ஓர் இணைப்பாட விதானச் செயற்பாடாகும். இச்சாரணியம் மாணவனை சமத்துவம், சகோதரத்துவம், பிற உயிர்களை நேசித்தல் தன்னலம் கருதாமை சேவையாற்றுதல் போன்ற பல பண்புகளை வளர்க்கின்றது.

இச்சாரணியம் 1908ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பேடன் பவல் பிரபு என்பவரால் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் 1912ஆம் ஆண்டு மாத்தளையில் ஆரம்பிக்கப்பட்ட இச்சாரணியஇயக்கமானது 1916ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் பெரிய பாடசாலைகளில் பரவத் தொடங்கியது. படிப்படியாக வளர்ச்சி பெற்று மிளிர்கிறது. தற்போது சாரணியத்தை நாட்டிலுள்ள அனைவருமே அறிந்திருக்கின்றார்கள். ஆதரிக்கின்றார்கள். அதனால் தான் நாட்டின் ஜனாதிபதியே இச்சாரணிய இயக்கத்தை ஆதரித்து அவரால் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி விருதே சாரணியத்தில் பெறப்படும் பெரிய விருதாகக் கருதப்படுகின்து.

சாரணன் ஒருவன் சகல துறைகளிலும் தேர்ச்சியுள்ளவனாகவும், சுய தேவைகளைத் தானே பூர்த்தி செய்யக் கூடியவனாகவும், உலக அனுபவம் மிக்கவனாகவும், அவதான சக்தி உள்ளவனாகவும் விளங்குகின்றான். தான் எடுத்துக்க கொண்ட எந்தக் காரியத்தையும் மனத் துணிவோடு செவ்வனே நிறைவேற்றிக் கொள்கின்றான். இதன் மூலம் சமுதாயத்தில் சிறந்த ஆளுமை மிக்கவனாகவும் அதாவது தலைமைத்துவப் பண்பு மிக்கவனாகவும் உருவாகின்றான். எவ்வித இடர்கள் ஏற்படினும் இன்முகத்துடன் அதனை ஏற்கவும் மலர்ந்த முகத்துடன் சேவையாற்றவும் சாரணியம் பயிற்றுகின்றது. சாரணன் என்றால் சமாதானத்தை விரும்புபவன் என்பது கருத்தாகும். இதன் அடிப்படையிலே தான் சாரணர் இடதுகை குலுக்குகின்றார். சாரணர் விதிகளும் வாக்குறுதிகளும் அவர்களது சேவையை வலியுறுத்தி நிற்கின்றன. இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது பேரும் புகழுமற்ற சகோதரத்துவம் புரிந்துணர்வும் மிக்க ஒரு சமுதாயத்தை சாரண இயக்கத்தினாலே உருவாக்க முடியும் என்பது தெளிவாகின்றது.

இன்றைய மாணவர்களே நாட்டின் நாளைய தலைவர்கள். எனவே நாளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்பி வைக்கின்ற பெரிய செயற்பாட்டைச் சாரணிய இயக்கம் வழங்குகின்றது என்று கூறினால் மிகையாகாது.

வாழ்க சாரணியம் வளர்க அதன் சேவை

கர்நாடக சங்கீதத்தின் தற்கால நிலை

திருமதி மகாலட்சுமி ஜெயநாதன்
(சங்கீத ஆசிரியை)

தற்காலத்தில் நமது கர்நாடக இசையின் நிலைபற்றி எடுத்துநோக்குகையில் ஒரு காலத்தில் சங்கீதம் ஒரு குறிப்பிட்டவர்களால் மட்டுமே குருகுலவாச முறையில் படிப்பதற்கான வாய்ப்பு இருந்துள்ளது ஆனால் இன்று இசை எல்லோருக்குமுரிய பொதுச்சொத்தாகக் கருதப்படுகிறது. சாதிமத ஆண் பெண் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடின்றி ஆர்வமும் திறமையும் உள்ள அனைவராலும் இன்று இசையைக்கற்க முடியும். பழங்காலத்தில் இக்கலை ஒருசிலரால் மட்டுமே கற்கமுடித்தது. " சீதாவர சங்கீத ஞானமும் டாதவ்ராலய" என்ற தியாகராஜரின் வாக்கு இதனை உறுதிப்படுத்தியது. ஆனால் இன்று இந்தநிலைமுற்றாகமாறி இசை பொதுச்சொத்தாக்கப்பட்டுள்ளது. சென்னைப்பல்கலைக்கழகம் அண்ணமைப்பல்கலைக்கழகம், தஞ்சைபல்கலைக்கழகம், காமராசர்பல்கலைக்கழகம் போன்றவை இசையில் இளங்கலை முதுகலை எம். பீல். டாக்டர் பட்ட வகுப்புகளை நடத்திவருகின்றன. மேலும் சென்னை இராணிமேரிக்கல்லூரி, தமிழிசைக்கல்லூரி, கலாசேத்திரம் போன்ற பல இசையைப் பட்டப்படிப்புகளாக நடத்திவருகின்றன. தமிழக அரசு சென்னை, மதுரை, கோவை, திருவையாறு ஆகிய நான்கு இடங்களில் இசைக்கல்லூரிகளையும் 17 மாவட்டங்களையும் அரசு இசைப்பள்ளிகளையும் வைத்து இசையைக்கற்பிக்கிறது இதைத்தவிர பல உயர் நிலைப்பள்ளிகளிலும் இசை ஒரு பாடமாகப் புகுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள அழகியல் கட்டாயப் பாடமாக்கப்பட்டு எல்லப்பாடசாலைகளிலும் கற்பிக்கப்படுகிறது மேலும் இராமநாதன் நுன்கலைக்கழகம் விபுலானந்தர் அழகியற்கற்கைகள் நிறுவகத்திலும் இளநுண்கலைமாணிக்கான பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் நடைபெறுகின்றன.

பழங்கால குருகுலவாசங்களின் இசையின் நுனுக்கங்ளை எல்லாம் பரவலாகற்பிற்பதில்லை தனது மானசீகமாணவனுக்கு அல்லது தனது சந்ததியர்களுக்கு மட்டுமே கற்பிக்கப்பட்டது. இதனால் இசையின் நுணுக்கங்களும் கனமார்க்கம் பாடும் முறையும் அழித்துவிட்டது. இசை நூல்களும் அவ்வளவாக வெளிவரவில்லை. ஆனால் தற்காலத்தில் பல அரிய நூல்களும் உரைநூல்களும் ஆராய்ச்சி நூல்களும் வெளிவந்துள்ளன. சங்கீதரத்னாகரம், நாட்டியசாஸ்திரம், பரதார்ணவம், பஞ்சமரபு, கூத்தநூல், தாளசமுத்திரம், கருணாமிர்தசாகரம், சங்கீதசம்பிரதாய பிரதர்சனி, சதுர்தண்டிப்பிரகாசிகை முதலி நூல்களும் வெளிவந்துள்ளன.

இசை ஆராய்ச்சியாளர்கள் பலரும் ஆய்வு செய்து யாழ்நூல், சிலப்பதிகாரத்து இசைத்தமிழ், பழந்தமிழ் இலக்கியத்தில் இசைஇயல், தமிழர்இசை, தமிழிசை இலக்கணமரபு, தென்னகஇசையியல், இந்திய

இசைக்கருவூலம் முதலி நூல்கலாக வெளிவந்துள்ளது , எண்ணற்ற இசை ஆராச்சி கட்டுரைகளும் மொழிபெயர்ப்பு நூல்களும் வெளிவருகின்றன.

மேலும் இசைவிழாக்கள் பற்றி சிந்திக்கையில் ஒவ்வொரு டிசம்பர்மாதத்திலும் சென்னையில் பலசபாக்களில் இசைவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றது. தற்பொழுது குறைந்து முப்பது சங்கீத சபாக்களில் இரு வாரங்களுக்க மேல் இசைநிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். இதபோல இலங்கையிலும் கூட பாடசாலைகளிலும் இடம்பெறும் தமிழ்த்தினவிழாக்கள் மற்றும் சரஸ்வதிப்பூசை, கலைவிழாக்கள் என்பனவும் மாணவர்களிடையே இசை ஆரவத்தை வளர்க்கின்றது வட இலங்கை சங்கீதசபையும் இசையை மேம்படுத்துகின்றது. அத்தோடு ஆலயக்கிரியைவிழாக்காலங்கள் மற்றும் இசைநிகழ்ச்சிகளின் போதும் இசைக்கலைஞர்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு கச்சேரிகள் நடைபெறுகின்றது.

வானொலி, தொலைக்காட்சி? திரைப்படம் போன்ற மக்களி தொடர்புச்சாதனங்களின் வாயிலாக மக்கள் இன்றும் நமது இசையின் இனிமையைக்கேட்டு உணரமுடிகின்றது. இசைத்தட்டு ஒலிப்பதிவுநாடா சிடி, கம்பியூட்டர் இன்ரநெட் போன்ற நவீனசாதனங்களும் இசையைப்பரப்புவதில் பெரும் பங்காற்றுகின்றன. அத்தோடு இசையைவளர்க்கும் கலைஞர்களுக்கு நாட்டில் உயரிய விருதுகளான பத்மஸ்ரீ, பத்மபூஷணம், போன்ற பட்டங்கள் வழங்கப்படுகின்றது. மேலும் கலைமாமணி, சங்கீதகலாநிதி, இசைப்பேரறிஞர் நாதபிரம்மம், சங்கீதகலாசிகாமணி, இசைக்கலைமணி, சங்கீதபூஷணம் போன்ற பலபட்டங்கள் வழங்கப்படுகின்றது. இதனால் சங்கீதகலைஞர்கள் மேலும் ஊக்கமடைகின்றனர். இன்று இசைபடிக்கும் மாணவர்களுக்கு பல இடங்களில் போட்டிகளை நடத்தி ஊக்குவிக்கின்றனர் வானொலிகளும்தொலைக்காட்சிகளும் கூட இசைப்போட்டிகளை நடத்தி பரிசுகளை வழங்குகின்றது. இத்தோடு மேலைநாட்டு இசைக்கருவிகளான வயலின், கிளாரினட், ஆர்மோனியம் போன்றவற்றில் மட்டுமே இசையை வாசித்துள்ளோம்.. ஆனால் இக்காலத்தில் சாக்கபோன், வயோலா, கித்தார், மேண்டலின், கீபோட்டு போன்ற ஐரோப்பிய இசைக்கருவிகளில்க்கூட நம்கர்நாடக இசையை வாசிக்கும் கலைஞர்கள் தோன்றியுள்ளார்கள். நமது கர்நாடக இசை தற்காலத்தில் இவ்வாறான ஒரு நிலையைப் பெற்றுள்ளது. இன்றும் அரசும் பொதுமக்களும் இசைக்கலைஞர்களுக்கு நல்ல ஆதரவினையே வழங்குகின்றனர்.

இசை வழங்கும் கற்றல் விசைகள்

மணிபரந்த மாகடலே மாலுருவ மாயிடினல்
அணிகிளரு மவனிதயத் தாமரை காணம்மானை

என்று பாடசாலைக் கீதம் இசைக்கும் பொழுது மாணவர்கள் அசைவின்றி இசைகேட்டு உணர்வுற்று நிற்கின்றனர். இசை கலந்த சொற்கள் அவர்கள் மனதில் கல்லூரியின் உயர்வையும் கற்றலின் உள விசையையும் தூண்டுகின்றது. உயர்வையும் கற்றலின் உள விசையையும் தூண்டுகின்றது. கருத்துக்களை உணர்வுடன் ஊட்டி மனிதர்களின் அறிகையைப் புடம் போடுவதில் இசைக்கு நிகர் எதுவும் இல்லை. இதனால்த்தான் இசையால் மனிதனை வளப்படுத்த முடியும்நம்பிக்கையும் இசையுடன் கூடி மனிதனை தெய்வீக நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் என்ற பக்தி இசை நெறியையும் காண முடிகின்றது. இத்தகைய இசையின் துணையுடன் பிள்ளைகளிடம் கற்றல் விசைகளைத் தோற்றுவிக்க முடியும் என்பது இசையின் மற்றுமோர் பரிமாணமாக உள்ளமை அவதானிக்க முடிகின்றது.

பிள்ளைகள் மழலை வகுப்புக்களில் கற்கும் பொழுது அவர்களின் சொற்களஞ்சியத்தை உருவாக்க ஆசிரியர்கள் பாடல்களைப் புகட்டுகின்றனர்.

நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலைமேல் ஏறி வா
மல்லிகைப்பு கொண்டு வா

எனப் பாடும் பொழுது மனப் படிமமாக இசை வடிவம் ஊட்டப்படுகின்றது. பிள்ளையும் தலையசைத்து கைகாட்டி உடல் உளத் தொழிற்றபாட்டில் முன்னேற்றம் அடைகின்றது. பிள்ளைகள் வளரும் பொழுது பாடப்படும் குழந்தைப் பாடல்கள் அவர்களின் மொழிவிருத்தியில் இசை விருத்தியில் ஆற்றல், விருத்தியில் வெளிப்பாட்டு விருத்தியுடன் அடிப்படை விசைகளாகினறன.

பிள்ளைகள் வளர்ந்து இசை வகுப்பிற்கு வருகின்றனர் பாடத்தில் உள்ள பாடப்படிமுறை வளர்ச்சிக்கு ஏற்ப அவர்களின் உள வயது விருத்திகட்கு உரிய முறையில் இசை வகுப்பின் பாட விதானம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இசை வகுப்பில் பயிலும் பிள்ளைகளிடம் தோற்றம் பெறும் கற்றல் வினைப்பாடுகள் அவர்களின் ஏனைய கற்றல் செயற்பாடுகளுக்கும் ஏற்ற உளவிசைகள் ஆகின்றன என்பதை சில விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்க முடியும்.

கற்றிலில் ஆர்வமும் எந்த ஒரு கற்றல் விடயத்திற்கும் அடிப்படையாகும். இசைவகுப்பின் பாடப்பயிற்சிக்கு முன் குருவணக்கம், சுருதி சேர்தல் என்பன கட்டுப்பாட்டுடன் கூடிய கற்றல் முன்னாயத்தம் ஆகின்றது. ஆசிரியர் முதலில் பாடிக்காட்ட பிள்ளைகள் கேட்'கின்றனர். இது காதுவழியாக கேட்டதெனும் புலத்தொழிற்பாட்டை பிள்ளைகட்கு வலுப்படுத்துகின்றது. நன்றாகக் கவனித்து கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற உள ஆயத்தம் ஏனைய கற்றல் விடயங்களுக்கும் உரிய விசையை வழங்குகின்றது.

கேட்டலுடன் கேட்டவற்றைக் கிரகித்தல் கற்றலின் அடுத்த கட்டமாகும்.

இசையுருப்படிகளின் கருத்தை அவற்றின் உரிய ஸ்தானத்தை, அசைவை, தாளத்தை, ஏற்ற இறக்கத்தினை விளங்கிக் கொண்ட பின்பே பாட முடியும். எனவே கிரத்தல் எனும் கற்றல் செயற்பாடு இசை வகுப்புக்களின் அடிப்படையாகும் ஏனைய கற்றல் செயற்பாடுகளுக்கு அடிப்படை விசைகளாகின்றன.

அடுத்து இசை வகுப்புக்களில் நினைவில் கிரகித்தல் அல்லது அறிதல் மிகவும் அடிப்படையானதாகும். பாடும் பாடலை மனனம் செய்து அவற்றை மீட்டுப்பாட வேண்டும் பாடல்களின் அடிமுறை, ஒத்திசைவு முறை என்பன போன்ற தொடர்புளைக் கண்டறிந்து இலகுவாக மீட்டுக் கொள்ள பிள்ளை கண்டு கொள்கின்றது. இவையே கற்றலின் அடிப்படையான உளத்தொழிற்பாடுகள் ஆகும். கற்றவற்றைக் கட்டுமை செய்து மீட்டுக் கொள்ளக் கூடிய பயிற்சியினை பிள்ளைகளுக்கு இசைவகுப்புக்கள் நாளாந்தம் வழங்குவதைக் காண முடியும்.

பாடல்களைப் பாடும் பொழுது கூட்டாகப் பாடுதல், தனியாகப் பாடுதல் ஆசிரியருடன் சேர்ந்து பாடுதல் என்பன தமது பாடும் ஆற்றலை மதிப்பிட உதவுகின்றது. மதப்பீட்டுப்' பண்பை வளர்த்துக் கொள்ளும் பொழுது சரியாகப் பாட முடிகின்றது. இதனால் மதிப்பிடல் எனும் உளத் தொழிற்பாட்டை விருத்தி செய்து பிள்ளைகள் ஏனைய கற்றல் நடவடிக்கைகளுக்கு வேண்டிய விசைதனை பெறுகின்றனர்.

இசை வகுப்புக்களில் கட்டுக்கோட்பான இசையுருப்படிகள் அவற்றின் பண்புகள், இராக எல்லைகள், தாள வடிவங்கள் என்பன பாகுபட்டு விளக்கப்படுகின்றன. இதனால் பிள்ளை கட்டுக்கோப்புகளையும் கட்டுபாட்டுக்களையும் இனங்காண்கின்றது. விதிகளையும், விலக்குகளையும் அறிகின்றது. இவையே கற்றலுக்கான கற்றல் விசைகளை பிள்ளைகளிடம் தோற்றுவிக்கின்றது.

இசை பயின்ற பிள்ளைகள் பாடசாலைக் காலைக் கூட்டத்தில் பாடுகின்றனர். ஆலயங்கள், வீட்டு வைபவங்கள் என்பவற்றிலும் பாடுகின்றனர். இதனால் கற்றவற்றை பிரயோகம் செய்ய வேண்டிய ஆயத்த நிலையில் பிள்ளைகள் இருக்க வேண்டியவர்கள் ஆகின்றனர். இது அவர்களின் கற்றலை மேம்படுத்துகின்றது. இப்பயிற்சியானது ஏனைய விடயங்களிலும் அவர்கட்கு ஏற்புடையதாக அவர்களின் கற்றல் விசைகளை வலுவூட்டவும் செய்கின்றன.

இசைபயின்ற பிள்ளைகள் மேடைநாடகங்கள், இசைக்கச்சேரிகள் போன்வற்றைச் செய்வதற்கும், போட்டிகளில் பங்கேற்கவும் தயாராகின்றனர். இதனால் புதிய ஆக்கங்களை உருவாக்கவும் பழகுகின்றனர். இது கண்டறிதல், புதிது புனைதல் போன்ற ஆக்க மலர்ச்சிகளுக்கு மாணவர்களை இட்டுச் செல்கின்றது. அவர்கள் புதிய கற்றல் விசைகளுடன் முன்னேறுகின்றனர்.

இதனால் இசை வகுப்புக்களில் பெறப்படும் பயிற்சியும், கற்றலும் மாணவர் ஏனைய பாடப் புலங்களிலும் கூடிய கவனம் செலுத்தவும் பாடசாலையின் நோக்கமான கற்றல் வளம் பொருந்திய மாணவரை உருவாக்கவும் பயன்படுகின்றது என்பவற்றில் ஐயமில்லை.

எனவே கல்லூரியின் கல்விக்கு இசைத்துறையானது பெரும் விசைகளை வழங்குகின்றது என்பது வெள்ளிடைமலையாகும்.

Nanotechnology

Mrs. B. Sivagnanam
Science Teacher

The concepts that seeded nanotechnology were First discussed in 1959 by renowned physicist Richard Feynman. The term " nano – Technology" was First used by nor co Taniguchi in 1974. Nano – Technology as the manipulation of matter with at least one dimension by size is naturally very broad. It as surface science, organic chemistry, molecular biology, semiconductor physics, micro fabricationets.

Nano technology may be able to create many new materials and devices with a vast range of application such as, in medicine, electronics, biomaterials and energy production. One nanometer (nm) is one billionth, or 10^{-9} of a meterTwo main approaches are used in nanotechnology. In the "built from molecular components, which assemble themselves chemically by principles of molecular recognition. In the "tog – down" approach nano – objects are constructed from larger entities with atomic – level control nano – technology is used in different applications is gibed below

- nano materials include titanium dioxide in sun screen cosmetics surface coatings, and some food products
- carbon allotropes used to produce gecko tape, silver in food packaging, clothing disinfectants, and household appliances
- zinc oxide in sunscreens and cosmetics, surface coatings, paints and out door fumitures.varnishes and cerium oxide as a fuel catalyst
- tennis ball to last longer.
- golf balls to fly straighter
- bowling balls to become more durable and have a harder surface
- trousers and socks to last longer and keep people cool in the summer.
- bandages to heal cuts faster
- cars need fewer metals and less fuel to operate in the future.
- video game consoles and personal computers may become chapter faster and contain more memory thanks to nano
- technology There are some implications an health and environment due to nano – technology. such an,
- breathing nano – particles settled in brain and lungs cause inflammation and skin aging
- consuming nano – titanium dioxide showed DNA and chromosome damage to a degree "linked to all the big killers of man, namely cancer, heart disease, neurological disease and aging.
- using nano- tubes – carbon cause Mosotho lima
- using nano particles in a paint factory developed serious lung diseases.
- using nano fibers can be as harmful for lungs as asbestos is

There fore, there are some regulations, which are implemented for preventing the environment from harmful leech of nano-technology

Books are the best friends

Miss. Niveka Subramaniam
Teacher

Knowledge is very important for all people in the world. There are a lot of source of knowledge we must read books to improve our knowledge and skills. Reading makes the man happy and books are the friends of man.

young stage is very important and joyful out of all the stages of man must practice the habit of reading books at this stage. It will improve both our language bac skills and other skill.

"Reading make the a full man" This proverb shows the importance of reading for a person constant readirng of books will develop better and standing of other people and at the same time if helps gain discipline.

Book can be stolen by the thieves but the knowledge that we gain from the books can't be stolen in anyway. Only because of this reason it is said that for a man books are invaluable treasures than other things on the earth knowledge and pleasure gained from books cannot removed from aman. There are many varieties of great Books on history language science and technology religio storigh poems, novels, dramas, etc which we should to read and which will give us not only education but also pleasure.

Auto bio graphies of great persons, religions books and poems are good guides for the students. These books make an urge to read more books Day by day appetite at reading books is increased.

Some times books are the teachers. They teach us lessons advise us and guide us in an appropriate way for the improvement of our life so we must read books as usual habit. It is one of the great responsce bilities of the growing neat generation.

Books are the most faithful friends. friends may change or leave but our books are always with us so there is on wonder a reader becomes "a book lover" but ha must not be "a book worm"



මගේ අම්මා

திருமதி கோ. இராமச்சந்திரன்
ஆசிரியர் யா/ இராமநாதன்கல்லூரி

1) මගේ අම්මාගේ නම රාණි
மகே அம்மாகே நம ராணி
என்னடைய அம்மாவின் பெயர் ராணி
2) මගේ අම්මා හරි ලස්සනයි
மகே அம்மா கறி ளஸ்ஸனய்
என்னுடைய அம்மா மிகவும் அழகானவர்
3) මගේ අම්මා මට පාඩම් කියා දෙනවා
மகே அம்மா மட்ட பாடம் கியா தெனவா
என்னுடைய அம்மா எனக்கு பாடம் சொல்லித்தருவார்
4) මගේ අම්මා මට රස ආහාර දෙනවා
மகே அம்மா மட்ட றச ஆகாற தெனவா
என்னுடைய அம்மா எனக்கு சுவையான உணவு தருவார்
5) මගේ අම්මා මට හරි ආදරෙයි
மகே அம்மா மட்ட கறி ஆதறெய்
என்னுடைய அம்மா என்னிடம் மிகவும் அன்பானவர்

මම

1) මගේ නම වාණි
மகே நம வாணி
என்னடைய பெயர் வாணி
2) මගේ වයස අවුරුදු දහයයි
மகே வயச அவுறுத்து தகயய்
என்னுடைய வயது வருடங்கள் பத்து
3) මගේ පාසල නම රාමනාදන් විදුහල
மகே பாசல நம ராமநாதன் விதுகல
என்டைய பாடசாலையின் பெயர் ராமநாதன் கல்லூரி
4) මගේ පංති ගුරුතුමාගේ නම
மகே பங்தி குறுத்துமாகே நம
என்னுடைய வகுப்பாசிரியர் பெயர்
5) මගෙ පවුලේ හයදෙනෙක් ඉන්නවා
மகே பவுலே கயதெனெக் இன்னவா
என்னுடை குடும்பத்திலே ஆறுபேர் இருக்கிறார்கள்

පළතුරු

අඹගෙඩි	- அம்பகெடி	- மாம்பழம்
මරකා	- வறக்கா	- பலாப்பழம்
රඹුටන්	- றம்புட்டான்	- றம்புட்டான்
අන්නාසි	- அன்னாசி	- அன்னாசி
ගස්ලබුගෙඩි	- கஸ்லப்புகெடி	- பப்பாப்பழம்
පෙර ගෙඩි	- பேறகெடி	- கொய்யாப்பழம்
බැල් දොඩං	- வல்தொடங்	- கொடித்தோடை
දොඩංගෙඩි	- தொடங்கெடி	- தோடம்பழம்
කෙසෙල් ගෙඩි	- கெசெல்கெடி	- வாழைப்பழம்
ඇපල්	- அபல்	- அப்பில்

2013 அக்டோபர் வாசிப்பு மாதத்தையொட்டி நூலக அபிவிருத்திக் குழுவால் நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெறுவோர் விபரம்

தரம் 1 – 2 சொல்லாக்கம்

தரம் 1A	:- 1ம் இடம்	வி. சிந்தூரி
	:- 2ம் இடம்	சு. நிலவரசன்
	:- 3ம் இடம்	பா. பிரகாஷ்
		இ. தாட்சாயினி
		ட. கென்சிகன்
தரம் 1B	:- 1ம் இடம்	ரா. ரித்தீஸ்
	:- 1ம் இடம்	த. கிஷா
	:- 3ம் இடம்	அ. கனிஸ்ரா
தரம் 2A	:- 1ம் இடம்	கோ. அக்ஷாயினி
	:- 1ம் இடம்	க. திர்ஷா
	:- 1ம் இடம்	ஷிலக்சிகா
தரம் 2B	:- 1ம் இடம்	தி. டக்ஸ்ரீபன்
	:- 2ம் இடம்	சுஜீபன்
		பியூலா
		பகலவி

தரம் 3 – 5 ஒரு சொல் இருபொருள் போட்டி

தரம் 3A	:- 1ம் இடம்	வீ. தீபிகா
	:- 2ம் இடம்	அர்ஜன்
	:- 3ம் இடம்	உ. அபிலாஷ்
தரம் 3B	:- 1ம் இடம்	நீ. மஸ்மிதா
	:- 2ம் இடம்	போ. சஜிந்தன்
		யே. டினோஜன்
தரம் 2A	:- 1ம் இடம்	கோ. அக்ஷாயினி
	:- 1ம் இடம்	க. திர்ஷா
	:- 1ம் இடம்	ஷிலக்சிகா
தரம் 4AB	:- 1ம் இடம்	த. பிரவீனா
		ச. ஜோஜஸ்செபில்டா
	:- 3ம் இடம்	பே. செமிலோன்
		சு. கபிஷன்

தரம் 5A	:- 1ம் இடம்	சி. சிவராம்	
		மு. வினுசியா	
	:- 3ம் இடம்	த. அபிதா	
தரம் 5B	:- 1ம் இடம்	வ. சுஜானி	
	:- 2ம் இடம்	கு. மதுஜா 95	
	:- 2ம் இடம்	சி. மதுசாங்கன்	

தரம் 2 – 5 பழையபத்திர்க்கை Cutting சேகர்த்தல்

1ம் இடம்	சு. பரத்ராஜ்	- 4B
2ம் இடம்	பா. தர்ஷிகா	- 4B
3ம் இடம்	க. துயன்சிகா	- 5A

தரம் 06 – 08

சிறுகதை உருவாக்கம்

1ம் இடம்	தெ. நிவேதிகா	- 8C
2ம் இடம்	ச. சலோமி	- 8A
3ம் இடம்	தி. தனுஷ்கா	- 6A

09 – 11 கட்டுரைப் போட்டி

1ம் இடம்	K. கம்சாயினி	- 9A
2ம் இடம்	G. சயன்சிகா	- 9A
3ம் இடம்	K. கனி	- 10A

தரம் 06 – 08 சித்திரம்

1ம் இடம்	ம. யதுசனா	- 8C
2ம் இடம்	பா. வனித்தா	- 8B
3ம் இடம்	மா. தர்சினி	- 6A

தரம் 09 – 11 சித்திரம்

1ம் இடம்	சி. பிரபானுஜா	- 11A
2ம் இடம்	நி. யசோதா	- 10B
3ம் இடம்	ப. சிலக்சிகா	- 10A

தரம் 12 – 13 சித்திரம்

1ம் இடம்	சோ. யுரோனிகா	- 12A
2ம் இடம்	சோ. யுரோனிக	- 10B
3ம் இடம்	இ. டெசிந்தா	- 12A

நூலகத்தை சிறந்த முறையில் பாவித்த ஆசிரியர்களுக்கான பரிசு

க. பத்மஸ்ரீ

நூலகத்தை சிறந்த முறையில் பாவித்த மாணவர்களுக்கான பரிசு

வி. டிலானி 12 வர்த்தகப்பிரிவு

தரம் 12 – 13 பொது அறிவு

1ம்	இடம்	சி. பிரயங்கா
2ம்	இடம்	வி. பிரவீணா
3ம்	இடம்	ம. கீர்த்தனா

தரம் 12 – 13 கவிதை

1ம்	இடம்	ச. பவித்திரா
1ம்	இடம்	V. வர்த்திகா
3ம்	இடம்	கா.ஹஜானிஹா

தரம் 12 – 13 பேச்சுப் போட்டி

1ம்	இடம்	இ. சர்மிளா
2ம்	இடம்	நா. துஸ்யந்தினி
3ம்	இடம்	கா. கஜனிகா

தரம் 12 – 13 நடனம்

1ம்	இடம்	கு. சுரேந்தினி
2ம்	இடம்	தி. மிதிலா
3ம்	இடம்	தே. கோமளா
		ப. பிரலக்ஷிகா

தரம் 12 – 13 சங்கீதம்

1ம்	இடம்	ஸ்ரீ. பிரியங்கா
2ம்	இடம்	ர. நிஷா
3ம்	இடம்	உ. கலைப்பிரியா
		ப. லுக்சிகா

விசேட தேவையுடைய மாணவர்கள்

கீழ்ப்பிரிவு பேச்சு

1ம்	இடம்	சி. லக்சிகா
2ம்	இடம்	ஜெ. தமிழரசி
3ம்	இடம்	வே. ஜெனுபா
		ப. லுக்சிகா

மேற்பிரிவு பேச்சு

1ம்	இடம்	நா துஷ்யந்தினி
2ம்	இடம்	ஜெ. லோகேஸ்வரி

நன்றிக்குரியவர்கள்

எமது பாடசாலை நூலகம் 1987ம் ஆண்டில் இருந்து உரிய இடத்தில் இயங்காது தற்காலிகமான இடங்களான விடுதி, இராமநாதவள்ளல் வாழ்ந்த இல்லம் போன்றவற்றில் பல வருடங்களாக இயங்கி வந்தது. பின்பு 2011ம் ஆண்டு அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் எடுத்த முயற்சியினால் கல்லூரியின் பழைய இடத்திற்கு நூலகம் செல்வதற்கு திரு.வ.சுவாமிநாதன் (தலைவர் கொழும்பு பொன்னம்பலவானேசுவரர் ஆலயம்) அவர்களால் வழங்கப்பட்ட நிதியில் நூலகம் புணரமைப்பு வேலைகள் செய்யப்பட்டது.

2013 காலப்பகுதியில் அதிபர் திருமதி.கமலராணி கிருஷ்ணபிள்ளையின் முயற்சியில் திரு.ப.சிற்றம்பலம் (தலைவர் பரமேஸ்வரா நம்பிக்கை நிதியம்) அவர்களிடம் இருந்து அலுமாரிகள், தளபாடங்கள் என்பனவற்றிற்கு வர்ணபூச்சிற்கான நிதியும் பெறப்பட்டு நூலகம் சீராக்கப்பட்டது. அத்துடன் லண்டனில் உள்ள அபிமானியான இணுவிலைச் சேர்ந்த சி.செந்தூர்ச்செல்வன் ஒரு லட்சம் பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்ததுடன் தாயாரின் ஞாபகமாக சிறுவர்களின் பாவனைக்கென CD பிளேயர் ஒன்றினையும் அன்பளிப்பு செய்தார். அதே போல இணுவிலைச் சேர்ந்த கா.வைத்தீஸ்வரன் அவர்களும் துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறுதிருமுருகன் அவர்களும் பெறுமதியான நூல்களை இவ்வாண்டில் நூலகத்திற்கு அன்பளிப்பு செய்தார்கள்.

அத்துடன் இராமநாதன் கல்லூரி நூற்றாண்டை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக பிரதம நூலகரான திருமதி.சி.ஸ்ரீகாந்தலக்சுமி 100 புத்தகங்களை எமது நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இந்த நூலின் முதல் பிரதியினை மனமுவந்து பெற்றுக்கொண்ட திரு.T.தியாகராஜா (Tilko Jaffna city Hotel) அவர்களுக்கும் நாம் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். கௌரவப்பிரதிகளை பெற்றுக்கொண்ட பா.கஜதீபன், தி.பிரகாஷ் என்பவர்களுக்கும், சிறப்புப்பிரதிகளை பெற்றுக்கொண்டவர்களுக்கும் இந்த நூலை சிறப்பாக அச்சிட்டுத்தந்த "லது டிஜிற்றல்" பிறிண்டேஸ்க்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளோம். நூலகத்தின் வளர்ச்சிக்காக பாடுபட்ட இவர்களிற்கு நாம் என்னென்றும் நன்றியுடையவர்களே. தற்போது நூலகம் பழைய இடத்தில் சிறப்புற இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

நன்றி

யாழ். நகரில் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை

மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்

L

கிருபா

லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சி பாடசாலை

யாழ் மண்ணில் முதல் முறையாக
மாதுளாசிரிய வனிதா மகளிரணியை
சிறந்த சாரதிப்பயிற்சியாளராக்கி
விசேட பிரிவினர் கற்கை நடைபெறும்
ஆசிரியர். இ.ம.செல்வராசா
077 4604575

- வாகன பயிற்சிகள் நிலை நிறுவனங்களில் இருந்து ஆரம்பிக்கப்படும்
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்
- எழுத்துப்பரீட்சையில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்
- எழுத்துப்பரீட்சையில் சித்தியடைய விசேட தீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்
- தூரமிற்றுக்கிழமைகளில் மருத்துவ (மழுக்கல்) முகாமும் எண்பவற்றை பெற்றுக்கொள்ளல் ஒழுங்குகள் செய்து தரப்படும்
- அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுநர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்
- தவணை முறைக் கட்டணங்கள்
- வான், கார், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், ஹாண்ட் மாஸ்டர், ரக்டர் பஸ் என்பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதி பத்திரம்
- ஒரேயடியாக சித்தியடையத்தவறின் மீதமுள்ள பயிற்சி இலவசமாக வழங்கப்படும்

வரைக சாரதி அனுமதிப்பத்திரம் பெற
அரசாங்கத்துடன் தனியாக இணைந்து பயிற்சி வழங்கும்
(AD)

Kiruba Learners

(Govt.Approved A.Grade Driving Training School)

தலைமைக் காரியாலயம்
22ஆ, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353
021 222 3200

சாவகச்சேரி - 021 492 3202, 021 227 0700
நெல்லியடி - 021 300 6650, 071 454 6957
கனகாகம் - 021 224 2022, 071 454 6959
கிளிநொச்சி - 021 228 6505, 071 454 6955
வவுனியா - 021 320 195, 071 454 6955

இப்பொழுது
பருத்தித்துறை
01 ஆம் கட்டைச் சந்தியில்
021 492 3201
071 4546958

HNB
என்றும் உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
ஹற்றன் நஷனல் வங்கி
சுன்னாகம் கிளை
அடகு சேவை
சலிக்கிழமைகளிலும்
அதியுயர் கடன்
பரிசுக் குவியல்
பகுதி மீள் செலுத்தும் வசதி
தூர்த சேவை
Running Facility
பத்தும் விமண
மூவுலகையும் கவர்ந்திடும்
HNB PATHUM VIMANA 2013
10,000/-
ரூபாவை சேமித்து
அதிர்ஷ்டம் வெல்லுங்கள்
சிறுவர்களிற்கான சிறப்பு
சேமிப்புத் திட்டம் "சிங்கிதி"
மழலைகளின் எதிர்காலத் தேவைகளுக்கு அடித்தளமிடுவதுடன் கவர்ச்சியான பரிசில்களையும் வெல்லுங்கள்
உலகின் எந்தப்பகுதியிலிருந்தும்
MoneyGram
சேவை மூலம்
அடையாள அட்டை இலக்கத்திற்கு உடனடியாக பணம் அனுப்பமுடியும்
வெற்றிப் பரிசில்களும் வெல்லுங்கள்
நிலையான வைப்புகளுக்கு அதி கூடிய
வட்டி விதம்
தொடர்புகளுக்கு
0212240909-5
சிரேஷ்ட பிரஜைகள்
HNB Your Partner in Progress

ஜீவாகாரம்

அனைவருக்கும் உகந்த
சுவைமிக்க போசாக்கு உணவு

குழந்தைகள் முதல்
முதியோர்வரை பாவிக்க
உகந்த சத்துணவு

அண்ணா உற்பத்திகள்

விநியோகிஸ்தர்கள்:

அண்ணா தொழிலகம்

இணுவில்.

T.P: 021 700800

ரூபா. 84,000,000.00
பரிசு வழங்கும்
BOC
MEGA
SEASON
2
வாசி
BOC என்றாலே வாசி தான்
ரூபா.10,000/- அல்லது அதற்கு மேல்
வைப்பு செய்து வெற்றி வாய்ப்பை அதிகமாக்குங்கள்
வருடம் முழுவதும் சீட்டிழுப்புக்கள் 3
நாடளாவிய ரீதியில்
வெற்றியாளர்கள் பலர்
அழைப்பு நிலையம் : 011 220 4444
இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

லது டிசிற்றல் - இணுவில்